# முன்னணி

***இலக்கம் : 01***



உள் சுற்றுப் பத்திரிகை

**புதிய ஜனநாயக மக்கள் முன்னணி**

கடந்த கால மக்கள் விரோத அரசியல் சூழலை மாற்றி அமைக்க

# உள்ளே ........


01.சுயநிர்ணயம் என்பது அரசியல் சந்தர்ப்பவாதத்தை நியாயப்படுத்துவதற்கான மூடுமந்திரக் கோசமல்ல ---------------------- 03

02. மூன்றாவது அணியும், புரட்சிகர சக்திகளும் ------------------------- 03

03.சிவசேகரம் போன்ற அறிவுசார் பிரமுகர்களின˙ ”மார்க்சிய” விமர்சனங்கள் பற்றி.. ------------------------------------------------------------------ 09

04.“சிங்களவன் உடன் எப்படி நாங்கள் சேர்ந்து வாழ்வது?” ------- 20

05.பேரினவாதத்தை எதிர்கொள்வதாக இருந்தால் தமிழ்ப் பாசிச சிந்தனை முறை தகர்க்கப்பட வேண்டும் -------------------------- 23

06. மக்களைப் பிளவுபடுத்தும் இனவாத அரசியல் -------------------- 24

07.அரசியல் வேலைத்திட்டமின்றி பொது வேலைத்திட்டம் சாத்தியமில்லை ------------------------------------------------------------------------ 26

08.தனி மனித சிந்தனையும் “சமூகமும்!” -------------------------------------- 29

09.எம்முன் உள்ள வேலைகளும் கடமைகளும் --------------------------- 31

10.நம்மோடு இருக்கும் எதிரிகள் யார்...? நண்பர்கள் யார்...?------- 33

11.கற்பு கருத்துச் சுதந்திரம்: மாயையும் உண்மையும் ---------------- 35

12.பிரபாகரனை பலிகொடுத்த அரசியல் எது?----------------------------- 46

13.அரசியல் ரீதியாக தோற்ற புலிகள் இராணுவ ரீதியாகவும் தோற்கின்றனரே ஏன்? ----------------------------------------------------------------- 49

# சுயநிர்ணயம் என்பது அரசியல் சந்தர்ப்பவாதத்தை நியாயப்படுத்துவதற்கான மூடுமந்திரக் கோசமல்ல

வலதுசாரியம் மக்களைச் சுரண்டவும், மக்கள் மேலான சமூக ஒடுக்குமுறைகளை பாதுகாக்கவும், இனங்களை ஒடுக்கி அவர்களுக்கு இடையில் முரண்பாட்டை முன்தள்ளுகின்றது. எழும் போராட்டத்தை திசைதிருப்ப, சுயநிர்ணயத்தை தமக்கு ஏற்ப திரித்துப் பயன்படுத்துகின்றனர்.
இது

1. வலதுசாரி சிறுபான்மை தமிழ் குறுந்தேசியம், பிரிவினையை விடுதலை என்கின்றது.

2. வலதுசாரி பெரும்பான்மை சிங்கள பெருந்தேசியம், ஒடுக்கும் ஐக்கியத்தை தேசியம் என்கின்றது.

இவர்கள் இதைத்தான் சுயநிர்ணயம் என்கின்றனர்.

இப்படியிருக்க இலங்கையில் இடதுசாரிய அரசியல் அடிப்படைகள் ஒருபுறம் ஒடுக்கப்பட்டு அழிக்கப்பட்ட நிலையிலும், மறுபக்கம் அரசியல் ரீதியாக சீரழிக்கப்பட்ட நிலையிலும் காணப்படுகின்றது. வர்க்க அரசியலும், வர்க்கப் போராட்டமும் பொது அரசியல் தளத்தில் கைவிடப்பட்டுள்ளது. மாறாக இடதுசாரியம் வலதுசாரிய இவ்விரு அடிப்படைக்குள்ளும், முற்போக்கைக் காட்டி அதை முன்னெடுக்கும் போக்கே இன்று இடதுசாரியமாகின்றது.

இன்று வலதல்லாத இடதுசாரிய அரசியல் என்பது, வலதுசாரியத்தின் வாலாக நீடித்தலே ஒரு அரசியல் போக்காக வளர்ச்சியுறுகின்றது. இந்த வகையில் சுயநிர்ணயத்தை திரிக்கின்றனர். இந்த வகையில் நாம் இரண்டு இடதுசாரிய உதாரணங்களை எடுப்போம்.

1. புதிய ஜனநாயக மார்க்சிய லெனினிய கட்சியைச் சேர்ந்த தம்பையா, தினகரன் பத்திரிகையில் சுயநிர்ணயம் பற்றி கூறியதைப் பார்ப்போம். ".. ஐக்கியப்பட்ட இலங்கை என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை. ஐக்கியப்பட்ட நாட்டுக்குள் சுயநிர்ணய உரிமையை உறுதிசெய்ய முடியும். சுயநிர்ணய உரிமை என்பதை பிரிவினை என அர்த்தப்படுத்திக்கொள்ள முடியாது" என்கின்றார். மார்க்சிய லெனியத்தை தம் கட்சியின் பெயருடன் ஒட்டியுள்ள இக் கட்சி, சுயநிர்ணயத்தை இப்படிக் கூறுவது அவர்களின் மொத்த அரசியலையும் கேள்விக்கிடமின்றி

அம்பலமாக்குகின்றது.

2. அண்மையில் புதியதிசைகள் குழுவுடன் நான் உள்ளிட்ட எமது தோழர்கள் நடத்திய ஒரு கலந்துரையாடலின் போது வெளிபட்டது. சுயநிர்ணயம் என்பது, பிரிவினையை அடிப்படையாக கொண்டது என்றனர். அதற்கு பேரினவாதத்தின் நீண்ட தொடர்ச்சியான அதன் ஒடுக்குமுறையை காட்டி அதை துணைக்கழைத்தனர். எமது சுயநிர்ணய நிலைப்பாடு, ஐக்கியத்தை முன்வைப்பதாக கூறினர். இதைத்தான் ம.க.இ.கவும் முன்வைப்பதாக வேறு கூறினர்.

எமது நிலைப்பாடு இதில் இருந்து முற்றிலும் மாறுபட்டது. குறிப்பாக புதிய ஜனநாயக மார்க்சிய லெனினிய கட்சி மேல் சொன்னது போல் அல்ல.

இவர்கள் சுயநிர்ணயத்தை தங்கள் இருப்புசார் வர்க்க நிலையில் நின்று திரிக்கின்றனர். அதை சந்தர்ப்பவாத வலதுசாரிய நிலைக்கு ஏற்பப் புரட்டுகின்றனர். இங்கு அவர்களின் அரசியல் நிலையைத்தான் நான் குறிப்பிடுகின்றேன்.

ம.க.இ.க., முதல் யாராக இருந்தாலும், சுயநிர்ணயம் பற்றிய நிலைப்பாடு உலகம் தளுவியது. அதை யாரும் திரிக்க முடியாது. இடதுசாரி பேசும் பலர் சுயநிர்ணயத்ததை ஏற்றுக்கொண்டபடி தான், பிரிவினை, ஐக்கியம் என்று புரட்டுகின்றனர்.

சுயநிர்ணயம் என்பது பிரிவினையையோ, ஐக்கியத்தையோ கோரி முன்வைப்பதில்லை. மாறாக ஒடுக்கப்பட்ட வர்க்கங்களின் ஐக்கியத்தை அது கோருகின்றது. அதற்காக மட்டும்தான், சுயநிர்ணயத்தை மார்க்சியம் முன்வைக்கின்றது. வேறு அரசியல் நோக்கம் எதுவும் மார்க்சியத்துக்கு கிடையாது. தெளிவாக இது ஒடுக்கப்பட்ட சிறுபான்மை இன மக்களுக்கு எதிரான, ஒடுக்கும் ஐக்கியத்தைக் கோரவில்லை. ஒடுக்கப்பட்ட மக்களின் ஐக்கியத்தைக் கோருகின்றது.

சுயநிர்ணயம் என்பது ஒடுக்கும் பெரும்பான்மையின் ஐக்கியத்துக்கும், ஒடுக்குமுறையை எதிர்க்கும் சிறுபான்மையின் பிளவுவாதத்துக்கும் எதிரானது. பெரும்பான்மை ஐக்கியத்தை முன்வைத்து சிறுபான்மையை ஒடுக்கும் போது, பெரும்பான்மை மக்களையும் ஓடுக்கியபடிதான் அதைச் செய்கின்றது. சிறுபான்மை பிரிவினையை முன்வைத்து பெரும்பான்மையின் ஒடுக்குமுறையை எதிர்க்கும் போது, சிறுபான்மை மக்களை ஒடுக்கியபடிதான் போராடுவதாக கூறுகின்றது. இப்படி தம் இன மக்களை ஒடுக்க, ஐக்கியத்தையும், பிரிவினையையும் முன்வைக்கின்றனர். இதை அனைத்து ஒடுக்கப்பட்ட மக்களும் எதிர்க்கின்றனர். அவர்கள் தான் இனவொடுக்குமுறைக்கு எதிராக, சுயநிர்ணயத்தை முன்வைக்கின்றனர். பிரிவினை, ஐக்கியம் என்ற கூறிக் கொண்டு, தம்மை ஒடுக்கியபடி மற்றைய இன மக்களை ஒடுக்குவதை மறுத்து சுயநிர்ணயத்தை முன்னிறுத்துகின்றனர். ஒடுக்கப்பட்ட இரண்டு

இன மக்கள் மத்தியிலான ஐக்கியம் மூலம், இரண்டு இன ஒடுக்கும் வர்க்கத்தையும் எதிர்த்துப் போராட சுயநிர்ணயம் கோருகின்றது. இதற்கு மாறாக ஒடுக்கப்பட்ட இரண்டு இன மக்களின் ஐக்கியத்தை குழிபறிக்க, இரண்டு முனைகளில் சுயநிர்ணயம் மறுக்கப்படுகின்றது.

1. ஒடுக்கும் ஐக்கியம் என்ற பிளவுவாதம்.

2. ஒடுக்குமுறைக்கு எதிரான பிரிவினை என்ற பிளவுவாதம்.

இரண்டும் ஒடுக்கப்பட்ட மக்களை பிளக்கின்றது. ஐக்கியத்தை குழிபறிக்கின்றது. இதற்கு எதிரான போராட்டத்தை தான் சுயநிர்ணயம் முன்வைக்கின்றது. இதை பிரிவினை, ஐக்கியம் என்று, குறுகிய எல்லையில் சமூகத்தை பிளக்கும் ஆளும் சுரண்டு வர்க்கங்கள் மறுக்கின்றது.

இங்கு ஒடுக்கும் ஐக்கியம் கூட பிளவுவாதத்தை அடிப்படையாக கொண்டது. அதுதான் பிரிவினைக்கான பிளவுவாதத்தை விதைக்கின்றது. மக்களை வர்க்கம் கடந்து பிளக்கும் கோட்பாடு, எங்கும் எப்பொழுதும் ஆளும் வர்க்கத்தின் கோட்பாடாகும்.

1. அது ஒடுக்குகின்றது.

2. ஒடுக்குமுறைக்கு எதிராக போராடுவதாக காட்டுகின்றது.

ஆனால் எப்போதும் மக்களை பிளந்து வைத்திருக்கின்றது.

சுயநிர்ணயம் என்பது ஒடுக்கப்பட்ட மக்களின் ஆன்மா. தம் மீதான அனைத்து ஒடுக்கு முறைக்கும் எதிரான அரசியல் உள்ளடக்கத்தை அது அடிப்படையாக கொண்டது. மற்றைய இன மக்களை தனக்கு எதிராக நிறுத்துவதை இது மறுக்கின்றது. மற்றைய இன மக்களுடன் ஐக்கியத்தை அது கோருகின்றது. பிரிவினையையோ, ஐக்கியத்தின் பெயரிலான பிளவையோ அது கோருவது கிடையாது. ஆளும் வர்க்கம் ஒடுக்கும் ஐக்கியத்தையும், ஆளும் வர்க்கத்தின் ஒடுக்கப்பட்ட பிரிவினையையும் அது எதிர்க்கின்றது. மக்களை பிளப்பதையும், பிளந்து காட்டுவதையும் சுயநிர்ணயம் எதிர்க்கின்றது.
இதுதான் சுயநிர்ணயம். இந்த வகையில் அரசியல் கடமைகள், கோரிக்கைகள் என அனைத்தும், ஆளும் வர்க்கத்தின் நோக்கில் இருந்து முற்றிலும் எதிர்மறையானது. மாறாக முரணற்ற ஜனநாயக கோரிக்கையை மட்டும் ஆதரிக்கின்றது. அதாவது முரணற்ற ஜனநாயக கோரிக்கை என்பது, எந்த மக்களையும் ஒடுக்காத மக்கள் சார்ந்த கோரிக்கையைத்தான் ஆதரிக்கின்றது. மக்களை இனம் மதம் சாதி பால் என்று பிளக்கும் அனைத்தையும் எதிர்க்கின்றது. வர்க்க ரீதியாக மக்களை ஒன்றிணையக் கோருகின்றது. இதுதான் சுயநிர்ணயம்.
பி.இரயாகரன்
17.08.2010

## மூன்றாவது அணியும் புரட்சிகர சக்திகளும்

மூன்றாவது அணியும், புரட்சிகர சக்திகளும் எம்மத்தியில் உள்ளனரா? அப்படி யாரும் அரசியல் ரீதியாக எம் மத்தியில் கிடையாது. மூன்றாவது அணியும், புரட்சிகர சக்திகளும் என்பது, மக்களுக்காக வைக்கப்படும் புரட்சிகர கருத்துகளின் அடிப்படையில் தான், அரசியல் ரீதியாக அதை வரையறுக்க முடியும். அரசியல் அல்லாத தளத்தில், இது வெறும் நபர்கள் அல்ல.

எமது அரசியல் கருத்துடன் நிற்கின்ற பல்வேறு தரப்பினர் மத்தியில், திடீரென ஒரு குழப்பத்தை சிறிரங்கன் எழுதிய கட்டுரை (புலம்பெயர் குழுக்களின் அரசியல் - மூன்றாவது அணியும், மூக்கணாங் கயிறும்.) ஒன்று ஏற்படுத்தியுள்ளது. பலர் இது எம்மைக் குறித்த ஒரு விமர்சனமாக, சுட்டிக் காட்டினர். ஏனென்றால் மூன்றாவது அணியும்இ புரட்சிகர சக்திகளும் எங்களுக்கு வெளியில் இல்லை என்ற அடிப்படையில்இ இதை எமக்குச் சுட்டிக்காட்டினர்.

அரசியல் ரீதியாக எம் வாசகர்கள் சூழலைப்புரிந்து கொள்வதனால், இதை சுட்டிக் காட்டியுள்ளனர். அந்த வகையில் இதை நாம் தெளிவுபடுத்த வேண்டியுள்ளது.

எம்மை குறித்த அரசியல் ரீதியான எந்த விமர்சனமும், எப்போதும் ஆரோக்கியமானது தான். இதை நாம் வரவேற்கும் அதேநேரம், சிறீரங்கன் எழுதியது எம்மைக் குறித்த விமர்சனமல்ல என்பதை, எம் நேரடி உரையாடலில் சிறிரங்கன் தெளிவுபடுத்தியுள்ளார். அப்படியாயின் இது யாரைக் குறித்த விமர்சனம்? இந்தக் கேள்வியையே நாமும் அவரிடம் எழுப்பினோம்.

புலி, புலியெதிர்ப்பு அல்லாத தளத்தில் உள்ள எதிர்ப்புரட்சி சக்திகள் மேலான ஒருதொடர் விமர்சனத்தின்இ ஒரு அங்கம் தான் இது என்றார். அவர் எம்மிலிருந்து வேறுவிதமாக அவர்களையும், சமூகத்தையும் பார்க்கவில்லை என்பதை இங்கே நாம் குறித்துக்கொள்ள வேண்டும்.

இது எம் மீதான விமர்சனமல்ல என்ற வகையிலும், இதில் ஏற்பட்ட குழப்பத்தை அரசியல் ரீதியாக தெளிவாக்குவது அவசியமாகின்றது. புலி மற்றும் புலியல்லாத தளத்தில் உள்ளவர்களை, மூன்றாவது அணியாக, புரட்சிகர சக்தியாக எம்முடன் பொதுமைப்படுத்தி சிறிரங்கன் வரையறுத்தது தவறானது. அப்படி அவர்களை அரசியல் ரீதியாக அவர் கருதாவிட்டாலும், பொதுப்படையாக ஒன்றுக்குள் வகைப்படுத்தியதே இதில் உள்ள அரசியல் தவறாகும். எம்மை அரசியல் ரீதியாக வேறுபடுத்தாத பொதுமைப்படுத்தல், அவர்களை தவறான இடத்தில் வைத்து அடையாளப்படுத்துதல், அரசியல் ரீதியாக தவறாக வழிகாட்டும்.

மூன்றாவது அணியும், புரட்சிகர சக்திகளும் எமக்கு (சிறிரங்கன் உள்ளிட்ட எமக்கு) வெளியில் எவரும் அரசியல் ரீதியாக கிடையாது. இன்றைய எமது அரசியல் நிலைக்கு, நாம் வந்தடைந்த போராட்டத்தின் போது, மூன்றாவது அணியும், புரட்சிகர சக்திகளும் என்று தம்மை அடையாளப்படுத்தக் கூடிய வகையில் அரசியல்

தளத்தில் வேறு யாரும் எமக்கு சமாந்தரமாக போராடியிருக்கவில்லை. பலர் இடையில் நின்றுவிட்டனர். இந்த எதார்த்தம் மிக முக்கிமான அரசியல் வரையறையையும்இ அடிப்படையையும் எமக்கு வழங்குகின்றது.

மூன்றாவது அணியும், புரட்சிகர சக்திகளும் கொண்டிருக்கக் கூடிய விரிந்த ஒரு முன்னணிக்குரிய அரசியல் என்பது, மார்க்சியம் முதல் முரணற்ற முதலாளித்துவ ஜனநாயகம் வரை அடங்கும். எமது இந்த இணையத் தளமும், இந்த அரசியல் வரையறையிலான எல்லைக்குள், மாறுபட்ட கருத்துக்களுக்கான சுதந்திரத்தை அனுமதிக்கின்றது.

இங்கு மூன்றாவது அணியும், புரட்சிகர சக்திகளும் யார் என்ற அரசியல் குழப்பத்தை, எந்த அரசியல் வரையறை வழங்குகின்றது? புலியை மையப்படுத்திய வரையறைதான், புலி மற்றும் புலியெதிர்ப்பு அணியல்லாதவர்கள் யார் என்பதை வரையறுக்க முடியாத, அரசியல் குழப்பத்துக்கு இட்டுச் செல்கின்றது. புலியை மையப்படுத்திய வரையறை என்பது, இரண்டு தசாப்தங்களாக, புலியல்லாத அனைத்தையும் தீர்மானிக்கும் ஒரு கருதுகோளாக எம்முன் இருந்துள்ளது. இதுதான் புலியல்லாத தளத்தின் எதிர்ப்புரட்சி அரசியல் தளத்தை உருவாக்கியது. அது இன்று இலங்கை அரசுக்கு சேவை செய்கின்றது.

இரண்டாவது புலியை மையப்படுத்திய அளவுகோல், கோட்பாடல்லாத இருப்பையும், அமைப்பு வடிவமல்லாத இருப்பையும் நியாயப்படுத்துகின்றது. இதை முற்போக்காக, புரட்சிகரமான போக்காக வரையறுத்த கருதுகோள், இன்னமும் செல்வாக்கு வகிக்கின்றது. இந்த வரையறையிலான சிந்தனை முறையும், இதற்குட்படும் அனைத்தையும் மறுக்கும் வடிவம், ஒரு இருப்பு சார்ந்த விமர்சனம் கோட்பாடாகியது.

புலி இருப்பு எப்படி புலியெதிர்பு அரசியலைத் தக்கவைக்கின்றதோ, அதுபோல் கோட்பாடும் அமைப்புமில்லாத இருப்பை தக்கவைக்க, அனைத்தையும் மறுப்பது அரசியலாகின்றது.

இதற்கு ஒரு அரசியல் வரலாற்று இயங்கியல் தொடர்ச்சியை மறுப்பது, இன்று இயங்கியல் மறுப்பாகி வருகின்றது. கடந்ததை மறுப்பது, அதில் இருந்து பார்க்க மறுப்பது, இருப்பு சார்ந்த எதிர்ப்புரட்சியை தக்கவைக்கும் அரசியல் விமர்சன முறையாகின்றது. இந்த இடத்தில் சுவிஸ் ரவி சரியாக சுட்டிகாட்டிய "80 களின் நடுப்பகுதியிலிருந்து ஜனநாயக மறுப்புகளுக்கு எதிராக கடுமையாக புகலிட சஞ்சிகைகள் போராடிப் பெற்ற ..." என்ற கட்டுரையில் "80 களின் நடுப்பகுதியிலிருந்து ஜனநாயக மறுப்புகளுக்கு எதிராக கடுமையாக புகலிட சஞ்சிகைகள் போராடிப் பெற்ற பெறுபேறுகளை தம் போன்ற புலியெதிர்ப்பாளர்களின் வரலாற்றிலிருந்து தொடங்கப்பட்டதாய் தேனீ ரிபிசி மட்டுமல்ல தேசம் இணையத்தளமும் தான் படம் காட்டின, வரலாற்றை அறுத்தெடுத்துக் காட்டின." இப்படி எதிர்ப்புரட்சி அரசியல் தான், புலி மற்றும் புலியெதிர்ப்பு தளத்தில் தம்மை

நிலைநிறுத்த முனைகின்றது. அவர்கள் தொடர்ச்சியான அரசியல் இயங்கிலை மறுத்து, இயக்க மறுப்பியலை அடிப்படையாக கொண்டு, எதிர்ப்புரட்சிக்கான அடித்தளத்தை இடமுனைகின்றனர்.

இந்த அடிப்படையில் மூன்றாவது அணியையும் புரட்சிகர சக்திகளையும் சிறிரங்கன் இனம் காட்டாது, அனைத்தையும் பொதுமைப்படுத்தியது என்பது தவறானது. ஒரு அரசியல் நீட்சியை உள்வாங்காததும், மாற்றங்களை உள்வாங்காததுமான ஒரு அரசியல் எதிர்வினையாகின்றது. (இங்கு சிறிரங்கனைப் புரிந்துகொள்ள ஒரு குறிப்பு : சிறிரங்கன் உணர்ச்சிக்கும் உணர்வுக்கும் ஆளாகும் கணங்களில், ஆய்ந்து கொள்ளும் இயல்பை இழந்துவிடுவது அடிக்கடி நிகழ்கின்றது. இதனால் அந்தக் கண உணர்வுகள் மேலோங்க, அவரின் கடைசி உரையாடல் கூட கருத்துகளை தீர்மானிக்கின்றது. உணர்ச்சிக்கும் உணர்வுக்கும் உள்ளாகும் போது, இடைவெளியெடுத்து எழுதுவதை அரசியல் ரீதியாக வளர்த்துக் கொள்ளக் கோருகின்றோம்.)

இங்கு புலி மற்றும் புலியல்லாதவர்கள் யார்? அவர்களின் அரசியல் என்ன? இதை சரியாக மதிப்பிடாத அளவுகோல்கள், எம்மை தவறாக வழிநடத்தும்.

புலியின் பாசிசத்தாலும், புலியின் ஜனநாயக மீறலையும், அளவுகோலாகக் கொண்ட புலியல்லாத பொது அரசியல் பார்வையே, அனைவரையும் அருகில் நிறுத்திவைத்தது. இடதுசாரி முதல் வலதுசாரி வரை ஒரே அணியாக பார்ப்பது, உறவாடுவது, விவாதிப்பது என்று, ஒரு அரசியல் விபச்சாரமே நடந்தது. சூழல் அதற்குரிய ஒரு அடித்தளத்ததை இட்டது.

ஆனால் இவர்களின் அரசியல் பின்னணியும், கோட்பாடுகளும், இவர்கள் யார் என்பதை தெளிவாக்கியுள்ளது. இந்தியா இலங்கை சார்புக் குழுக்களுடன் ஒன்றாகஇ ஒரே மேடையில் இவர்களுடன் உள்ளே இருக்க முடிந்தது. ஏகாதிபத்தியம் முதல் இந்தியா இலங்கை சார்புக் குழுக்களுடன் உறவாடவும், அரசியல் உறவுகளை கொண்டிருக்கவும் கூட முடிந்தது. இது இவர்களின் வர்க்க அரசியலையும், மக்கள் விரோதத்தன்மையையும் எடுத்துக் காட்டுகின்றது. புலியை முன்னிறுத்திய அளவுகோல், இருப்பைத் தக்க வைக்கும் அளவுகோல், இவர்களின் எதிர்ப்புரட்சி அரசியலின் ஒரு இருப்பிடமாக உள்ளது.

இவர்கள் மூன்றாவது அணியாக புரட்சிகர சக்தியாகவும் வரமுடியாதவர்கள். அந்தளவுக்கு கடந்த காலத்தை சுயவிமர்சனம் செய்யும், எந்த அரசியல் பண்புமற்றவர்கள். மாறாக சந்தர்ப்பவாதம் மூலம் தம்மை மூடிமறைத்துஇ வேசம் போடும் எதிர்ப்புரட்சியாளர்கள்.

பி.இரயாகரன்
15.03.2009

## சிவசேகரம் போன்ற அறிவுசார் பிரமுகர்களின "மார்க்சிய" விமர்சனங்கள் பற்றி..

அறிவுசார் "மார்க்சிய" விமர்சனங்கள் சமூகத்தை மாற்றுவது கிடையாது. அது மாற்றத்தைக் தன்னளவில் கூட கோருவதில்லை. சமூகமாற்றத்தை முன்வைத்து முன்னெடுக்கும் மார்க்சிய விமர்சனங்கள் தான், நடைமுறையில் வர்க்கப் போராட்டமாக மாறி கம்யூனிஸமாக மாறுகின்றது. இந்த இடைவெளியை புரிந்து கொள்ளாத நிலையில், புரிந்துகொள்ள முடியாத வண்ணம், அதை அறிவுசார் புலமை மூலம் இலங்கையிலும் புலத்திலும் புரட்டுகின்றனர். இந்த புரட்டுக்கு எதிராக நாங்கள் பாரிய தடையாக இருக்கின்றோம் என்பதை, அவர்களின் எதிர்வினை காட்டுகின்றது.

அறிவுசார் பிரமுகர்களின் விமர்சனங்கள், அதுவும் "மார்க்சியம்" சார்ந்த விமர்சனங்கள், கட்சி அல்லாத கட்சி செயற்பாடல்லாத தளத்தில் வைக்கப்படுகின்றது. இது வர்க்கப் போராட்டத்தை முன்வைத்து செயற்படுவது கிடையாது. இதனால் இவை எதார்த்தத்தில் பச்சோந்தித் தனத்தையும், எதார்த்தம் கடந்த நிலையில் திடீர் விமர்சனங்களாக பெரும்பாலும் வெளிவருகின்றது.

இன்று இலங்கையில் வர்க்கக் கட்சி, வர்க்க நடைமுறையுடன் இல்லாத நிலை காணப்படுகின்றது. இந்த நிலையில் வர்க்க நடைமுறையுடன் அதைக் கோராத விமர்சனங்கள், தொடர்ந்து தன்னை இந்த நிலையில் தக்கவைக்க முனைகின்றது. மார்க்சியம் செயலுக்குரியதல்ல, அறிவு சார்ந்த விமர்சனத்துக்குரியதாக அதை மட்டுப்படுத்துகின்றனர். இந்த எல்லையில் தான், தங்கள் இருப்புக்கு ஏற்ற "மார்க்சியத்தை" முன்வைத்து வர்க்கப் போராட்டத்தையும் மறுதலிக்கின்றனர்.

இந்த வகையில் வர்க்கக் கட்சி நடைமுறையை மறுப்பதுதான், அறிவுத்துறையின் அரசியல் எல்லையாக இருக்கின்றது. கட்சி இல்லாத எந்த நிலையிலும், ஆளும் வர்க்கத்துக்கு எந்தக் கவலையும் கிடையாது. இதைத்தான் "மார்க்சிய" பிரமுகர்கள் செய்கின்றனர். நாம் இதை மறுப்பதாலும், இதை அம்பலப்படுத்துவதாலும், எமக்கு எதிராக மார்க்சிய அறிவுத்துறை கூச்சல் போடுகின்றது.

இதன் மூலம் செயலற்றதும், செயலுக்குரியதும் என எதுவுமில்லை என்ற மயக்கத்தை உருவாக்கி, வர்க்க அரசியலுக்குரிய நடைமுறையை அரசியல் நீக்கம் செய்கின்றனர். செயலுக்குரியதை "கொமிசார்" தனம் என்று கொச்சைப்படுத்துகின்றனர். இந்த விடையம் மக்களை அணிதிரட்டும் கட்சி இல்லாத சூழலில் அரங்கேறுகின்றது. செயலற்றதும் செயலுக்குரியதும், இன்று விமர்சன அரசியல் எல்லைக்குள் இருக்கின்றது. இதைப் பயன்படுத்தி செயலற்ற அறிவுசார் விமர்சனம், செயலுக்குரியதானதாக வேஷத்தைப் போடுகின்றது. இன்று மார்க்சியத்தை அடிப்படையாக கொண்ட அரசியல் தளத்தில், இது

காணப்படுகின்றது. இதுவே அரசியல் முரண்பாடாக வெடிக்கின்றது.

குறிப்பாக இலங்கையில் புலிப் பாசிசமும் அரச பாசிசமும் அக்கம்பக்கமாக இயங்கிய போதும் சரி, இன்று அரச பாசிசம் புலிப்பாசிசத்தையும் தனதாக உள்வாங்கி இருக்கின்ற நிலையிலும் சரி, சமூகம் சார்ந்த மக்கள் அரசியல் எந்த வகையில் நகர்ந்து இருக்க வேண்டும்? கடந்த 30, 40 வருடத்தில், நாம் எந்த வகையான அரசியலை முன்னெடுத்து இருக்கவேண்டும்? இது பற்றி அக்காலத்தில் செயலாற்றியவர்களின் அரசியல் நிலைப்பாடு என்னவாக இருந்தது? இதுபற்றிய அரசியல் விமர்சனங்கள் தான் என்ன?

அறிவுசார் விமர்சனத்தை செய்கின்ற "மார்க்சிய" பிரமுகர்கள், இதை ஆய்வு செய்வது கிடையாது. தாங்கள் இதில் ஆற்றிய அரசியல் பங்கு என்ன, என்று எதையும் சொல்வது கிடையாது. மார்க்சியவாதிகள் நிலவும் எந்த பொது சூழலிலும் சரி, குறித்த சூழலிலும் சரி, இயங்கு அரசியல் தளம் எப்போதும் அனைவருக்கும் இருந்தது. இதை யார் செய்தனர்? எப்படிச் செய்தனர்? கொஞ்சம் திரும்பிப் பார்த்து சொல்லுங்கள்.

இப்படி இவற்றை மறுக்கின்ற, மூடிமறைக்கின்ற, வரலாற்றைப் புதைக்கின்ற, எல்லாவற்றையும் புதிதாக காட்டி செய்யும் பித்தலாட்டங்கள், அடிக்கடி அரசியலில் இன்று அரங்கேறுகின்றது. எதுவும் நடவாத திடீர் விமர்சனங்கள் மூலம், தம்மை நிலை நிறுத்துகின்றனர். எதார்த்தத்தில் பச்சோந்தித்தனத்தையும், எதார்த்தம் கடந்த நிலையில் வர்க்கப் போராட்டத்தை மறுத்த, பண்பான, வர்க்கம் கடந்த விமர்சனங்கள் மூலம் தம்மை முன்னிறுத்துகின்றனர்.

விமர்சனத்தின் மொழிப் பண்பைக் கூட, அந்த விமர்சனம் வர்க்கப் போராட்டத்தை முன்வைக்கின்றதா இல்லையா என்பதைத் தீர்மானிக்கின்றது. எதார்த்தம் சார்ந்த இயங்குதளத்தில் விமர்சனம் வர்க்கப் போராட்டமாக மாறும் போது, எதிரிகள் சூழவே அது நடக்கின்றது. இங்கு மொழியின் பண்பு கூட, முரணாகவும் எதிராகவுந்தான் பயணிக்கின்றது. விமர்சன மொழி முதல் அதன் பண்பு வரை, அனைத்து வர்க்கமும் ஏற்றுக்கொண்ட அரசியல் பண்புத் தளத்தில் நடப்பதில்லை. இதில் இரண்டில் ஒன்றைத் தீர்மானிக்கின்றது. வர்க்கப் போராட்டத்தை நடைமுறை அரசியலாக கொள்ளாத அறிவுசார் "மார்க்சிய" பிரமுகர்களின் விமர்சனத்தில் இருந்து இது வேறுபட்டது.

வர்க்கப் போராட்டத்தை கோரும், கோராத விமர்சனம், அதன் பண்பு மற்றும் மொழியியல் ரீதியாக கூட வேறுபட்டது. விமர்சன உலகில் உடனுக்குடன் விமர்சனம் செய்வது, வர்க்க போராட்ட நடைமுறையில் இருந்துதான். அதை காலம்கடந்து திடீர் ஆய்வு செய்வது, நடைமுறையில் இல்லாத அறிவுஜீவிகளின் குறுகிய அறிவுச் செயலாக உள்ளது. இந்த இடைவெளியை இல்லாதாக்கவே, அறிவுத்துறை இன்று தன்னை முன்னிறுத்துகின்றது.

மார்க்சியம் என்பது வர்க்கப் போராட்டத்தை செய்வதற்காகத்தான். ஒரு கட்சியைக் கட்டுவதற்காகத்தான். மக்களை அணிதிரட்டுவதற்காகத்தான். ஆளும் வர்க்கத்தை எதிர்த்து அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்காகத்தான். இதையா அன்றும் இன்றும் சிவசேகரம் போன்றவர்கள் செய்தனர்!? செய்கின்றனர்!? சொல்லுங்கள். நாம் இந்த வகையில் தான் மார்க்சியத்தைப் பயன்படுத்துகின்றோம். கடந்த 30 வருட வரலாற்றில், இந்த வகையில்தான் அதை பார்க்கின்றோம், கையாளுகின்றோம். முதல் பத்து வருடங்களில் மக்களை அணி திரட்டும் அரசியல் பணியில் நாம் ஈடுபட்டோம். ஆனால் அன்னிய சக்திகளின் உதவியுடன் வீங்கி வெம்பி உருவான புலிப் பாசிசத்தின் விளைவால் நாம் கொல்லப்பட, சிலர் நாட்டைவிட்டே தப்பியோட வேண்டிய நிலையேற்பட்டது. இப்படி மக்களுடன் அதன் போராட்ட நடைமுறை இருந்தநிலை, பாசிசத்தால் முடிவுக்கு வந்த போது மார்க்சியவாதிகளாகிய நாம் என்ன செய்திருக்கவேண்டும்? தொடர்ந்தும் மக்களுக்கான போராட்டத்தை முன்வைத்து, அதை கிளர்ச்சியாக கருத்தாக எடுத்துச் சென்று இருக்கவேண்டும். இந்த வகையில்தான் நாம் செயற்பட முற்பட்டோம். இதைத் தவிர, வேறு குறுக்குவழி எம்முன் கிடையாது. நடந்ததை, நடப்பதை உடனுக்குடன் விமர்சனம் செய்வதன் மூலம், மாற்றுச் சிந்தனையை நடைமுறை மீது முன்வைத்தோம்.

ஊடகவியல் முழுக்க பாசிசத்தை தொழுது போற்றிய நேரத்தில், அதையே தேசியமாக காட்டி கட்டி அழுத நேரத்தில், அதன் மீதான விமர்சனத்தை உடனுக்குடன் மார்க்சிய கண்ணோட்டத்தில் முன்வைத்தோம். புலத்தில் புலிக்கு மாற்றான, ஒரு மாற்று அரசியல் செயல்தளத்தை நாம் எப்போதும் கோரி வந்தோம். வர்க்க அரசியலை துறந்த பச்சோந்திகளால், இந்தப் போராட்டம் என்பது குழுவாகவும், தன்னம் தனியாகவும் நடத்த வேண்டியிருந்தது.

புலியல்லாத மாற்று அரசியல் தளத்தில் இது கேலிக்குரியதாக, சாத்தியமற்ற ஒன்றாகவே புறந்தள்ளப்பட்டது. ஒருபுறம் புலிப்பாசிசம், மறுபுறம் மாற்றுத்தளம் என்பது அரசியல் இல்லாத இலக்கியமாகியது. இதுவே படிப்படியாக புலியல்லாத இலங்கை இந்திய கூலிக் குழுக்கள் உள்ளடங்கிய சந்திப்பாக மாறியது. இறுதியாக இலங்கை அரசின் போரை ஆதரிக்கும், பாசிசக் கும்பலாக மாறியது. புலிப் பாசிசம் எப்படி சிதைந்ததோ, அதுபோல் புலத்து மாற்று அரசியல் தளம் புலியெதிர்ப்பாக மாறி அரசு சார்பாக சிதைந்தது. இப்படி அரசியலற்ற இலக்கியச் சந்திப்பை முன்னிறுத்தி பெரும்பான்மை மகிந்தவுடன் ஓட்டிக்கொண்டது. இது நடந்த முடிந்துபோன மறுக்க முடியாத உண்மைகள். இதற்கு எதிரான எமது தனித்துவமான போராட்டம் சரியாக இருந்ததை வரலாறும் உறுதிசெய்துள்ளது. ஆனால் அரசியலற்ற கொசிப்பை வழிநடத்தியதற்கான பொறுப்பை, யாரும் ஏற்றுக்கொள்ளவில்லை, யாரும் சுயவிமர்சனம் கூட செய்யவில்லை. எல்லோரும் புது வேஷம் போடுகின்றனர். புலியிடம் தப்பி கொழும்பு போன்ற பிரதேசத்தில் தங்கி இருந்தவர்கள், படிப்படியாக மார்க்சிய அரசியலைக் கைவிட்டனர். ஊடகவியலாளராக மாறி, இறுதியில் புலியின் வாலாக மாறினர். மார்க்சியத்துக்கு வெளியில் தேசியத்தைப் பற்றி

அவர்கள் நிலைப்பாடு, புலிசார்பு நிலைப்பாடாக மாறியது.

இதற்கு வெளியில் மார்க்சியம் பேசிய கட்சி, 30, 35 வருடமாக வர்க்கப் போராட்டத்தைக் கைவிட்டு, பிரமுகர் கட்சியாகவே நீடித்தது. பல்வேறு பாசிச நெருக்கடிக்குள்ளான தேசியப் பிரச்சனைக்கு அப்பால், மலையகத்தில் கூட அவர்கள் வர்க்கப் போராட்ட அரசியலை முன்னெடுக்கவில்லை.

இப்படியான பொதுநிலை எங்கும் காணப்பட்டது. பாசிசம் செயலூக்கமுள்ளதாக, தன் அமைப்புகளைக் கட்டிவந்தது. இந்தப்போக்குக்கு எதிரான எமது நிலை என்பது, வர்க்கப் போராட்டத்தை அரசியல் ஆணையில் வைத்தது. எமது விமர்சன அணுகுமுறை என்பது, வர்க்கப் போராட்டத்தைக் கோருவதை அடிப்படையாக கொண்டிருந்தது. இந்த வகையில்தான் சம காலம் பற்றிய விமர்சனத்தை மையப்படுத்தி வந்தோம்.

இதை யாரும் செய்யவில்லை, கோரவில்லை. இதுதான் மார்க்சியத்தை உச்சரிக்கும் மற்றவர்களுடான எமது முரண்பாடுகளில் ஒன்றாகும். நாங்கள் மார்க்சியத்தை அடிப்படையாக கொண்ட விமர்சனம் மூலம், பிரமுகராக இருப்பதை அரசியல் ரீதியாக மறுத்து வந்திருக்கின்றோம். பிரமுகராக இருக்கக் கூடியவர்கள், தம்மை ஒத்த மற்றவர்களுடன் இயல்பாக கொள்ளக் கூடிய சந்தர்ப்பவாதத்துடன் கூடிய மூடிமறைத்த அணுகுமுறையை நாம் ஏற்றுக்கொள்ளவில்லை.

இப்படி எமது போராட்டம் தனித்து, தனித்தன்மை வாய்ந்ததாக மாறியது. இதனால் எமக்கு எதிரான அரசியலே, மாற்று அரசியலின் அரசியல் உள்ளடக்கமாக இருந்தது. நாம் மட்டும் தான், புலியை மட்டுமல்ல புலியல்லாத மாற்று அரசியல் தளத்தில் பிற்போக்கு அரசியலையும் விமர்சிப்பவராக மாறினோம். இது அன்று மட்டுமல்ல, இன்றும் கூடத்தான்.

இதுவே எமக்கு எதிரான இன்றைய அரசியலாக உள்ளது. புலிக்கு வெளியில் கடந்த காலத்தில் நடந்ததை சரியாக அரசியல் ரீதியாக மதிப்பிடாமல், அதை சுயவிமர்சனம் செய்யாமல், யாரும் நேர்மையாக ஒருக்காலும் செயல்பட முடியாது. மூடிமறைத்த சந்தர்ப்பவாதம், புதிய சூழலுக்குள் தம்மை மூடிமறைத்து நிலை நிறுத்திவிட, எம்மை தொடர்ச்சியாகவே எதிரியாக காட்டுகின்றனர். இதைத்தான் அன்று முதல் இன்று வரை தொடர்ந்தும் சிவசேகரம் செய்கின்றார்.

சரி சிவசேகரம், சிவத்தம்பியின் விமர்சனங்கள் சமூகத்திடம் எதைக் கோருகின்றது? எதையுமல்ல. தாம் சமூக மாற்றத்துக்காக முன்னின்று போராடாத வரை, அதை சமூகத்திடம் அவர்கள் கோர முடியாது. இந்த நிலையில், மார்க்சியம் கோரும் வர்க்கப் போராட்டத்தை மறுக்கின்றனர். ஆம் மார்க்சியத்தை மறுக்கின்றனர். மாறாக அறிவாக, தம் பிரமுகர்தன இருப்புக்கு ஏற்ப "மார்க்சியத்தைப்" பயன்படுத்துகின்றனர்.

ஒரு கேள்வியாக உங்களிடம் கேட்கின்றோம். இவர்கள் அறிவுசார் "மார்க்சியத்தை" அடிப்படையாக கொண்ட விமர்சகர்களா!? அல்லது வர்க்கப் போராட்டத்தை முன்னெடுக்கும் கம்யூனிஸ்ட்களா!? சொல்லுங்கள். இவர்கள் தாம் வைக்கும் கருத்தை, தம் சொந்த நடைமுறையிலும், மக்களை அணிதிரட்டும் போராட்டத்திலும், தம்மைத்தாம் ஈடுபடுத்துபவர்களா!? இல்லையா!? வர்க்கப்போராட்டத்தை முன்னெடுக்க விரும்பும் நீங்கள் சொல்லுங்கள். வர்க்கப் போராட்டத்தை முன்னெடுக்கும் நடைமுறைரீதியான கம்யூனிஸ்ட்டுகளல்ல இவர்கள். இங்கு மார்க்சியத்தை இவர்கள் பயன்படுத்தும் நோக்கம்தான் என்ன? அதைச் சொல்லுங்கள். வர்க்கப் போராட்டத்தைக் கோரும் எம்மை எதிர்ப்பது தான் ஏன்? சொல்லுங்கள்.

இவர்கள் வர்க்கப் போராட்டத்தை முன்னெடுக்கும் ஒரு அரசியல் நிகழ்ச்சி நிரலை, தன் அரசியலாக கொண்ட கம்யூனிஸ்ட்டுகள் அல்ல. மாறாக மார்க்சியத்தை அறிவுசார் நிலையில், பிரமுகர் எல்லைக்குள் குறுக்கி, தம் குறுகிய நிலையில் முன்னிறுத்துபவர்கள்.

இருந்தபோதும் சிவசேகரத்தின் எழுத்துகள் நிராகரிப்படக் கூடியவையல்ல. எப்படி சிவத்தம்பியின் எழுத்தை நாம் நிராகரிக்க முடியாதோ, அது போன்றுதான் சிவசேகரத்தின் எழுத்தும். சிவத்தம்பி திரிபுவாத ருசிய மார்க்சியம் சார்ந்து, கடந்து போன சமூகம் பற்றிய விமர்சனத்தை, அறிவு சார்ந்த எல்லையில் எழுதியதை நாம் நிராகரிக்க முடியாது. இது போல்தான் கைலாசபதி சண்ணின் புரட்சிகர கட்சியை சார்ந்து எழுதிய எழுத்துகள், மற்றொரு பரிணாமத்தை தருகின்றது. அது போல்தான் சிவசேகரம் மார்க்சியம் சார்ந்த எழுத்தும். இவை சமூகம் பற்றிய ஒரு பக்கத்தை மூடிமறைத்துத் தருகின்றது. இந்தியாவில் கோ.கேசவன் விமர்சனம் போன்று. இதற்கு வெளியில் அ.மார்க்ஸ், எஸ்.வி.ராஜதுரை போன்றோரின் எழுத்தையும் கூட நாம் நிராகரிக்க முடியாது. ஏனென்றால் இவை எல்லாம் சமூகம் பற்றிப் பேசுகின்றது. இதனால் நிராகரிக்க முடியாது.

ஆனால் இவை சமூகமாற்றத்தைப் பற்றிப் பேசவில்லை. அதாவது சமூக மாற்றத்தை தங்கள் கொள்கையாக நடைமுறையாக கொண்டு, அவர்கள் செயற்படவில்லை. மாறாக சமூகத்தை வியாக்கியானம் செய்கின்றனர். இந்த வகையில் அறிவு சார் எல்லைக்குள், இதை நிராகரிக்க முடியாதவையாகின்றது. எதார்த்தத்தில் இவர்கள் பெரும்பாலும் நிலவும் பிற்போக்கின் பின் நிற்பார்கள் அல்லது அதை எதிர்த்துப் போராடாது இருப்பதன் மூலம் அதற்கு உதவுவார்கள். உண்மையான வர்க்கப் போராட்டம் இவர்களுக்கு வெளியில் தான் எப்போதும் நடக்கின்றது.

இப்படி சமூகமாற்றத்தை முன்வைத்து செயற்படாத விமர்சன வியாக்கியானம் தான், இவர்களின் அரசியல் எல்லை. இயல்பில் அதன் செயற்படாத தன்மைக்கு ஏற்ப, எதார்த்தத்தை சந்தர்ப்பவாத எல்லைக்குள் நின்று அணுகுவதன் மூலம் அதை புதைக்கின்றனர். எதார்த்தம் என்பது, எப்போதும் எங்கும் வர்க்க மோதலைக்

கொண்டது. பல்வேறு சக்திகள் இதில் முட்டி மோதுகின்றனர். இதில் இவர்கள் தம்மை அனுமதிப்பதில்லை. அதை பூசி மெழுகி வியாக்கியானம் செய்வார்கள். தாம் ஒரு வர்க்கத்தின் அணியில் நின்று, மற்றைய வர்க்கத்தை எதிர்த்துப் போராடுவதில்லை. கவுரமான, மென்மையான, மதிப்புக்குரிய அறிவுசார் பிரஜைகளாக, மாற்றத்தை புரட்சியாக கோராது எதிரி முன் பவனி வருவார்கள். எதிரி வர்க்கம் போராடும் பாட்டாளி வர்க்கத்தைப் பார்த்துக் கூறும், அவர்களைப் போல் இணக்கமாக பண்பாக போராடும்படி. இன்றும் அதுதான் நடக்கின்றது.

சமூகமாற்றத்தை தனது அரசியலாக கொள்ளாத வியாக்கியான விமர்சனம், எதார்த்தத்தில் முரண்பட்ட வர்க்க பிரிவுகளை வியாக்கியானம் செய்யவோ விமர்சனம் செய்யவோ முன்வருவதில்லை. அதைச் சந்தர்ப்பவாதம் மூலமே எப்போதும் அணுகுகின்றது. சமூக மாற்றத்தைக் கோராத பிரமுகர்தனம் சார்ந்த இருப்பு, எப்போதும் எங்கும் சர்ந்தர்ப்பவாதத்தை அடிப்படையாக கொண்டது. அது மக்களைச் சார்ந்து நிற்பதில்லை. எதிரி பிரமுகர்களைச் சார்ந்து தான், தன்னை நிலைநிறுத்துகின்றது.

சமூகமாற்றத்தைக் கோராத பிரமுகர்தனம், பெரும்பாலும் தங்கள் வாழ்ந்த கால எதார்த்தம் பற்றிய விமர்சனத்தை, எதார்த்தம் கடந்த ஒரு காலகட்டத்தில் விமர்சனம் செய்கின்றது. மாறாக எதார்த்தத்தில் அல்ல. எதார்த்தத்தில் நடைமுறைவாதிகளாக, மக்களிடம் இவர்கள் செல்வதில்லை. இவர்கள் மக்கள் முன் பிரமுகராகவே இருக்கின்றனர். இன்று புலி பற்றிய விமர்சனத்தை, சிவத்தம்பியும் திடீரென செய்யமுடியும். இதைத்தான் சிவசேகரமும் செய்கின்றார். இன்று பலரும் செய்கின்றனர். இன்று மகிந்த குடும்ப பாசிசத்தைப் பற்றி, அதன் பண்பு பற்றி வாய் திறக்கமாட்டார்கள். அப்படி திறந்தால் பட்டும்படாமல் பூசி மெழுகுவார்கள். இப்படி செய்வதன் மூலம் தான், தங்கள் கடந்தகால எதார்த்தத்தை மூடிமறைத்து சோக்குகாட்ட முடிகின்றது. இன்று நடந்து கொண்டு இருப்பது இதுதான்.

### புலத்தில் சிவசேகரம் என்ன செய்தார்? உண்மையான மார்க்சியவாதி என்ன செய்திருக்க வேண்டும்?

உண்மையான மார்க்சியவாதி புலத்து புலி வலதுசாரிய அமைப்புக்கு எதிராக, புலத்து மக்களைச் சார்ந்து மாற்று அமைப்பைக் கட்டியிருக்கவேண்டும். இதையா சிவசேகரம் செய்தார்? இல்லை. இதற்கு எதிராக மார்க்சியமல்லாத புலத்து பிரமுகர்களைச் சார்ந்து நின்று, அதற்கு குழிபறித்தவர் தான் இந்த மார்க்சிய பேராசிரியர்.

இயக்க உள்முரண்பாடு, புலிகளின் இயக்க அழிப்பு, இந்திய தலையீடு என்று தொடர்ச்சியாக, சமூகத்துக்கு எதிரான எதிர்ப்புரட்சி போக்குகள் வளர்ச்சியுற்றது. இது பாசிச நிலை எடுத்த போது, மக்கள் சார்ந்த அரசியல் செயற்பாடு படிப்படியாக முடிவுக்கு வந்தது. அங்கு போராடியவர்களில் மரணித்தவர்கள் போக, எஞ்சியவர்கள்

கொழும்பு மற்றும் புலத்தை நோக்கி புலம்பெயர்ந்தனர். அங்கு மக்கள் பக்கம் நின்று இயக்கங்களுக்கு எதிராக நடந்த போராட்டத்தில் பங்கு கொண்டவர்கள் தான், புலத்தில் இயக்கங்களுக்கு எதிரான மக்கள் போராட்டத்தை தொடங்கினர். பெருமளவில் புளட் உறுப்பினர்கள் இதில் ஈடுபட்டனர். இதுவே சிறு சஞ்சிகைகள் மூலம் மாற்று அரசியல் தளத்தை உருவாக்கியது.

மார்க்சியம் பற்றிய புரிதலை அரையும்குறையுமாக கொண்ட, அனுபவம் சார்ந்த முற்போக்கு பாத்திரத்தையே அவர்கள் தமது அரசியலாக்கினர். அவர்களின் நோக்கம் எங்கள் மக்களுக்கு இயக்கம் சார்ந்து நடக்கும் எதிர்ப்புரட்சியைப் பற்றி பேசுவதும், அந்த மக்கள் விடிவிற்கான புரட்சிகரமான மாற்றுப் பாதையை உருவாக்குவதும் தான். இதற்கு வெளியில் எந்த குறுகிய உள் நோக்கமும் அவர்களிடமிருக்கவில்லை.

ஆனால் இறுதியில் இதற்கு எதிராகவே, மாற்றுத் தளம் மாறியது. புலிகளின் இறுதி யுத்தத்தின் போது, மாற்று மக்கள் கோசத்தை வைத்து போராட தனிமனிதன் கூட மாற்று (இலக்கிய) தளத்தில் எஞ்சவில்லை. இது நடந்து முடிந்த உண்மை வரலாறு. ஏன் இப்படி நடந்தது. இதில் ஓட்டிக்கொண்டு, இதன் முன்னணி பிரமுகராக இருந்த சிவசேகரத்தின் அரசியல் பாத்திரம் என்னவாக இருந்தது?

புலத்தில் மாற்று அரசியல் செயற்தளம் தொடங்கிய முதல் பத்தாண்டுகளில், சிவசேகரம் இதனுடன் பயணித்தவர். இந்த மாற்றுத் தளத்தில் முக்கிய பிரமுகராக இருந்தவர். உண்மையில் மக்களுக்காக போராடியவர்கள், அதை முன்வைத்து உருவானதுதான் மாற்று அரசியல் தளம். ஏற்கனவே ”மார்க்சிய” பிரமுகராக இருந்த சிவசேகரம் போன்றவர்கள் அதற்குள் ஓட்டுண்ணிகளாக ஓட்டிக்கொண்டு, தாம் பிரமுகர்தனமாக இருத்தலையே மாற்று அரசியலாக்கினர். இதைத்தான் சிவசேகரத்தின் ”மார்க்சியம்” அன்று புலத்தில் செய்தது.

”மார்க்சியவாதியாக” தன்னை அடையாளப்படுத்தும் சிவசேகரம், இதைத்தான் செய்தார். மக்களுக்காக ஏதோ செய்ய வேண்டும் என்று உண்மையான நோக்குடன் அரைகுறை மார்க்சியத்தை புரிந்து கொண்டு வந்த இளைஞர்களை, அறிவூட்டி வழிகாட்ட வேண்டிய சிவசேகரம், அவர்களையும் பிரமுகராக மாற்றும் சீரழிவுப் பாதையில் தள்ளினார். இந்த வகையில் சண்முகரத்தினம் (சமுத்திரன்) செயல்பட்டார். இருவரும் மார்க்சியத்தை பேசிக் கொண்டு, வலதுசாரியத்தை இடதுசாரியமாக நக்கிக் காட்டித் திரித்த மு.நித்தியானந்தன், வ.ஐ.ச.ஜெயபாலன் சேர்ந்து அரசியலற்ற பிரமுகர்களின் இலக்கிய சந்திப்பாக புலியல்லாத அரசியல் தளத்ததை சீரழித்தனர். இவர்கள் அதன் முக்கிய பிரமுகராக இருந்ததுடன், அரசியல் நீக்கம் செய்த இலக்கிய சந்திப்பு, வர்க்கம் சார்ந்த மார்க்சியத்தை முதலில் துறந்தது. இப்படி புலியல்லாத மாற்று அரசியல் தளத்தை புலம்பெயர் சமூகம் இழந்தது. இறுதியில் மாற்று என்றால், இலங்கை அரசை ஆதரித்து புலியை அழித்தலாக மாறி எதிர்ப்புரட்சி கூறாகியது. இது வரலாறாகிவிட்டது. இதன் பின்னணியில், குறைந்தது முதல்

பத்து வருடங்கள் சிவசேகரம், சண்முகரத்தினம் போன்ற பிரமுகர்கள், தம் பிரமுகர்த்தன ”மார்க்சிய” அறிவால் தம் சந்தர்ப்பவாதத்தால் அதைக் குட்டிச் சுவராக்கினார். புலிகளின் இறுதி அழிவின்போது, மக்களை சரியாக வழிநடத்த, ஒரு மாற்று அமைப்புக் கூட கிடையாது. இதைத்தான் சிவசேகரம் புலத்தில் முன்னின்று செய்தவர்.

நாங்கள் புலம் பெயர்ந்த ஆரம்பம் முதலே, இந்தப் போக்குக்கு எதிராக தொடர்ச்சியாக போராடி வந்தோம். மார்க்சிய சிவசேகரம் தம் பிரமுகர்தனத்தைப் பாதுகாக்க, எம்முடன் அன்று முதல் மூட்டி மோதினார். அக்காலகட்டத்தில் அவர் அதனுடன் சேர்ந்த பயணித்ததுடன், சீரழிவை வழிநடத்தியவர். மாற்று என்பது மார்க்சியமல்லாத பிரமுகர்களை தக்கவைத்தல் என்ற நிலையையே உருவாக்கினார்கள். அரசியலைக் கைவிட்டு செல்லும் போக்கை ஊக்குவித்த அதை வழிநடத்தினர். இதையெல்லாம் எங்கே, எப்போது நேர்மையாக விமர்சனம் செய்துள்ளனர்?

இறுதியில் அவர் அவர் தன் கருத்தை முன்வைப்பதை அடிப்படையாக கொண்ட கும்பல் போக்கே, மாற்றாகியது. இங்கு கருத்தல்ல என்ற அரசியல் பரிணாமத்தை அது பெற்றது. எதிர்ப்புரட்சிக் கருத்தை முன்வைக்கும் உரிமை முதல் இலங்கை இந்திய கூலிக் குழுக்களும் தங்கள் கருத்தை இதற்குள் வைக்கும் உரிமை வரை, அதுவே மாற்றாக வளர்ச்சிபெற்றது. புலியெதிர்ப்பு இதன் அடிப்படையான அரசியல் கொள்கையாகியது. மார்க்சியம் பேசிய பிரமுகர்களின் சந்தர்ப்பவாதிகளின் இருத்தல் உடன் தான், இது புளுத்தது. உதாரணமாக அண்மையில் நடந்த ஜனாதிபதி தேர்தலில் வாக்குச்சீட்டில் படம் கீறக் கோரிய பிரமுகர் மார்க்சியம், அடுத்த மாதம் நடந்த தேர்தலில் வாக்குச்சீட்டில் புள்ளடிபோடக் கோரியது. இப்படித்தான் கடந்த 40 வருடமாக புரட்சி செய்ய வழிகாட்டினர்.

புலிகளின் பாலசிங்கம் போல் தான், சிவசேகரம் மா.லெ.பு.ஜ.க.யின் கட்சியின் பிரமுகர். சிவசேகரம் இலங்கை செல்லும் வரை, புலத்து மாற்றுத்தளத்தில் இயங்கியவர், எந்த கட்டத்திலும் அதை விமர்சனம் செய்யவில்லை. ஏன் சுயவிமர்சனமும் கூட செய்யவில்லை. அதன் முன்னணி பிரமுகர்களையும், அதன் பிற்போக்கான வர்க்க கூறுகளையும் கூட விமர்சனம் செய்யவில்லை. அப்பட்டமாக அதில் கூடிக் கும்மியடித்து, மார்க்சியத்தை மறுத்தபடி மார்க்சியம் பேசிய சந்தர்ப்பவாதியாகவே அதனுடன் பயணித்தவர். இலக்கிய சந்திப்பில் தொடர்ந்து தங்கள் பிரமுகர்தனத்தை தக்கவைக்கும், சந்தர்ப்பவாத அரசியலை தன் சொந்த எதார்த்தம் மீது வைத்தவர், மார்க்சியத்தை அதன் எதார்த்தத்துக்கு வெளியில், எதார்த்தத்தில் யாரும் புண்படாத வண்ணம் பண்பாக பேசிக்கொண்டு சமூகத்துக்கு குழி பறித்தார். தன்னை ஓத்த பிரமுகர்களுடன் கூடி, கும்மியடித்தபடி பண்பாக நாகரிகமாக நடந்துகொண்டவர், சொந்த மக்களுக்கு சவக்குழி பறித்தார். மக்களின் அவலத்துக்கு மாற்றாக, அவர்களுக்கு ஒரு வழியைக் காட்ட முனையவில்லை. ஒரு மனிதனாக மக்களுடன் நின்று அவர்களுக்காக போராடாதவர், பிரமுகர்களுடன் கூடிக்குலாவி மார்க்சியத்தைக் கூவினர்.

புலிப் பாசிசத்தை எதிர்கொண்டு போராடக் கூடிய நிலைமை புலத்தில் காணப்பட்டது. அதை இந்தக் கும்பல் நிராகரித்து, அறிவுசார் பிரமுகர்தனத்தையே தக்கவைக்க, தங்கள் சந்தர்ப்பவாதம் மூலம் வர்க்கம் கடந்து எல்லோரும் எல்லோருக்கும் நல்லவராக பவனி வந்தனர். புலத்தில் மாற்று மக்கள் அரசியலை முன்வைக்கவும், அதனடிப்படையில் புலத்து மக்களை அணிதிரட்டும் நடைமுறை சார்ந்து மார்க்சியத்தை முன்வைக்கவில்லை. இதற்கு மாறாக புலிகள் இவ்விரண்டையும் செய்தனர். செய்யவேண்டியதை அரசியல் ரீதியாக செய்ய மறுப்பதன் மூலம், புலிக்கு உதவினர். அரசுக்கும் உதவினர். இது எதிர்ப்புரட்சி அரசியலில் உள்ள அம்சமாகும். எதிரியும் இதைத்தான் கோருகின்றான். பிரமுகர்கள் தாங்களாகவே முன்னின்று அதைச் செய்கின்றனர். அதாவது எதார்த்தத்தை மாற்றாது, அதில் தலையிடாது திசைதிருப்பி இயங்குதல் பிரமுகர்களின் அறிவுசார் கலையாக உள்ளது. இதன் மூலம் எதிரிகளுக்கு உதவுவது இவர்கள் அரசியலாக உள்ளது. இந்த உதவி என்பது தங்கள் பிரமுகர்தனத்தை தக்கவைக்கும் சந்தர்ப்பவாத அரசியல் மூலம், புலிக்கு எதிரான மாற்றுத்தளத்தை புலத்தில் இல்லாதாக்கினர். இப்படி அரசியல் ரீதியாக செய்ததன் மூலம், மாற்றுத் தளத்தை இலங்கை அரசின் எடுபிடி ஆள்காட்டி கூலிகும்பல்களின் அமைப்பாக்கினர். நாங்கள் இதை ஆரம்பம் முதல் எதிர்த்துப் போராடியதால், தன்னம் தனியாக எஞ்சினோம். மக்கள் பற்றிப் பேசுபவர்கள், நாங்கள் மட்டும் என்ற நிலை உருவானது.

**இலங்கையில் மார்க்சியம் பேசிய சிவசேகரம் என்ன செய்தார்?**

வர்க்கப் போராட்டத்தையா முன்னெடுத்தார்? கட்சியைத்தான் கட்டினாரா? அவருடைய மார்க்சியம் என்னதான் செய்தது? சொல்லுங்கள்.

அவருடைய மார்க்சியம் வர்க்கப் போராட்டத்தை முன்னெடுப்பதையும், கட்சியைக் கட்டுவதையும் மறுத்தது. குறிப்பாக தன்னளவில் தனக்கு உள்ள வர்க்க கடமையை மறுக்கும் போது, அவரின் கருத்துகள் அதைப் பொதுத்தளத்தில் அதைக் கோர மறுக்கின்றது. கட்சியைக் கட்டும் மார்க்சியத்தை தன்னளவில் தனக்கு மறுக்கும் போது, மார்க்சியத்தை அதன் புரட்சிகர உள்ளடக்கதில் மறுப்பது அரசியலாகி விடுகின்றது. இதை மற்றவர்கள் செய்வதை அவர் கோரவும் முடியாது. இதனால் தான் மார்க்சியத்தை தன் இருப்புக்கு ஏற்ப கோணலாக்கி விடுகின்றனர்.

மார்க்சியத்தை அடிப்படையாகக் கொண்டு மக்களை அணிதிரட்டும் வர்க்கக் கடமையில் ஈடுபடாமல் இருக்கும் பிரமுகர்கள், இதை மற்றவனைக் கோர முடியாது. இதனால் எதார்த்தத்தை விமர்சனம் செய்வதில் இருந்து, சந்தர்ப்பவாதமாக விலகுகின்றனர். இதனால்தான் சிவசேகரம் போன்றவர்கள் புரட்சி செய்யாத ஒரு கட்சியின் பிரமுகராக பவனி வருகின்றார். இந்தக் கட்சியில் இணையவோ அல்லது ஒரு வர்க்கக் கட்சியை உருவாக்கவோ அவர் தயாராகவில்லை. மா.லெ.பு.ஜ.கட்சியின் இயல்பு, தன் பிரமுகர்தனத்தின் இயல்புக்கு ஏற்ப இருப்பதால் தான், அதனுடன்

தன்னை ஒட்டிக்கொள்ளும் சந்தர்ப்பவாதியாக இருக்கின்றனர்.

புலிப்பாசிசம் நிலவிய காலத்தில் நாங்கள் புலத்தில் இருந்து சொல்வது சுகம் என்ற வாதம் சார்ந்த எதார்த்தத்தை, நாம் கருத்தில் கொண்டுதான் இதைக் கூறுகின்றோம். மா.லெ.பு.ஜ.க. முக்கிய நபர்களை, நாம் பரிசில் சந்தித்தபோது வடக்குகிழக்கில் அல்லது தேசிய பிரச்சனையில் வர்க்க நிலையெடுத்து போராட முடியாவிட்டாலும், மலையகத்திலும் மற்றைய பிரதேசத்திலும் பல்வேறு விடையங்களிலும் வர்க்கப் போராட்டத்தை புரட்சிகரமாக முன்னெடுக்கக் கோரினோம். இதைச் செய்யாத ஒரு கட்சியின், பிரமுகர்தான் சிவசேகரம். புலத்தில் செய்யவேண்டியதை செய்யாத மார்க்சிய அறிவுசார் சந்தர்ப்பவாத பிரமுகர், அதையே மண்ணிலும் செய்கின்றார். மார்க்சியத்தை அறிவாகக் கொண்டு, காலம் கடந்த நிலையில் அதை வியாக்கியானம் செய்கின்றனர். அதை மாற்ற முனையாது, எதார்த்தத்திலோ முழுமையான சந்தர்ப்பவாதிகளாக இருக்கின்றனர்.

எதார்த்தம் மீது உடனுக்குடன் அதை விமர்சனம் செய்வதில்லை. அதைச் செய்யவேண்டிய அவசியம், மார்ச்சியம் பேசும் அறிவுசார் பிரமுகர்களுக்கு கிடையாது. வர்க்கப் போராட்டத்தை தன் சொந்த அரசியல் நிகழ்ச்சி நிரலாக கொண்டால்தான், உடனுக்குடன் எதார்த்தத்தை விமர்சனம் செய்யவேண்டிய கம்யூனிஸ்ட்டுக்குரிய வர்க்க நிலை உருவாகின்றது.

இந்த அரசியல் கடமையை கோரும் மார்க்சியத்தை தன்னளவில் தனக்கு மறுக்கும் போது, பிரமுகருக்குரிய சந்தர்ப்பவாதத்துடன் தான் காலம்கடந்து வியாக்கியானம் செய்கின்றனர். எதார்த்தத்தில் எதிர்வினையாற்றி போராடாத போது, எதார்த்தத்தில் நிலவும் பிற்போக்கு அரசியல் ரீதியாக உதவி செய்கின்றது. இப்படி புலிப் பாசிசத்துக்கும் உதவினர்.

இதையெல்லாம் மூடிமறைத்தபடி, நடைமுறையில் எதார்த்தம் மீது சமூகத்தை அணிதிரட்டாத காலம் கடந்த மார்க்சிய விமர்சனத்தை முன்னிறுத்துகின்றனர். இப்படி எதார்த்தத்தில் சந்தர்ப்பவாதியாக இருத்தல் தான், மார்க்சியவாதிகளின் நடைமுறை என்று சிவசேகரம் தன்னை முன்னிறுத்துகின்றார். தங்கள் எதார்த்தத்தை காலம் கடந்த விமர்சனம் மூலம், வியக்கியானம் செய்வது தான் மார்க்சியம் என்கின்றனர். தன்னையொத்த அறிவுசார் பிரமுகர்த்தன செயற்பாடு தான், வர்க்கப்போராட்டம் என்ற அரசியல் நிலையை தொடர்ந்து புகுத்துகின்றார். சந்தர்ப்பவாத பிரமுகர்களின் அறிவுசார் பிழைப்புத்தனத்தை, மார்க்சியவாதியின் அரசியல் நடைமுறையாக முன்வைக்கின்றார்.

இலங்கையில் புதிதாக மார்க்சிய அரசியலில் நுழைந்த இளம் தலைமுறையினர் பலர், இந்த பிரமுகர்தன மார்க்சியத்தை தமது அரசியல் வழியாக தேர்ந்தெடுத்திருக்கின்றனர். புலத்தில் 1990 களில் சிவசேகரம் போன்றவர்கள்

புலத்தில் அறிவுசார் பிரமுகர்தனத்தை மாற்றாக முன்வைத்தது போல, இன்று இலங்கையில் மார்க்சியத்தை பேசும் புதிய தலைமுறையை தன் சந்தர்ப்பவாத வழிபோல் பிரமுகராக இருக்க வழிகாட்டுகின்றார். பிரமுகராக மார்க்சியத்தை பேசுதல் தான், மார்க்சியம் என்ற நிலைக்குள் ஒரு புதிய தலைமுறை வீழ்ந்துள்ளது. இப்படி இலங்கை அரச பாசிசத்துக்கு மறைமுகமாக உதவுகின்றனர். ஒரு கம்யூனிஸ்டுக்குரிய கடமையை மறுத்து, மக்களை அணிதிரட்டும் மார்க்சியத்தை மறுத்து, அறிவுசார் மார்க்சியமாக இலங்கை பாசிச அரசுக்கு உதவும் வண்ணம் மார்க்சியம் சீரழிக்கப்படுகின்றது.

இப்படி மார்க்சியம் அறிவின் எல்லைக்குள், வியாக்கியானம் செய்யும் பிரமுகர்தனத்தின் மேட்டிமைக்குள் புதைக்கின்றனர். மார்க்சியம் மக்களை புரட்சியின்பால் அணிதிரட்டுதற்காகவல்ல என்ற எல்லையில் நிறுத்தி, சமூகத்தை வியாக்கியானம் செய்கின்ற அறிவின் எல்லையில் நிறுத்தி அதை சேறடிக்கின்றனர். நாங்கள் இதனுடன் முரண்படுவதால், இதை அம்பலப்படுத்துவதால் "இணையத்தளபதிகள்", "கொமிசார்" என்ற தங்கள் இருப்பு சார்ந்த நிலையை தக்கவைக்க வசைபாடுகின்றார். "கொமிசார்" என்ற அரசியல் பதத்தை, கம்யூனிஸ்ட் கட்சியை எதிர்க்கும் மார்க்சிய எதிர்ப்பு அறிவுசார் பிரமுகர் அரசியல் நிலையில் நின்று இழிவாடுகின்றனர்.

வர்க்கப் போராட்டத்தை ஆணையில் வைக்காத, அதை நடைமுறையில் முன்னெடுக்காத அனைத்து மார்க்சிய சந்தர்ப்பவாதமும், அம்பலப்படுத்தப்பட வேண்டியவை. நாங்கள் மார்க்சியத்தை சமூகத்தை மாற்றி அதை தலைகீழாக்கும் நடைமுறையின் மேல்தான் முன்னிறுத்துகின்றோம். இதை எதார்த்தத்தின் எல்லைக்கு எதிர்வினையாற்றியபடிதான், முன்வைக்கின்றோம், அதைக் கோருகின்றோம். வெறுமனே விமர்சனம், வியாக்கியானம் செய்வதற்கல்ல. இதனால் தான் நாம் பல்லைக்காட்டும், சந்தர்ப்பாத பிரமுகராக இல்லாமல் இருக்கின்றோம். புலத்தில் நாம் இருந்தாலும், இதுதான் எமது நிலை. இதனால்தான் எம்முடன், மார்க்சியம் பேசும் அறிவுசார் பிரமுகர்களுடனான முரண்பாடுகள் தொடருகின்றது.
இல்லை என்று இதை நீங்கள் மறுத்தால், பாட்டாளி வர்க்கக் கட்சியைக் கட்டுங்கள், அதன் உறுப்பினராகுங்கள். மக்களை அணிதிரட்டி வர்க்கப் போராட்டத்தை முன்னெடுங்கள்.

பி.இரயாகரன்
12.08.2010

## "சிங்களவன் உடன் எப்படி நாங்கள் சேர்ந்து வாழ்வது?"

அவன் உன்னைப்பற்றி என்ன நினைக்கின்றான் என்பதற்கு முதல்இ நீ அவனைப்பற்றி என்ன நினைக்கின்றாய் என்பதுதான் முதன்மையானது. நீ சேர்ந்து வாழத் தயாரா!? அதற்காக முயன்றாயா!? எப்படிஇ எந்த வழியில்!?

சிங்கள அரசு தான் உன் எதிரி. சிங்கள மக்கள் அல்ல. இந்த வேறுபாட்டை எப்போதாவது உன் வாழ்வில் நீ எண்ணிப்பார்த்ததுண்டா!? தமிழனைஇ முஸ்லீமைக் கூடஇ எதிரியாக்கியவன் அல்லவா நீ. ஏன் உன் சிந்தனைஇ நடைமுறை எல்லாம் அதுவாகவே இருந்தது. அதைத்தான் தேசியத்தின் பெயரில் புலித் தேசியம் உனக்குஇ உன் சிந்தனையாக ஊட்டியது.

துரோகிகள்இ கைக்கூலிகள்இ ஒட்டுக்குழுக்கள் மக்களின் எதிரியான சிங்கள அரசுடன் கூடி நிற்கின்றானே ஒழியஇ உன்னைப் போன்ற சிங்கள மக்களுடன் அல்ல. நீ ஏன் உன்னைப் போன்ற சிங்கள மக்களுடன் நிற்க முடியாது!?

இதைப் புரிந்து கொள்ளாத மூடனாய்இ குறுந் தமிழினவாதம் கொப்பளிக்கஇ சிங்களவனுடன் வாழமுடியாது என்று ஏன் தர்க்கம் செய்கின்றாய். இப்படி மற்றவனுடன் சேர்ந்து வாழமுடியாது என்று கூறும் உன் சிந்தனைஇ உள்ளடக்கத்தில் நீ அவனுக்கு எதிராக முதலில் இருக்கின்றாய் என்பதுதான் உண்மை. இப்படி சேர்ந்து வாழ நீ மறுக்கின்றாய் என்பதேஇ வெளிப்படையான உண்மை. இதை மறுக்கஇ நான் அல்லாத அவன் பற்றிய எதிர்மறை கற்பனைகளைஇ நாம் எமக்குள் உருவாக்கிக் கொள்கின்றோம்.

இப்படி எதிரி யார் என்ற உன் குழப்பம்இ அனைவரையும் உனக்கு எதிரியாக்கின்றது. இலங்கையில் வாழும் ஒடுக்கப்பட்ட மக்கள்இ தமக்குள் தாம் எதிரியாகக் கருதியே வாழ்கின்றனர். உன்னுடைய வீட்டில்இ உன்னுடைய உழைப்பில் அவன் வாழ்வதில்லை. உன்னுடன் நிற்பதாக கூறி உன் உழைப்பைச் சார்ந்து தின்னும் சக மனிதன் போல்இ அவன் உன் உழைப்பை புடுங்கி தின்ன முனைவதில்லை.

அப்படியிருக்க அவன் எப்படி உன் எதிரியானான்!? இதைச் சொல்பவன் தான்இ இதை செய்ய முனைபவன் தானேஇ உன் எதிரி. நீ மற்றவனை ஒடுக்கவும்இ சுரண்டவும்இ நினைக்காத வரை உனக்கு எதிரி யாரும் கிடையாது. அப்படியிருக்க நீயாக எதிரியைஇ ஏன் உனக்குள் கற்பனையில் உருவாக்குகின்றாய்.

சிந்தித்துப் பார். ஒடுக்கப்பட்ட அப்பாவி சிங்கள மக்களா உன்னை ஒடுக்கினார்கள் அல்லது பேரினவாத அரசா ஒடுக்கியது? கண்ணை மறைக்கும் இனவாதம்இ

உன் சிந்தனையை தலைகீழாக்கியுள்ளது. ஏன் இந்த மட்டமான உன் சிந்தனையே தான்இ தமிழ் இனத்தை அழித்துள்ளது.

யார் ஒடுக்குகின்றான்!? தாழ்ந்த சாதியை நீ ஒடுக்க நினைக்கின்றாயா? அவனை உனக்கு கீழ்ப்பட்ட ஒருவனாக எண்ணுகின்றாயா? இழிவாக பார்க்கின்றாயா? அவனின் உழைப்பை இழிவுபடுத்துகின்றாயா? சுரண்டுகின்றாயா? இதை கண்டு கொள்ளாமல் இருக்க முனைகின்றாயா? இங்கு நீ ஒடுக்கு முறையாளன். இப்படித்தான் இந்த விடையத்தை ஆராய வேண்டும்.

இப்படி ஒடுக்குமுறையை எனக்குள் நான் தக்க வைத்துக்கொண்டுஇ மற்றொரு ஒடுக்குமுறையைப் பற்றி பேசும் அருகதை கிடையாது. இதைத்தான் கடந்த காலத்தில் செய்தோம். இதன் மூலம் தவறாக எதிரிகளை உருவாக்கினோம்.

சிங்களவன் என்று அனைத்து சிங்கள மக்களையும் பொதுமைப்படுத்திஇ தமிழ் (புலித்) தேசியம் தனக்கு எதிரியாக அவர்களை காட்டியது. அதேநேரம்இ அதே தேசியம் தமிழ் மக்களை ஒடுக்கியது. இப்படி தமிழ் மக்களை ஒடுக்கஇ சிங்கள மக்களை தனக்கு எதிரியாக காட்டியது. உனக்கு அதை மூளைச்சலவை செய்து திணித்தனர்.

ஒடுக்கப்பட்ட சிங்கள மக்கள் வேறுஇ பேரினவாத அரசு வேறு. இதை மறுத்த குறுந்தேசியம்இ அனைத்தையும் ஒன்றாக்கியது. அனைவரையும் எதிரியாக சித்தரித்தது. இப்படி உருத்திராட்ச மாலையை கையில் வைத்து உருப்போட்ட 30 வருட புலிச் சிந்தனை முறைஇ தாம் அல்லாத அனைத்து மக்களையும் எதிரியாக பார்த்ததுஇ பார்க்க வைத்தது. இதுதான் அறிவிழந்தஇ பகுத்தறிவற்றஇ உனது சிந்தனை முறை.

இப்படி சிங்கள மக்களைஇ முஸ்லீம் மக்களைஇ கிழக்கு மக்களைஇ தான் அல்லாத தாழ்ந்த சாதிகளை என்றுஇ எல்லோரையும் எதிரியாக காட்டியது. இவர்களை தம்மில் இருந்து விலக்கிஇ அவர்களுக்கு எதிராக இருக்கவும் பார்க்கவும் சிந்திக்கவும் செயல்படவும் முனைவதே தமிழ் தேசியம் என்றனர். இல்லை என்கின்றீர்களா!? இப்படி எம்மைச் சுற்றி இல்லாத எதிரிகளை கற்பித்துஇ பலரை எம் மக்களுக்கு எதிரியாக்கியவர்கள்இ நண்பர்களை உருவாக்கவில்லை. மாறாக எதிரியாக இருக்காதவனைக் கூடஇ வலிந்து எம்மக்களின் எதிரியாக்கினர்.

சிங்கள ஒடுக்கப்பட்ட மக்களைஇ ஏன் இந்த பேரினவாத அரசு ஒடுக்குகின்றது!? அவர்கள் பற்றி எமது சொந்த அறிவுசார் நிலைப்பாடுதான் என்ன!? அவர்களுக்காக நாம் என்ன செய்தோம்!? எதிரியின் எதிரியை வென்றெடுக்கஇ நாம் ஏன் முனையவில்லை!? ஏன் அப்படி சிந்திக்கவும்இ செயல்படவுமில்லை!? எம்மை எது எப்படி தடுத்தது!?

இப்படி நண்பனை எதிரியாகவே பார்த்த தவறு எம்முடையது. அப்படியே இன்றும் பார்க்கின்ற குறைபாடு எம்முன்னுள்ளது. இது எம் அறிவுசார்இ பகுத்தறிவுசார் குறைபாடாகும்.

அவன் என்னைப்பற்றி என்ன நினைக்கின்றான் என்பது இரண்டாம் பட்சமானது. நாம் அவனைப்பற்றி என்ன நினைக்கின்றோம் என்பதுஇ முதன்மையானது. நாம் சரியாக இருக்கும் போதுதான்இ அவனும் சரியாக இருப்பதை நாம் உணர முடியும்.

எந்த அப்பாவி சிங்கள மக்களும்இ தன்னையொத்த தமிழனை கொல்வதை ஆதரிப்பதில்லைஇ சுரண்ட நினைப்பதில்லை. ஆனால் நாங்கள் அப்படியா சிந்திக்கின்றோம். முஸ்லீம் மக்களிடமிருந்து எல்லாவற்றையும் புடுங்கிய பின்இ அவர்களை வடக்கில் இருந்து புலிகள் துரத்திய போதுஇ பெரும்பான்மை தமிழ்மக்கள் என்ன நினைத்தார்கள்!? அதை நியாயப்படுத்தஇ முஸ்லீம் மக்கள் பற்றிய உனது இழிவான அறியாமை சார்ந்த தர்க்கங்களை எல்லாம்இ இன்று நீ சுயவிமர்சனம் விமர்சனம் செய்தாயா?

உனக்குள் இருக்கின்றதுஇ நீயல்லாத மக்கள் பற்றிய வெறுப்புணர்வு. இதை நீ களைவது தான்இ உனது வெற்றிக்கும்இ சமூகத்தின் வெற்றிக்குமான முதற்படியாகும்.

உன்னிடமுள்ள தப்புகளையும்இ தப்பபிராயங்களையும் களைவதன் மூலம்இ தவறுகளில் இருந்து நீயும் மக்களும் மீளமுடியும். இதன் மூலம் உரிமைகளை பெறுவதற்கான அரசியல் பலத்தைஇ உனக்குள்ளும் எம்மைச் சுற்றியும் ஒருங்கிணைக்க முடியும். இதைத்தான் நீ செய்கின்றாயா என்பதைஇ உன்னை நீயே கேட்டுப்பார். தமிழ் மக்களுக்காக முதலில் நீ செய்யவேண்டியதுஇ உன்னிடமுள்ள தவறுகளை இனம் காண்பதும்இ அதை களைவதும் தான்.

பி.இரயாகரன்
17.06.2009

## பேரினவாதத்தை எதிர்கொள்வதாக இருந்தால் தமிழ்ப் பாசிச சிந்தனை முறை தகர்க்கப்பட வேண்டும்

கடந்த 30 ஆண்டுகளில் தமிழ் பாசிச சிந்தனை முறை தன்வழியில் பேரினவாதத்தை ஒழித்துகட்டுவதாக கூறி அந்த பேரினவாதத்துக்கே அது இரையானது. அதேநேரம் அது தமிழ் பாசிசமல்லாத அனைத்து சமூக அரசியல் அடித்தளங்களையும் அழித்தது. இதன் மூலம் இன்று பேரினவாதம் தமிழினத்தின் வாழ்வுசார் கூறுகள் அனைத்தையும் சிதைத்தும் அழித்தும் வருகின்றது.

இந்த நிலையில் இதை எதிர்கொள்வது என்பது எம்முன்னுள்ள மிகப்பெரிய இன்றைய அரசியல் சவால். இதை எப்படி எதிர்கொள்வது?

இன்றைய நிலையில் கடந்தகாலத்தில் தமிழ்மக்கள் கொண்டிருந்த தவறான தமிழ் பாசிச சிந்தனை முறையில் இருந்து வெளிவராமல் மாற்று சிந்தனை முறை ஒன்றை தமக்குள் உள்வாங்காமல் சிங்களப் பேரினவாத பாசிசத்தை இனி ஒருநாளும் எதிர்கொள்ள முடியாது.

கடந்தகால தமிழ் பாசிசம் தன் இனவிடுதலையாக காட்டிய தமிழீழத்தை அன்னிய உதவிகள் முதல் நவீன ஆயுதங்கள் மூலம் அதை அடையமுடியும் என்றனர். இது கடந்த 30 வருடத்தில் தோல்விபெற்று நிற்கின்றது. ஆனால் அந்த சிந்தனை முறை இன்னமும் முறியடிக்கப்படவில்லை. மாறாக பல வழியில் அவை தொடருகின்றது. மறுபக்கத்தில் இதில் நம்பிக்கை இழந்துவிடும் போக்கு அரசியலை துறந்தோடுதலாகவே நிகழ்கின்றது.

இந்த நிலையில் மாற்று சிந்தனை முறையும் இதை எதிர்கொள்ளும் மாற்று அரசியல் அடிப்படையும் பொதுவான அரசியல் தளத்தில் அறவே கிடையாது. சிந்தனை வறட்சியும் பிற்போக்குத்தனங்களும் தமிழினத்தில் தலைவிரித்தாடுகின்றது. இதுதான் இன்று தமிழினம் எதிர்கொள்ளும் சமூக எதார்த்தமும் மிகப்பெரிய சவாலுமாகும்.

இது மாற்றப்படாத வரை தமிழினத்துக்கு விடிவு கிடையாது. தமிழினம் தன்னைத்தான் ஒரு ஒடுக்கப்பட்ட ஒரு இனமாக உணர்ந்து அதற்காக தான் போராடாத வரை அதனால் தன் எதிரிக்கு எதிராக ஒடுக்கப்பட்ட சிங்கள மக்களை தன்னுடன் சேர்த்துக் கொண்டு முன்னேற முடியாது. அதுபோல் உலக ஒடுக்கப்பட்ட மக்களை தமக்கு ஆதரவாக அரவணைத்து செல்ல முடியாது.

தமிழ் மக்கள் தங்களைத் தாம் விமர்சனம் சுயவிமர்சனம் செய்யாமல் தங்களை ஒடுக்கப்பட்ட மக்களாய் உணர்ந்து பாசிச வழியற்ற சிந்தனை ஊடாக ஆயுதபாணியாகாமல் தம் மீதான ஒடுக்குமுறையை இனி ஒருநாளும் எதிர்கொள்ளமுடியாது. இதுதான் இன்றைய எதார்த்தம் சார்ந்த உண்மை. சமூகம் மீது அக்கறை கொண்டோர் இதைப் புரிந்து கொண்டு இதை மாற்றியமைக்கும் வண்ணம் செயலாற்றக் கோருகின்றோம்.

பி.இரயாகரன்
18.07.2009

## மக்களைப் பிளவுபடுத்தும் இனவாத அரசியல்...

சிங்களஅரசினை மூச்சுக்கு மூச்சு பேச்சிலும், எழுத்திலும் இனவாத அரசு என்று குற்றம் கூறிக் கொண்டிருக்கும் தமிழ்கட்சிகளும், தமிழ் அரசியல்வாதிகளும் இனவாதம் பேசியே அப்பாவி மக்களை ஏமாற்றி தங்கள் அரசியற் பிழைப்பினை நடாத்திக் கொள்கிறார்கள். ஈழத்திலும், புலம்பெயர்ந்த நாடுகளிலுமுள்ள தமிழ் அரசியல்வாதிகள் வெறும் இனவாதத்தினை வைத்தே தங்கள் அரசியலை ஓட்டுகிறார்கள். மக்களுடைய அடிப்படைப் பிரச்சனைகளை மறைத்து அவர்களை ஏமாற்றி தங்கள் அரசியற் பிழைப்பினை நடாத்த இந்த இனவாத அரசியலை பயன்படுத்துகிறார்கள்.

தங்களை கல்விமான்களாகவும், புத்திஜீவிகளாகவும் மக்கள் மத்தியில் காட்டிக் கொள்ளும் பல படித்த முட்டாளும் இந்த இனவாதத்தினை தூண்டுவதில் பெரும்பங்கினை வகிக்கிறார்கள். இந்த இனவாத அரசியல் இன்று நேற்று அல்ல ஆரம்பகாலங்களில் இருந்தே சில தமிழ்க்கட்சிகளாலும், தமிழ் அரசியல்வாதிகளாலும் மக்களை இலகுவாக கவருவதற்காக கையாளப்படும் முற்றிலும் தவறான அரசியற் போக்காகும். சிங்கள இனவெறி அரசு சிங்கள அப்பாவி மக்களை ஏமாற்றி, சிங்களக் காடையர்களை அப்பாவித் தமிழ்மக்களுக்கு எதிராக தூண்டிவிட்டு அந்த அப்பாவி தமிழ்மக்களை அழித்தொழிக்கும் போக்கினைத் தான், தமிழ் அரசியல்வாதிகளும் முன்னெடுக்கிறார்கள். அவர்களிடம் பலம் போதாமையால் சிங்கள மக்கள் தப்பிப் பிழைத்திருக்கிறார்கள். இந்த இனவாத தமிழ் அரசியல்வாதிகளிடம் பலமிருந்தால் சிங்கள அப்பாவி மக்களுடைய வாழ்க்கை அதோ கதிதான்.

ஆரம்பத்திலிருந்து தமிழரசுக்கட்சி, மற்றும் தமிழ்கட்சிகளாலும் தமிழ் அரசியல்வாதிகளாலும் வளர்ந்தெடுக்கப்பட்ட இந்த இனவாத அரசியல் பின்னர் புலிகளால் முன்னெடுக்கப்பட்டது. சிங்கள அப்பாவி மக்கள் மீதான தாக்குதல், பரம்பரை பரம்பரையாக வாழ்ந்த மண்ணைவிட்டு அப்பாவி முஸ்லீம் மக்கள் விரட்டியடிக்கப்பட்டது புலிகளின் இனவாத அரசியலின் வெளிப்பாடே. இன்று புலிகளின் போராட்டத் தோல்விக்கு புலிகளின் இந்த இனவாதப் போக்கு முக்கிய பங்கினை வகிக்கிறது. சிங்கள, முஸ்லீம் மக்களின் ஆதரவினை புலிகள் பெறமுடியாது போனதிற்கு இந்தப் போக்குத்தான் காரணம். முஸ்லீம் மக்கள் மற்றும் சிங்கள மக்கள் எங்கள் போராட்டத்திற்கு ஆதரவு தரவில்லை என்றால் அது அரசியலை முன்னெடுத்தவர்களின் தவறே. இதை திரிபுபடுத்தி மக்களை எதிரிகளாகக் காட்டி மக்கள் மீது பழியைப் போட்டு இனங்களிற்கிடையே முரண்பாட்டினை ஏற்படுத்தி தங்களுக்கு அரசியல் இலாபம் தேடுவதே இந்த இனவாத அரசியலின் நோக்கமாகும்.

இந்த இனவாத அரசியல் முன்னெடுப்பினையும், கொள்கையினையும் தான் இன்று புலம் பெயர்ந்து வாழும் அரசியல்வாதிகளும் மக்களை ஏமாற்றிப் பிழைக்க

கையாளுகின்றார்கள். ஆரம்பத்தில் இனவாத அரசியலை தீவிரமாக முன்னெடுத்த புலிகள் தங்களின் இறுதிக் காலகட்டத்தில் அதனைக் கொஞ்சம் தளர்த்திக் கொண்டார்கள். அதற்கு புலிகள் மக்கள் மேல் கொண்ட கரிசனை காரணமல்ல. வெளிநாடுகள் தங்களை பயங்கரவாத இயக்கமென்று மேலும் ஓரம் கட்டித் தள்ளி விட்டு விடுவார்களே என்ற அவர்களின் பயமே அதற்குக் காரணமாகும். துப்பாக்கிகளின் மேலிருந்த நம்பிக்கை தளரத் தொடங்கியவுடன் வெளிநாடுகளை முற்றிலும் எதிர்பார்க்க வேண்டிய நிலைக்கு புலிகள் தள்ளப்பட்டார்கள். முஸ்லீம் மக்களுக்கு தாங்கள் செய்தது தவறு தான் என்று பாலசிங்கம் மூலம் ஒப்புவிக்க முயற்சித்ததும் இதனால் தானே ஒழிய முஸ்லீம் மக்கள் மீது கொண்ட அக்கறை இதற்குக் காரணமில்லை.

புலிகள் ஆயுதத்தையும், வெளிநாடுகளையும், தமிழ் நாட்டு பொறுக்கி அரசியல்வாதிகளையும் நம்பியளவிற்கு தங்களோடிருந்த மக்கள் சக்தியை நம்பியதில்லை.

நியாயமான போராட்டத்திற்கு ஒடுக்கப்படும் மக்கள் ஒரு போதும் எதிரானவர்களாக இருக்க மாட்டார்கள். எந்த இனமக்களாக இருந்தாலும் இதுதான் உண்மைநிலை. மக்களைப் பிளவுபடுத்தும் அரசியலை முன்னெடுப்பது கையாலாகாத அரசியல்வாதிகள் முன்னெடுக்கும் கீழ்த்தர அரசியல் நடவடிக்கையாகும். மக்களின் உணர்வினை தூண்டி மக்களை இலகுவாக ஏமாற்றிப் பிழைப்பு நடாத்தக் கூடியது தான் இந்த இனவாத அரசியல். ஒரு சிறுபான்மை இனத்தின் தேசிய இனப்பிரச்சனையினை இனவாத அரசியலினால் தீர்த்து வைக்க முடியாது. மக்களாகிய நாங்கள் இதைப் புரிந்து கொள்ளாது விட்டால் காலம் பூராகவும் நாங்கள் ஏமாளிகளாக தான் இருக்க வேண்டும்.

எங்களுடைய எதிரி பேரினவாத அரசே ஒழிய பொதுமக்களல்ல. ஒடுக்கப்படும் எல்லா மக்களையும் ஒன்றிணைத்துக் கொள்வதன் மூலம் தான் இனவாத அரசினை எதிர் கொள்ள முடியும். எங்கள் பிரச்சனைக்கும் தீர்வு காண முடியும்.

- தேவன்.

# அரசியல் வேலைத்திட்டமின்றி பொது வேலைத்திட்டம் சாத்தியமில்லை

புலிகளின் அழிவின் பின் பலரிடம் எழுந்துள்ள கேள்விகளில் ஒன்று, ஏன் மாற்றுக் கருத்துக் கொண்டவர்கள் எல்லோரும் இணைந்து ஒரு பொது வேலைத்திட்டத்தின் அடிப்படையில் இயங்க முடியாது? இந்தக் கேள்வியை இன்று பலர் எழுப்பி வருகின்றனர். இவ்வாறு இயங்குவதற்கு, என்ன தடையாக இருக்கின்றது? இது எந்த வகையில் அது சாத்தியமாகும் என்பதை முதலில் நாம் கண்டறிவது அவசியம். அதனடிப்படையிலான ஒரு பார்வை அவசியமாகின்றது.

புலம் பெயர்ந்த நாடுகளில் இயங்கிக் கொண்டிருந்த , இயங்கிக் கொண்டிருக்கும் முற்போக்கு□ சக்திகள் என்று தம்மை அடையாளப்படுத்தியவர்களை, நாம் பல பிரிவாக வகைப்படுத்தலாம்.

1.அரசு எதிர்ப்புடன், புலியின் அழிவின் பின் அந்தத் தலைமைத்துவத்தை எற்கத் துடிப்பவர்கள்.

2.புலி எதிர்ப்பை மாத்திரம் அரசியலாக வைத்திருந்தவர்கள். அதன் அழிவின் முன்னும், பின்னும் அரசு சார்புநிலை எடுத்தவர்கள்.

3.புலி - அரசு எதிர்பையும், சமூக சார்ந்த சித்தாந்தங்களையும் அரசியலாக கொண்டிருந்தாலும், தம்மை பிரமுகர்களாக்குவதற்காக தமிழ்நாட்டு பிற்போக்கு அரசியல்வாதிகளுடன் இணைந்து செயல்பட முற்பட்டவர்கள்.

4.புலி-அரசு எதிர்ப்பிற்கு அப்பால், சமூக சித்தாத்தத்தை கொள்கையாக கொண்டிருந்த பலர், சிறு உதிரியான ஆனால் ஒத்த கோட்பாடற்ற குழுக்களாக மாறி உள்ளவர்கள்.

5.புலி - அரசு எதிர்பிற்கு அப்பால் சமூக சித்தாந்தங்களை அரசியலாக கொண்டிருந்த போதும், ஒரு குழுவாக மாறாது தொடர்ந்தும் அடையாளத்தை தக்கவைக்கும் உதிரியாக இருப்பவர்கள்.

இப்படி புலம் பெயர் நாடுகளில் இருப்பவர்களைப் பொதுவாக பிரித்துப் பார்க்கலாம். இதில் முதல் மூன்று வரையறைக்குட்பட்டவர்களைப் பற்றி, நாம் கவனத்தில் கொள்ளத் தேவையில்லை. காரணம் இவர்கள் தமது சுய விருப்பிற்கும், தம்மை பிரமுகர்களாக காட்டுவதற்குமாகவே, அரசியலை செய்பவர்கள். கவிதைகள், கதைகள், வாய்சாவடல்களுக்கு அப்பால், இவர்களிடம் மக்கள் பற்றிய சிந்தனை என்பது தன்நலம் கருதியதாகவே உள்ளது. இதனால் இவர்களை ஒரு புறமாக வைத்துவிட்டு 4ம் 5ம் வகையினர் பற்றி பார்ப்போம்.

முதலில் சிறு குழுக்களாக இயங்கிக் கொண்டிருப்பவர்களைப் பற்றி பார்ப்போம். இக்குழுக்கள் தமக்கிடையே ஒரு ஐக்கியத்தை கொண்டுவருவதற்கும், ஒரு பொது வேலைத்திட்டத்தின் அடிப்டபடையில் வேலை செய்வதற்கும் என்ன தடையாக உள்ளது? இந்தக் கேள்வியை முன்வைத்து, அதற்கான பதிலை தேடினால் கிடைப்பது, ஒவ்வொரு குழுக்களிடமும் தமக்கேயான அரசியல் கொள்கையும் திட்டம் இன்மையோ அல்லது அதை பகிரங்கமாக வைத்து செயற்பாடமையை இனம் காணமுடியும். திட்டம் இல்லாமலே அல்லது தங்கள் கருத்துகளை வெளிப்படையாக முன்வைக்காமலே இருக்கும் பட்சத்தில், அவர்களின் அரசியல் நிலைப்படும் மகாவவி:ஃஃறறற.னிகசழவெ.உழஅஃறி-யனஅளைஃ ிழளவ.ிரி?யஉவழைஹெநனவைஞிழளவஜ7642ரூஅநளளயபநஜ10கள் முன் வெளிப்படையாக இல்லாமல் போய் விடுகின்றது. ஒவ்வொரு விடையங்கள் தொடர்பாகவும், எப்படி எதன் அடிப்படையில் பார்கின்றார்கள் என்பது, தெரியாமல் போய் விடுகின்றது. தனிப்பட்ட நபர்கள் மத்தியில், கதைப்பதை கொண்டு, குழுக்களுக்கு இடையில் பொது ஐக்கியத்தை பேண முடியாது. வெறுமனே தம்மை முற்போக்கு குழுக்களாக காட்டுவதன் மூலம் மாத்திரம், ஒரு பொது வேலைத் திட்டத்தை எழுந்தமானமாக முன்வைக்க முடியாது. இதைவிட புலம்பெயர் நாடுகளில் வாழ்பவர்களில் பலர் எதோ ஒரு இயக்கத்தில் இருந்தவர்களாகவோ அல்லது அதன் தொடர்பு கொண்டவர்களாகவோ காணப்படுவதால், அவர்கள் சார்ந்த இயக்கங்களின் கடந்த கால தவறுகள் மற்றும் தோல்விகளுக்கான சுயவிமர்சன ரீதியான பார்வை அவசியமாகின்றது. இதனை சாதாரண தரத்தில் இயக்கத்தில் இருந்தவர்களிடம் எதிர்பார்க்கவில்லை. மாறாக முக்கிய பொறுப்புக்களிலும், தலைமையிலும் இருந்தவர்களிடம் எதிர்பார்க்க வேண்டியது மிகவும் அவசியமானதாகும்..

போராட்டத்தில் ஈடுபட்ட ஒவ்வொருவரும் தமது சுய கருத்தையோ அல்லது அவர்கள் இருந்த அமைப்பின் மீதான விமர்சனத்தையோ முன்வைக்காதவிடத்து, அவர்கள் அவ்வமைப்பின் மீது தற்போதும் பற்றுக் கொண்டவர்களாகவே கருதப்படுவர். இதன் கடந்தகால மக்கள் விரோத செயற்பாடுகளை மூடிமறைப்பவர்களாகவே பார்க்கப்படுவர். சிலர் கூறலாம், நான் விலகி விட்டேன். பிரிந்துவிட்டேன், அவர்களைப் பற்றி எமது குழுவிக்குள் கருத்தை முன்வைத்துவிட்டேன். எனவே பகிரங்கமாக வைப்பது என்பது சாத்தியமற்றதும், ஆபத்தானதும் என்று கூறுவது, ஒரு சந்தர்ப்பவாதமாகவே பார்க்கப்படவேண்டும். ஒரு சிலருக்கு, அதுவும் தான் சார்ந்தவர்களுக்கு மட்டும் கூறினால் போதும் என்றால், இவர் விடுதலை வேண்டிப் புறப்பட்டது அவர்கள் (அக்குழுவிற்கு) மட்டுமானதா! இல்லை. தமிழ் மக்கள் உட்பட, ஒடுக்கப்பட்ட மக்களுக்கானது அல்லவா போராட்டம். அவ்வாறாயின் அதை மக்கள் மத்தியிலேயே முன்வைப்பது அவசியமானது. பாதுகாப்புக் காரணம் என்று சொல்பவர்கள், தம்மை மூடி பாதுகாக்க சொல்லும் நொண்டிச்சாட்டு. இவர்கள் வசிப்பது புலம்பெயர் நாடுகள். அதிலும் இவர்களுடைய பிரச்சனைகள் நடந்தது, 20 வருடங்களுக்கு மேலாகின்றது இப்படி இருக்க, இவர்களுக்கு பாதுகாப்பு

பிரச்சனை என்பது தங்களது கடந்த கால தவறுகளை மூடிமறைக்கும் செயலாகும். பாதுகாப்பு பிரச்சனை, இதனால் நாம் வெளிப்படையாக எதையும் கூற முடியாது போன்ற வாதங்கள், தமது சந்தர்ப்பவாத அரசியலை பாதுகாக்க சொல்லப்படும் வெறும் கோசங்களே.

இவ்வாறு எந்த ஒரு அடிப்படை அரசியலையும் செய்யாது, தனிமையில் பொது வேலைத்திட்டத்தின் கீழ் சேர்ந்து இயங்குவது என்பது புலி, ஈபிஆர்எல்வே, ஈரோஸ், ரெலோ வின் பொது வேலைத்திட்டம் போன்றதே. ஒவ்வொன்றும் மற்றத்தை எவ்வாறு அழிக்கலாம் என்ற பாணியிலானதாகவே இருக்கும்.
பொது வேலைத் திட்டத்திற்காக வருவதற்கு முன் ஒவ்வொரு குழுவும், தமக்காக சுய வேலைத் திட்டத்தையும், சமூக போக்குகள் மீதான கருத்தையும் மக்கள் மத்தியில் முன்வைக்க வேன்டும். அப்படி வைக்கப்படும் பட்சத்தில், அதிலிருக்கும் பொதுத் தன்மையை மையமாகக் கொண்டே, நாம் பொது வேலைத்திட்டத்தை உருவாக்க முடியும்.

அது தான் ஆரோக்கியமானதாகவும், ஐக்கியமானதாகவும், பலம் வாய்ந்ததாகவும் காணப்படும்.

ஒரு பொது வேலைத் திட்டத்தின் அடிப்படையில் ஒன்றுக்கு மேற்பட்ட குழுக்கள் சேர்ந்து இயங்குவதானால், அங்கு முதலில் ஒவ்வொரு குழுவும் தமக்கேயான அரசியல் திட்டத்தை முன்வைக்கவேண்டும். அவ்வாறு முன்வைக்கப்பட்ட அரசியல் திட்டத்தில், அக்குழுக்கள் சமூகத்தில் உள்ள பிரச்சனைகளை எவ்வாறு பார்க்கின்றனர் அனுகுகின்றனர் என்பதை மையப்படுத்தி, அதிலிருந்து ஒரு பொது அரசியல் திட்டத்தை உருவாக்கி வேலைசெய்ய முடியும். இதை விடுத்து மூடிமறைத்து, எமக்கு இடையில் தனிமையில் ஒரு பொது வேலைத்திட்டத்தில் இணைந்து வேலை செய்வோம் என்றால் எதன் அடிப்படையில்? உதாரணங்களாக இலங்கை அரசை எந்தவகையில் பார்ப்பது? பாசிச அரசாகவா? பயங்கரவாதத்தை ஒழித்த தேசிய அரசாகவா? தனது நாட்டையே மற்றவர்களுக்கு தாரைவார்த்துக் கொடுக்கும் தரகு முதலாளித்துவ அரசாகவா? இவ்வாறு எந்த வகையில் வகைப்படுத்துகின்றனர் என்பதை வைத்துத்தான், ஒரு பொது வேலைத்திட்டத்தை நாம் உருவாக்க முடியும்.

தனிநபர்களாக இருப்பவர்களைப் பற்றி பார்ப்போமாயின், இதில் இன்று புலம்பெயர் நாடுகளில் பலர் வாழ்கின்றனர். இவர்களை எந்த அடிப்படையில் பொது வேலைத்திட்டத்தின்கீழ் கொண்டுவருவது என்ற முக்கிய கேள்வி உண்டு.
இன்று முற்போக்கு சக்திகளாக இருக்கும் உதிரிகளும், ஒரு விதத்தில் தமிழ் மக்களுக்கு பிழையான பாதையையே காட்டுகின்றனர். என்னவெனின் அமைப்புருவாகாமல் இருப்பதன் மூலம், தமது அடையாள தனித்துவத்தை மட்டும் பாதுகாப்பதுடன், இவர்களின் இயக்கம் என்பது மட்டுப்படுத்தப்பட்டதாகவே இருக்கும்.

எந்த புரட்சிகர சிந்தனையைக் கொண்டிருந்தாலும், அமைப்புருவாக்கம் என்பது அவசியமாகின்றது. எற்கனவே உள்ள அமைப்புகளுடனோ அல்லது தமக்கு தனியான அமைப்பாகவே தம்மை வெளிப்படுத்துவதன் மூலம் மட்டுமே, மக்கள் மத்தியில் சென்று வேலை செய்யமுடியும்.

இக்கட்டுரையின் ஒட்டுமொத்தக் கருத்தும் பொது வேலைத்திட்டம் என்பது ஒவ்வொரு குழுவும், தமக்கான வேலைத்திட்டத்தை முன்வைத்து அதனடிப்படையில் பொது தன்மையை உருவாக்குவதே. அன்றி அது சாத்தியமற்ற ஒன்று. குழுவல்லாத தளத்தில் உள்ளவர்கள் அல்லது தனிநபர்கள், தனிநபர்களாக இயங்கும் அமைப்பின் திட்டத்தை எற்று இதில் இணைந்து வேலை செய்ய முடியும்.

சீலன்

## தனி மனித சிந்தனையும் "சமூகமும்"!

தனி மனிதர்களின் கூட்டு ஒரு சமூகமாகிறது. ஓவ்வொரு சமூகத்தினை சார்ந்த மக்களிடமும் மொழி, கலை கலாச்சாரம், பண்பாடு போன்றவை மாறுபட்டு காணப்பட்டாலும் பாதிப்புகள் ஒன்றாகத்தான் இருக்கிறது. நாங்கள் சொந்த நாடற்ற சிறுபாண்மையினம் என்று பார்க்கும் போது எங்களுடைய சுயநிர்ணய உரிமை அங்கீகரிக்கப்பட வேண்டுமென்பதில் மாற்றுக் கருத்து இருக்க முடியாது.

எங்களைப் போன்று உரிமைக்காக போராடுகின்ற சிறுபாண்மையின மக்கள் பலநாடுகளில் இருக்கின்றார்கள். இந்த மக்களும் இன்னொரு அரச அதிகாரத்தினால் அடக்கி ஒடுக்கப்படுபவர்களே. ஆனால் அதே நேரத்தில் சொந்த நாட்டிலே தனது சொந்த அரசின் கீழ் வாழும் மக்களின் நாளாந்த வாழ்க்கையினைப் பார்க்கும் போது, இரண்டு மக்களினதும் பிரச்சனைகள் சொந்தநாடு, சொந்த அரசு என்ற ஒன்றைத் தவிர மற்ற எல்லா நிலைகளிலும் ஒன்றுபட்டே காணப்படுகிறது. அரச அதிகாரத்தினால் மக்கள் பல வழிகளில் சுரண்டப்படுவதும் அடக்கி ஒடுக்கப்படுவதும் எல்லா மக்களுக்கும் பொதுவானதாகவே காணப்படுகிறது. இந்த நிலைமையினைப் பார்க்கும் போது, ஒரு மனிதனுக்கு சொந்த நாடு மட்டும் அந்த மனிதனுடைய பிரச்சனைகளைத் தீர்த்துவிடாது என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். மனிதனுடைய வாழ்க்கையினை முடிவு செய்வது அந்த நாட்டு அரசியல். இந்த அரச அதிகாரத்திலே தனிமனிதனுடைய சிந்தனையும் முடிவும் இங்கு முக்கிய பங்கினை வகிக்கின்றது.

சாதாரண நடைமுறை வாழ்க்கையினை எடுத்து நோக்கினால் தனி மனிதனுடைய தவறான சிந்தனையும் செயற்பாடும் சமூகத்தின் ஒவ்வொரு அங்கத்தையும் ஏதோ ஒருவகையில் தாக்கத்தினை ஏற்படுத்துகிறது. உதாரணமாக களவு, கொலை, கற்பழிப்பு, குடும்பப்பிரிவு போன்றவற்றை எடுத்துக் கொள்ளலாம். இங்கு ஒரு

தனிமனிதன் அல்லது குடும்பமோ□ பெண்கள், குழந்தைகளோ பாதிக்கப்படுகிறார்கள். இதனை நாங்கள் ஒருவனுடைய தனிப்பட்ட பிரச்சனை என்று ஓரம் தள்ளி வைத்துவிடுகிறோம்.

இதுவே ஒரு அரசியல்வாதியோ ஒரு பொறுப்பான பதவியில் இருப்பவனே தவறு செய்யும் போது கூட்டு மொத்த சமூகத்தினையோ, நாட்டினையோ, மக்களையோ பாதிப்புக்குள்ளாக்குகிறது. ஆனால் இங்கும் நாங்கள் மௌனமாக இருக்கிறோம் அல்லது நழுவல் போக்கினால் பின்வாங்கிக் கொள்கிறோம், இல்லாவிடின் சுயலாபத்திற்காக அவர்களின் வால்பிடிகளாக மாறி அவர்களுடைய தவறுகளை நியாயப்படுத்த முயல்கிறோம்.

இந்த தவறான அரசியல்வாதிகளை, தவறான தலைமைத்துவத்தை வளர்த்து தவறானவர்கள் கையில் அதிகாரத்தினை வழங்கியவர்கள் நாங்கள் தான், எங்கள் அறியாமை தான். கடந்தகால உலக அரசியலினைப் பார்க்கும் போது கிட்லர் அவனது தனிப்பட்ட சிந்தனையினால் உலகையே அழிவுப் பாதைக்கிட்டுச் செல்லும் பாசிச சர்வாதிகாரியானான். கிட்லரின் அதே தன்மை கொண்ட நவீன அரசியல்வாதி மகிந்தாவின் தனிமனித □மகிந்தசிந்தனை□ பல்லாயிரக்கணக்கான அப்பாவித் தமிழ் மக்களை அழித்தொழித்து தமிழினத்திற்கு பேரழிவினை ஏற்படுத்தி இன்று மொத்த நாட்டையும் சீரளிக்கிறது.

இந்த மக்கள் அழிவு அரசியல் கிட்லரோடும், மகிந்தாவோடும் முடிந்துவிடப் போவதில்லை. நாங்கள் விழிப்படையும் வரை தொடர்ந்து கொண்டே இருக்கும். எங்களோடு இருக்கும் கிட்லர்களையும், மகிந்தாக்களையும் நாங்கள் இனங் கண்டு கொள்ள வேண்டும். எல்லாருமே அரசியலில் கால் வைக்கும் போது ஆரம்பத்தில் சாதாரண அப்பாவி அரசியல்வாதிகளாகத் தான் இருப்பார்கள். மக்கள் நலன் சார்ந்திராத இவர்களது தவறான அரசியற் போக்கு, பதவி, புகழ், அதிகாரம், சுயநலம் இவர்களை சர்வாதிகாரிகளாக பாசிஸ்டுகளாக மாற்றிவிடுகிறது. இதுவே காலப் போக்கில் அப்பாவி மக்களுக்கு பேரழிவினை ஏற்படுத்துகிறது.

எங்கள் ஒவ்வொரு தனிமனிதனுடைய பொறுப்பற்ற தன்மையும், அறியாமையும், தவறான சிந்தனையும் தான் இப்படியான பாசிஸிட்டுகள், சமூக விரோதிகள் உருவாகக் காரணமாக அமைகிறது.

கடந்தகால புலிகளின் போராட்டத்தினைப் பார்க்கையில் அவர்களோடு தனிமனித சிந்தனையும் தன்னிச்சையான முடிவுகளும், செயற்பாடுகளுமே மேலோங்கியிருந்தது. மக்கள் நலன்சார்ந்த பொதுவேலைத் திட்டமோ பரந்தளவிலான திட்டமிடலோ இருக்கவில்லை. பணம் சேகரித்தல், இராணுவ தாக்குதல்கள் அதற்காக விருப்பத்திற்கு மாறாக சிறுவர் சிறுமிகளைப் படையிலே சேர்த்தல் போன்று குறுகிய திட்டமிடல் தான் புலிகளோடிருந்தது. இந்த தவறான போக்கு இயக்கத்திற்குள்

தனிமனித ஆதிக்கத்தினையும் அதிகாரத்தினையும் வளர்த்ததோடு இயக்கதிற்குள் பிளவுகளும், விலகல்களும் வரக்காரணமாயிற்று. இன்று அப்பாவிப் போராளிகள் மாவீரர்களது எதிர்பார்ப்புகள் எல்லாம் தவிடுபொடியாகி, இன்று தமிழ் மக்களது அன்றாட வாழ்க்கை கிள்ளுக் கீரையாக துரோகக்கும்பல்களின் அதிகாரப் பிடிக்கு கைமாற்றப்பட்டுள்ளது. அந்த மக்களின் இயலாமையினை அங்குள்ள அரசியல்வாதிகள் தங்கள் நலன்களுக்காக பயன்படுத்துகிறார்கள். தமிழ் மக்களது போராட்ட உணர்வினை வேறறுப்பதற்கான பல யுக்திகளும் நடவடிக்கைகளும் அரசினால் மேற்கொள்ளப்படுகிறது. இளம் சமூகத்தினரின் சிந்தனையும் செயல்களும் தவறான பாதைக்கு திசை திருப்பப்பட்டு அவர்களுடைய கல்வி மழுங்கடிக்கப்பட்டு இளைஞர்களின் எதிர்காலத்தினை சீரழிவிற்கு கொண்டு செல்கிறது.

ஒவ்வொரு தனிமனிதனுக்கும் சமூகப் பொறுப்பு உள்ளது. நாம் நமது குடும்பம் என்று மட்டும் இருந்துவிடாமல் இந்த அப்பாவித் தமிழ்மக்களின் வாழ்க்கை, எமது இளம் சந்ததியினரது எதிர்காலம் வளம்பெற சரியான அரசியலினை இனம் கண்டு அதன் அடிப்படையில் செயற்பட வேண்டிய கடமை ஒவ்வொரு தனிமனிதர்களாகிய எமக்கு உள்ளது. எங்கள் மக்களுக்காக நாம் ஒன்றிணைந்து எங்களால் முடிந்த வகையில் பங்காற்றுவோம்.

தேவன்

## எம்முன் உள்ள வேலைகளும் கடமைகளும்

புலிகளை சிங்களப் பேரினவாதம் வெற்றிகண்டு ஒருவருட காலமாகின்றது. இன்றைய நிலையில் எம்முன் உள்ள கடமைகள் என்ன என்பதை நாம் வகுத்து, அதன் அடிப்படையில் நாம் வேலைகளை செய்ய ஆரம்பிப்பது மிகவும் முக்கியமான வரலாற்றுக் கடமையாகின்றது.

முன்பு தமது சுய திருப்திக்காகவும், மக்கள் முன் தம்மை எழுத்தாளர்கள் என்று அடையாளப் படுத்துவதற்காகவும் நடத்தப்பட்ட சஞ்சிகைகளால் சாதிக்க முடிந்தது, என்ன என்பது இன்று கவனிக்கப்பட வேண்டியுள்ளது. தம்மை தலித்தியவாதிகள் என்றும், பெண்ணிலைவாதிகள் என்றும், புத்திஜீவிகள் என்றும், கவிஞர்கள் என்றும், கலை இலக்கியவாதிகள் என்றும் சமூகத்தின் முன் அடையாளம் காட்டியவர்கள், அதற்குள் மட்டும் முடங்கிக் கிடக்கும் பலரை நிராகரித்து முன் செல்ல வேண்டியுள்ளது. சமூக அக்கறையுடன், தமிழ் சமூகத்தைச் சார்ந்து முழு ஆய்வினை முன்னெடுக்க வேண்டிய நிலையில் இன்று நாம் உள்ளோம்.

அதனடிப்படையில் முதலில் நாம் யார்? நாம் எங்கு நிற்கின்றோம்? இதைப் பற்றிய விரிவான ஆய்வு அவசியமாகின்றது. இதை எந்த நிலையில் இருந்து செய்ய

வேண்டும் என்பதற்காக, இதை முன் வரைவாக இதை முன்மொழிகின்றேன்.

முன்பு தமிழ் தேசியத்தை முன்னிறுத்தி இயங்கிய ஒவ்வொரு இயக்கங்கள் தொடர்பான ஆய்வு அவசியமாகின்றது. ஒவ்வொரு இயக்கமும் தமிழீழக் கொள்கையை முன்னிறுத்தி போராடிய போதிலும், அவற்றில் என்ன முரண்பாடுகள் இருந்தன என்பதை வெளிக்கொண்டு வரவேண்டும். அத்துடன் இவை ஒவ்வொன்றும் எவ்வாறு உருப்பெற்று, எந்த அரசியலின் அடிப்படையில் இயங்கின என்னதையும் துல்லியமாக ஆய்வு செய்யவேண்டும் இதில் குறிப்பாய் இடது அமைப்புக்கள் பற்றிய ஆய்வு மிக முக்கியமானது.

முன்னைய அமைப்புக்களில் இருந்து பிரிந்து, மீண்டும் அமைப்புக்களை உருவாக்கி போராடப் புறப்பட்ட தீப்பொறி போன்ற இயக்கங்கள் பற்றிய ஆய்வுகள் மிகவும் முக்கியமானது. இவர்கள் எதற்காக ஒரு அமைப்பில் இருந்து பிரிந்தார்களோ, அந்த பிரிவின் ஊடாக எந்தளவில் இவர்கள் வெற்றி கண்டார்கள் என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டியுள்ளது.

இன்றும் தமிழ் சமூகத்தில் தொடர்ந்தும் தலைவிரித்தாடும் சாதி மற்றும் பிரதேசவாதம் பற்றிய ஆய்வு மீண்டும் அவசியமாகின்றது. புலிகளால் பலாத்காரமாக சாதி மற்றும் பிரதேசவாதம் ஒரு காலகட்டத்தில் வெளித்தெரியாத வண்ணம் வைக்கப்பட்டு இருந்தாலும், இன்று அது மீண்டும் தலைதூக்கி உள்ளது. ஏன் முன்புகூட கிராமங்களில் இயக்கங்களின் ஆதரவு என்பது, சாதி அடிப்படையிலேயே இருந்தது. எனவே இது தொடர்பான ஆய்வுகளும் முக்கியமாகின்றது.

ஒரு சாதிக்குள் கூட நான் பணக்காரன் படித்தவன் என்ற பார்வையும், படிக்காதவர்கள் கூலி வேலை செய்பவர்கள் என்ற பார்வையும் உள்ளது. இதை பற்றிய ஆய்வும் அவசியமாகின்றது.

கடந்த 30 வருட காலத்தில் எமது போராட்டத்தில் நடந்தது என்ன? எத்தனை பேர் இதன் காரணமாக உயிரிழந்தார்கள்? அதில் எத்தனை குழந்தைகள் அனாதையாக்கப்பட்டனர்? எத்தனை பெண்கள் விதவைகளாக்கப்பட்டனர். இதில் 30 வயதுக்குட்பட்டவர்கள் எத்தனை பேர்? இவர்களின் இன்றைய நிலையென்ன? வன்னிக்குள் இறுதிக் காலகட்டத்தில் புலிகளால் தமது பிள்ளைகள் கடத்தப்படுவார்கள் என்ற பயத்தில் சிறு வயதிலேயே பல திருமணங்கள் நடந்தேறின. இவற்றால் ஏற்பட்ட பாதிப்புகள் என்ன? இப்படி பலவற்றை ஆய்வுக்குட்படுத்த வேண்டியுள்ளது.

தமது அவயவங்களை இழந்து தவிக்கும் பல்லாயிரக்கணக்கானோர், இன்று இலங்கையில் வாழ்கின்றனர். இவர்கள் பற்றிய ஆய்வும் இன்று அவசியமாகின்றது பலர் இன்றும் அகதிகளாகவே வாழ்கின்றனர் இவர்களின் வாழ்க்கை என்பது

எப்போதுமே கேள்விக்குறியாக உள்ளது எனவே இவர்கள் பற்றிய பார்வையும் அவசியமாகின்றது.

துரோக இயக்கங்களாக மாறிப்போன பழைய இயக்கங்கள் இன்று என்ன செய்கின்றன? இவர்கள் எந்தளவில் தமிழ் சமூகத்துக்கு துரோகம் இழைக்கின்றனர் என்பதைப் பற்றிய பார்வையும் அவசியமானது. இவர்கள் எந்தளவு நல்ல காரியங்களை செய்துள்ளார்கள் என்றும் பார்க்க வேண்டும்.

இவ்வாறு எமது சமூகத்தில் உள்ள அத்தனை விடயங்களையும் முழுமையான ஆய்விற்கு உட்படுத்துவதன் ஊடாகவே, எமது மக்களுக்கான பரந்துபட்ட வர்க்க அடிப்படையிலான போராட்டத்தை முன்னெடுக்க முடியும்.

இவற்றை விட பழைய இயக்கங்களில் இருந்து வெளிநாடுகளில் குடியேறி அவர்களால் உருவாக்கப்பட்ட அமைப்புகள், எவ்வாறு காலாவதியாகின என்பதையும் நாம் ஆராயவேண்டியுள்ளது.
இன்று இணையத் தளங்களை நடத்தும் பலர், தாம் சமூகத்தின் முற்போக்கு சக்திகள் என்ற பெயரை தக்க வைப்பதற்காகவும், தாம் எழுத்தாளர்கள் என்று தம்பட்டம் அடிப்பதற்காகவும் நடத்தப்படும் இணையங்களை ஆய்வு செய்து, அவற்றை மக்கள் முன் அம்பலப்படுத்தல் என்பது அவசியமாகின்றது.

இதை நானோ அல்லது என் சார்ந்தவர்களோ தனிமையில் நடத்த முடியாது. மாறாக ஒரு பொது அமைப்பு வேலையூடாகவே சாத்தியமாகும் என்பதையும் நாம் உணர்ந்து நிற்கின்றோம். இதுவே உடனடியாக எம்முன் உள்ள வேலைகளும் கடமைகளுமாகும்.

.

சீலன்

## நம்மோடு இருக்கும் எதிரிகள் யார்…? நண்பர்கள் யார்…?

சுயநலம் மனிதனோடு பிறந்தது. ஏதோ ஒருவகையில் எல்லோருடைய சிந்தனையிலும் சுயநலம் இருக்கத்தான் செய்கிறது. நான், எனது, என் குடும்பம், என் உறவுகள் என்ற எண்ணமும் செயற்பாடும் மனித சிந்தனையோடு மேலோங்கி நிற்கின்றது. இன்றைய அதிவேகமான வாழ்க்கைச் சூழ்நிலை, தொழில் ரீதியாகவும் பொருளாதார ரீதியாகவும் நாளாந்த மனிதனின் வாழ்க்கையில் பல தாக்கங்களையும், பல மாறுதல்களையும் நாளுக்குநாள் ஏற்படுத்திய வண்ணமுள்ளது. தம்மை பாதுகாத்துக் கொள்ள ஒவ்வொரு மனிதனும் பல மாறுபட்ட புதியபுதிய வழிகளில் தினமும் போராட வேண்டியுள்ளது.

தன்னையும் தன் குடும்பத்தையும் பாதுகாக்க வேண்டிய தேவையும் கடமையும் ஒவ்வொரு மனிதனுக்கும் உண்டு. மற்றவனை ஏமாற்றாமல் நேர்மையோடு தன் கடுமையான உழைப்பால் முன்னேறும் மனிதனால் தான் சமூகத்தையும் பாதுகாக்க முடியும். அவனால் தான் இன்னொரு மனிதனுடைய உழைப்பையும், அவன் வாழ்க்கைச் சிரமத்தினையும் புரிந்து கொள்ள முடியும். வேலையெதுவும் இன்றி தொலைபேசியிலும், கம்பியூட்டரிலும், தொலைகாட்சி பார்ப்பதிலும் நேரத்தை கழித்துக் கொண்டு முற்போக்கு பேசிக் கொண்டு சந்தர்ப்பத்துக்கு ஏற்ப ஒவ்வொருவருக்கு ஒவ்வொரு கருத்தைக் கூறி மக்களை ஏமாற்றிப் பிழைப்பு நடாத்திக் கொண்டிருக்கும் கூட்டம் புலம் பெயர் சமூகத்திலே அதிகரித்துள்ளது.

இவர்கள் தங்களுடைய கடந்த கால தவறுகளை தவறென்று ஏற்றுக் கொள்ளாது பல காரணங்களை கூறி தங்களை நியாயப்படுத்திக் கொண்டு மக்கள் மத்தியில் நடமாடிக் கொண்டிருக்கின்றார்கள். புலிகள் செய்த அதே தவறு ஆயுதமின்றி சிரிப்பிலும், மேடைப் பேச்சிலும் தங்களை தூய்மையானவர்களாக அடையாயம் காட்டிக் கொண்டு மக்களை ஏமாற்றிப் பிழைப்பு நடாத்துகின்றார்கள்.

எனது நண்பன்...எனது குடும்பத்தவன்□ எனது உறவினன்.. எனது ஊர்க்காரன்□ என்பதை விட்டுவிட்டு இவர்களுக்கு துணை போவதை உடனடியாக நிறுத்த வேண்டியது எங்கள் ஓவ்வொருவருடைய இன்றைய கடமையாகும். இன்னொரு மக்கள் விரோதக் கும்பலை வளர்த்தெடுப்பது நாங்கள் எங்கள் அப்பாவி மக்களுக்கு செய்யும் மாபெரும் துரோகமாகும். எங்களோடு இருக்கும் எதிரிகளை நாங்களே அடையாளம் கண்டு கொள்ள வேண்டும்.

தங்கள் ஏமாற்று வித்தைகள் முன்தலைமுறையினரான பெற்றோர்கள் மத்தியில் பலிக்காது என்ற இன்றைய சூழலைப் புரிந்து கொண்டவர்கள் சிலர், இளையோர்கள்□ இளம் சமூகம் என்று கூறிக் கொண்டு தங்கள் பெயரையும் புகழையும்□தங்கள் நலன் சார்ந்த நன்மைகளைக் கருத்தில் கொண்ட நவீன அரசியல்வாதிகள் பலர் இளைஞர்களை ஏமாற்றிப் பிழைப்பு நாடாத்த ஆரம்பித்துள்ளார்கள்.

எங்கள் முன்னோரையும், எங்களையும் படுகுழிக்குள்ளே தள்ளிவிட்ட அன்றைய அரசியல்... இத்தனை ஆயிரம் மக்கள் அழிவு ஏற்பட புலிகளுக்கு அத்திவாரம் அமைத்துக் கொடுத்த அந்த வெள்ளை வேட்டி அரசியல் தான் இன்று புலம்பெயர் சமூகத்தில் கொள்கையிலே எந்த மாறுதலும் இல்லாமல் நவீன பிற்போக்கு அரசியலை தொடங்கியுள்ளது.

இளைய சமூகத்தினரின் எதிர்காலத்தை சீரழிவுக்கு இட்டுச் செல்லும் இந்த தவறான அரசியலில் இருந்து அவர்களைப் பாதுகாக்க வேண்டிய கடமை பெற்றோர்களுக்கு உண்டு.

எனக்கு எல்லாம் தெரியும் என்ற நினைப்பும்□ மற்றவர்களுடைய கருத்துக்களை உள்வாங்கிக் கொள்ளாத தன்மையும்□ எங்கள் தவறுகளை உணர்ந்து கொள்ளாததும், அதை நியாயப்படுத்த முனைவதும்□ நாங்கள் எங்களுக்கே தோண்டும் படுகுழியாகும்.

தனிமனிதனுடைய வாழ்வில் மட்டுமல்லாது, மக்கள் நலன் சார்ந்து அமைக்கப்படும் அமைப்புக்களும் இதை கருத்தில் கொண்டு செயற்பட வேண்டும். ஒவ்வொரு நாட்டிலும், ஒருவர் வாழும் நகரத்திலே அந்த சமூகத்தோடு அவர் எப்படி இருந்தார் என்பதை அறிந்து கொண்டு அவரை இணைத்துக் கொள்ள வேண்டும். அறிந்தவர்கள், தெரிந்தவர்கள், பத்திரிகையாளர்கள், எழுத்தாளர்கள் என்பதற்காக தவறான ஒருவரை உள்வாங்கிக்கொள்வதால் பல மக்களுடைய ஆதரவை இழப்பதோடு அமைப்பையும் தவறாகப் புரிந்து கொள்ளக் கூடிய நிலைமை உருவாகிவிடும். எதிரிகளை நாங்களே அப்பாவி மக்கள் மத்தியில் ஏற்படுத்திவிடக் கூடாது. மிகவும் ஆழமான பார்வை கொண்டு கடந்தகாலத்தை புரிந்து செயற்பட வேண்டிய கடமை மக்கள் நலன் சார்ந்து செயற்படும் ஒவ்வொருவருக்கும் உண்டு.

தேவன்
11.10.2009

## கற்பு கருத்துச் சுதந்திரம்: மாயையும் உண்மையும்

தீபாவளியோ, சுனாமியோ, சுதந்திர நாளோ, குடியரசு நாளோ, மகிழ்ச்சியோ, எழவோ எதுவாயினும் அவை பற்றிக் கருத்துக் கூறும் உரிமையும், வாய்ப்பும் பெற்றவர்கள் சினிமா உலகினர்தான். தமிழ் மக்களின் நேரம் சினிமா நேரம் என்றாகிவிட்ட நிலையில் கலவி பற்றி கு்பு கூறிய கருத்தும், பின்பு அதைக் கொம்பு சீவிவிட்ட சுகாசினியும், இவர்களுக்கு ஏற்பட்ட எதிர்ப்பும் மொத்தத்தில் இந்த நாடகம் இந்தியா டுடே போட்ட பாதையில் பீடு நடை போட்டு வருகிறது. கற்பின் ஆதரவும், கலவியின் எதிர்ப்பும், கருத்துச் சுதந்திரத்திற்கு வேட்டு வைப்பதாகவும், சகிப்புத் தன்மையற்ற பாசிசச் சமூகமாக மாறுவதன் அடையாளமென்றும் ஓநாய் போல வருத்தப்படும் இந்தியா டுடே, இந்து போன்ற பத்திரிக்கைகள் தமக்கு ஆதரவாக அமீர்கான், நரேன் கார்த்திகேயன், சானியா மிர்சா முதலான அகில இந்திய நட்சத்திரங்களைக் களத்தில் இறக்கி விட்டிருக்கின்றனர்.

இதையே சற்று "அறிவார்ந்த" தளத்தில் ஆதரிக்கும் வேலையினை அ.மார்க்ஸ், ஞாநி, கனிமொழி மற்றும் சிறு பத்திரிக்கைகள் செய்ய, செயல் தளத்தில் சற்று தாமதமாகவும், தயக்கத்துடனும் த.மு.எ.ச. கோமாளிகள் பேசி வருகின்றனர். முன்னெப்போதும் இல்லாதபடி, தங்களது பெயர்கள் ஊடகத்தில் தொடர்ந்து அடிபடுவதைக் கண்ட பா.ம.க.வும், விடுதலைச் சிறுத்தைகளும் உடனடி லாட்டரியில்

கிடைத்த திடீர் பரிசின் மகிழ்ச்சியோடு ஆர்ப்பாட்டங்களையும், வழக்குப் போடுதலையும் தொடர்கின்றனர்.

இது போக தமிழில் வெளியாகும் செய்திகளில் இரண்டு உண்மைகள் சன் டி.வி. உண்மை, ஜெயா டி.வி. உண்மை உண்டென நிறுவி வரும் மேற்படி சானல்கள் குஷ்புசுகாசினியை எதிர்ப்பதையும், ஆதரிப்பதையும் பரபரப்புத் தளத்தில் செய்து வருகின்றனர். உறுதியாக "இன உணர்வு அற்றுப்போன தமிழ்ப் பாலைவனத்தின்" கதகதப்பில் சோர்ந்து சுருண்டிருக்கும் இனவாதப் பூனை, தமிழினம் தனது மரபு, கற்பு, பண்பாடு குறித்து சிறுத்தை போல சீறுவதாகக் கற்பித்துக் கொள்கிறது ஒரு பகற்கனவுக்காரனின் இன்பத்தைத் துரத்தி மகிழ்கிறது தமிழ்தேசப் பொதுவுடைமைக் கட்சி.

எது கருத்துச் சுதந்திரம், யாருக்குக் கருத்துச் சுதந்திரம்?
இந்தப் பிரச்சினை கருத்திலும், காட்சியிலும் பரபரப்பாய் இருக்குமளவுக்கு அதன் உண்மை சூட்சுமமாய் மறைக்கப்பட்டிருக்கின்றது. மேட்டுக்குடியின் நனவுப் பத்திரிகையான இந்தியா டுடேயின் தலைமையில் குஷ்புவின் ஆதரவாளர்கள் கருத்துச் சுதந்திரத்திற்கு ஆபத்து ஏற்பட்டு விட்டதாய் அலறுவது அதிலொன்று.

முதலாளித்துவ ஜனநாயகத்தின் தந்திரமான இருப்பே அது எல்லோருக்குமான நலனுக்காக இருப்பதாகக் காட்டிக் கொள்வதில்தான் அடங்கியிருக்கிறது. இதில் முதலாளிகளின் நலன் பாதிக்கப்படும் போதெல்லாம் எல்லோரின் நலன் பாதிக்கப்படுவதாக கூக்குரல் எழுப்பப்படும். ஜனநாயகத்தின் கதி இதுதானென்றால் கருத்துச் சுதந்திரத்தின் கதியும் அதுதான். சட்டத்தின் ஆசியுடன், தண்டனையின் கண்காணிப்பில் போதிக்கப்படும் ஜனநாயகத்தின் மேன்மை போன்றே அனைவருக்கும் சமமான கருத்துச் சுதந்திரம் என்பதும் ஒரு மூடநம்பிக்கைதான்.

உண்மையில் கருத்துச் சுதந்திரம் என்று ஒன்று இல்லை. அப்படி இருக்கவும் முடியாது. பலரும் பல கருத்துக்களை பேசி, எழுதி, விவாதிக்கலாம். ஆனால் அவை அமலாக்கப்படும்போதோ, முடிவெடுக்கப்படும் போதோ ஆளும் வர்க்க நலனுக்குரியவை மட்டும்தான் தேர்வாகும். மற்றவை மறுக்கப்படும். எனவே எல்லாக் கருத்துக்களும் கருத்தளவில் உலவலாமே ஒழிய, பௌதீக ரீதியான செயலாக ஒருபோதும் மாற முடியாது. ஆக அரசும் ஜனநாயகமும் அதிகாரமும் ஒரு வர்க்கத்தின் நலனுக்காக மட்டுமே இருக்க முடியும் என்ற விதி கருத்துக்களின் உரிமைக்கும் பொருந்தும்.

குஷ்பு கூறிய சுதந்திரப் பாலுறவு பற்றிய பிரச்சினை மேற்கண்ட விதியுடன் நேரிட்டுப் புரிந்து கொள்ள முடியாத ஒரு பண்பாட்டுப் பிரச்சினை என்ற போதிலும் அந்த வேலையை இந்தியா டுடே சிறப்பாகச் செய்து வருகிறது. குஷ்பு, சுகாசினி கொடும்பாவிகள் எரிக்கப்படுவதைக் கண்டிக்கும் சாக்கில் அழகுப் போட்டிக்கு

ஆபத்து, பே'ன் ்ோவிற்குத் தடை, ஆங்கிலப் பெயர்ப் பலகைகள் நொறுக்கப்படும் அராஜகம் போன்றவற்றையும் சேர்த்துக் கொண்டு கண்டிக்கிறது.

இதிலெல்லாம் கருத்துச் சுதந்திரத்திற்கு ஆபத்துள்ளது என்று அலறும் இந்தியா டுடே, வைகோ உள்ளிட்ட தமிழின ஆர்வலர்கள் பொடாவில் அநீதியாகச் சிறை வைக்கப்பட்டது குறித்து வாய் திறக்கவில்லை. ஏன்? ஈழப்போராட்டத்தை வெறும் மேடைப் பேச்சில் கூட ஆதரிப்பதற்குச் சுதந்திரமில்லையா? கு்'பு, சுகாசினியை ஆதரித்து ஞாயிறு மலர் வெளியிடும் இந்துப் பத்திரிக்கை தனது சக பத்திரிக்கையாளரான நக்கீரன் கோபாலை ஜெயா அரசு பொடாவில் வாட்டி எடுத்தது குறித்து மூச்சு விடவில்லை.

எழுத்தாளர் சுந்தரராமசாமி மறைவையொட்டி பக்கம் பக்கமாக அழுது, அரற்றி, புலம்பித் தீர்க்கும் காலச்சுவடு, உயிர்மை முதலான சிறுபத்திரிக்கைகளும், போலிக் கம்யூனிஸ்டுகளின் கலைப்பிரிவான த.மு.எ.ச.வும், தடை செய்யப்பட்ட மாவோயிஸ்ட் கட்சியின் பிரதிநிதிகளென ஆந்திரத்தின் புகழ்பெற்ற எழுத்தாளர்கள் வரவரராவும் கல்யாண் ராவும் கைது செய்யப்பட்டதை ஒரு செய்தி என்ற அளவில் கூடக் கண்டு கொள்ளவில்லை. ஆனால் வாய்ப்பு கிடைக்கும் போதெல்லாம் 60 ஆண்டுகளுக்கு முந்தைய ஸ்டாலினின் சோவியத் யூனியனில் மக்கள் கூட்டம் கூட்டமாகக் கொலை செய்யப்பட்டதான புனைவை பொய்யை இவர்கள் நினைவு கூறுவதற்கு தவறுவதில்லை.

சாதியின் பெயரால் மக்களைத் தன் பின்னே திரட்டி வைத்துக் கொண்டு பா.ம.க.வும், விடுதலைச் சிறுத்தைகளும் நடத்திவரும் பிழைப்புவாத, காரியவாத, சந்தர்ப்பவாத அரசியலையும், அதன் வழி அச்சாதிகளைச் சேர்ந்த மக்கள், சந்தர்ப்பவாதத்திற்குப் பயிற்றுவிக்கப்படுவதையும் பற்றிக் கவலைப்படாமல் உண்மையில் அவற்றை அங்கீகரித்துக் கொண்டு கு்'பு எதிர்ப்பில் இவர்களது பாசிச மனோபாவத்தைக் கண்டுபிடித்துக் கவலைப்படுவது நகைப்பிற்குரியது் அருவறுப்பானது.

உலகமயமாக்கத்தின் விளைவால் விரிந்து செல்லும் மேட்டுக்குடியின் அலங்கார வாழ்வை மட்டுமே அங்கீகரிக்க முயலும் இந்தியா டுடே, இந்து பத்திரிக்கைகள் சுதந்திரப் பாலுறவு குறித்த சர்ச்சையில் எடுக்கும் நிலைப்பாடும், கவலைப்படும் விதமும் ஆச்சரியமானதல்ல.

உண்மையில் கு்'பு, சுகாசினிக்கு ஆதரவாய் பிரபலங்களை நேர்காணல் செய்வதும், ஒத்த கருத்துள்ளவர்களை வைத்து "விவாதம்" நடத்திச் செய்தி வெளியிடும் இப்பத்திரிக்கைகளின் கருத்துச் சுதந்திரத்தில் யார் தலையிட்டார்கள், இல்லை, யார்தான் தலையிட முடியும்? விடுதலைச் சிறுத்தைகளோ, பா.ம.க.வினரோ தமக்கு எதிராக இப்பத்திரிக்கைகள் எப்படிச் செய்தி வெளியிட முடியும் என்று கேட்டதில்லையே. மேலும், அப்படிக் கேட்கத்தான் முடியுமா?

இதனால் இந்தியா டுடேயில் திருமாவளவனின் விருந்தினர் பக்கம் கிழிபடும் என்பதல்ல, இப்பத்திரிக்கைகளை எதிர்க்க நினைப்பது இந்திய அரசையே எதிர்ப்பது போல ஆகுமென்பது அவர்களுக்கு நிச்சயம் தெரியும். எனவே நிச்சயமின்மையில் மாட்டிக் கொள்ளும் அளவுக்கு அவர்கள் பாமரர்கள் அல்ல. கூட்டணியிலும், ஆட்சியிலும் சிறிய பங்கைப் பெற்றிருக்கும் அவர்களுக்கு தங்களது ஆட்டத்தை எந்த எல்லைவரை கொண்டு செல்லலாம் என்பதும் நன்கு தெரியும்.

எனவேதான் கு்'புவுக்கு எதிராக ஆத்திரம் கொள்ளும் இச்சூரப்புலிகள் பார்ப்பனப் பத்திரிக்கைகள் தங்களைத் தவறாகச் சித்தரிப்பதாக வருத்தம் வெளியிடுகிறார்கள். திருமாவளவன் ஒருபடி மேலே போய் ”துடைப்பம் தூக்கிய எங்காட்களுக்கும் எனக்கும் சம்பந்தமில்லை“ என்று விலகிக் கொள்கிறார்.

இவ்வாறு பார்ப்பன ஊடகங்களின் கருத்துச் சுதந்திரத்தை இவர்கள் பணிவுடன் அங்கீகரிக்கிறார்கள். விளக்குமாறு, செருப்பு, மட்டுமல்ல மறியல், ஊர்வலம், ஆர்ப்பாட்டம் ஆகிய அனைத்துமே சமூகத்தின் கருத்துரிமைக்கு எதிரான பாசிச நடவடிக்கைகள் என்று நிலைநாட்டுவதுதான் கு்'பு விவகாரத்தின் மூலம் பார்ப்பன ஊடகங்கள் செய்ய விரும்பும் சதி.

மக்கள் தமது கோரிக்கைகளை மனுக் கொடுத்தும் பயனில்லை என்பதால் மறியல் செய்து போராடுகிறார்கள். நாக்பூரில் கோவுர் இனப் பழங்குடி மக்கள் மந்திரியைப் பார்த்து மனுக் கொடுக்கச் சென்று போலீசின் தடியடி நெரிசலில் 150 பேரைப் பலி கொடுத்தனர். நெல்லையில் மாவட்ட ஆட்சியரைப் பார்த்து மனுக் கொடுக்கச் சென்ற மாஞ்சோலைத் தோட்டத் தொழிலாளர்கள் 18 பேர் போலீசால் கொல்லப்பட்டனர்.

கேவலம் மனுக் கொடுப்பதற்குக் கூட உரிமையோ, சுதந்திரமோ, அனுதாபமோ இல்லாத இந்த நாட்டில் தான் கு்'புவுக்குக் கருத்துச் சுதந்திரம் இல்லையென்று கண்ணீர் விடுகிறார்கள். தமது கருத்துக்களை வெளியிடுவதற்கு வழியே இல்லை என்பதால்தான் சுவரொட்டியாய், சுவரெழுத்தாய், ஊர்வலமாய், மறியலாய் மக்கள் தங்களது கோரிக்கைகளை வெளியிடுகிறார்கள். இந்தியாடுடே, இந்து போன்ற பத்திரிக்கைகள் கையில் இருந்தால் போலீசிடம் அடிபட்டு ஏன் சாகவேண்டும்? எனவே, கருத்துக்களை வெளியிடும் சுதந்திரம் கூட மக்களுக்கு இல்லை, முதலாளிகளுக்கு மட்டும்தான்.

அம்பானியின் குடும்பச் சண்டையை தேசியப் பிரச்சினையாக்கிய தேசியப் பத்திரிக்கைகள் அதைத் தீர்த்து வைப்பதற்குக் காட்டிய முனைப்பும், சகாரா முதலாளி சுபத்ரா ராய் தலைமறைவானது குறித்து அவை காட்டிய கவலையும், பாரிசில் உலக இரும்பு இந்திய முதலாளி லட்சுமி மிட்டல் உலகமே வியக்கும்படி நடத்திய திருமணம் குறித்த பெருமிதமும், மக்களுக்கு கருத்துக்களை

வெளிப்படுத்தும் சுதந்திரம் இல்லை என்பதும் வேறுவேறல்ல.

தொலைக்காட்சிகளும், பத்திரிகைகளும் அடங்கிய செய்தி ஊடகத்தை கையில் வைத்திருப்பவர்கள் ஊடக முதலாளிகள். செய்தி ஊடகங்களின் முக்கிய வருவாயான விளம்பரத்தை அளிப்பவர்கள் அரசு, தொழில் துறை மற்றும் சேவைத் துறை முதலாளிகள். இந்நிலையில் ஆளும் வர்க்க நலனுக்குஉகந்தவை என்று முடிவு செய்யப்படுபவை மட்டுமே செய்தியாக, கட்டுரையாக, நிகழ்வாக, ஆய்வாக, அறிவாக முன்னிறுத்தப்படும். மற்றவை கிள்ளுக் கீரையாக மறுக்கப்படும்.

"மனம் போல தினம் ஜமாய்" என்று கோக்கை குடிக்குமாறு அமீர்கான், விவேக், விக்ரம் வலியுறுத்துவதற்கு இருக்கும் சுதந்திரம் கோக்கை மறுப்பதற்கு இல்லை. நெல்லையில் "அமெரிக்க கோக்கை அடித்து விரட்டுவோம்" என்ற எமது இயக்கத்தின் சுவரெழுத்துப் பிரச்சாரத்திற்காகவே, பிணையில் வர இயலாத வழக்கு காவல் துறையால் போடப்பட்டது. இன்றும் கிராமப்புறங்களில் பிரச்சாரம் செய்யும் எமது தோழர்களை தொடர்ந்து தடுக்கும் போலீசு மக்களையும் மிரட்டி வருகிறது.

"கங்கை கொண்டான் சுற்று வட்டாரத்தைச் சேர்ந்த மக்கள் கொக்கோகோலாவுக்கு ஆதரவாக இருப்பதால் நீங்கள் நடத்தும் எதிர்ப்புப் பிரச்சாரம் பொது அமைதியைச் சீர்குலைத்து விடும்" என்று எழுத்துப்பூர்வமாகவே கருத்துரிமையை மறுக்கிறது நெல்லைப் போலீசு. குஷ்புவின் கருத்துரிமைக்காகக் குமுறி வெடிக்கும் சென்னை உயர்நீதி மன்றம், நெல்லைப் போலீசு அதிகாரிகளை வேலை நீக்கமா செய்யப் போகிறது?

குஸ்பு, சுகாசினி எதிர்ப்பை தமிழ் ஊடகங்கள் செய்தியாக்குவதன் காரணம், அதன் சினிமா பரபரப்பைக் காசாக்குவதுதானேயொழிய வேறு எதுவுமில்லை. அதனால்தான் குஷ்புவை ஆதரித்து ஆங்கில ஊடகங்கள் வெளியிடும் செய்தியின் "தரம்" தமிழில் இல்லை. குஷ்பு பிரச்சினை குறித்த விவாதமொன்றில் சினிமா தயாரிப்பாளர் பழ.கருப்பையா குஷ்புவை அவள் இவள் என்று பேசியதைக் கண்டிக்கிறார்கள். கண்டிப்பாக இது பழ.கருப்பையாவின் ஆணாதிக்கம்தான். ஒத்துக் கொள்வோம். ஆனால் நக்சலைட்டுகளையும், காசுமீர் போராளிகளையும் அவன், இவன் என்று எழுதுவதும், தீ.கம்யூனிஸ்டுகள், தீவிரவாதிகள் என்று அவதூறு செய்வதும் என்ன வகை ஆதிக்கம்?

பழ.கருப்பையாவது அவள், இவளென்று நிறுத்திக் கொண்டார். பெண்கள் விசயத்தில் சங்கராச்சாரி என்ன பேசினார், எப்படி நடந்து கொண்டார் என்பது நிர்வாணமான நிலையில் எந்தப் பத்திரிகையும் சங்கராச்சாரியைப் பொறுக்கி என்று எழுதவில்லை. எழுதவில்லை என்பது மட்டுமல்ல தீபாவளித் திருநாளில் நள்ளிரவில் அவர் கைது செய்யப்பட்டதை வைத்து, அடிப்படை ஜனநாயக உரிமை பறிபோனதாக ஒரு பாட்டம் அழுது தீர்க்கவும் செய்தார்கள். ஆனால் அப்துல் கலாமை அரசவைக்

கோமாளி என்று ஒரு உலகறிந்த உண்மையை எழுதியதற்காக தருமபுரியில் எமது தோழர்கள் 55 நாட்கள் சிறையில் இருந்தனர்.

ஆக, இந்தியத் திருநாட்டில் ஒருநபரை எப்படி அழைக்கலாம், அழைக்கக் கூடாது என்பதில் கூட கருத்துச் சுதந்திரம் கடுகளவும் இல்லை. எப்போதெல்லாம் ஆளும் வர்க்க நலன் இலேசாக உரசப்படுகிறதோ உடனே கருத்துச் சுதந்திரமும் பாதிக்கப்படுவதாகக் கூக்குரல் எழுகிறது.

**கலாச்சாரப் போலீசைக் கண்டிக்கும் சட்டம் ஒழுங்கு போலீசு!**

குஂபுவுக்கு எதிராக ஆர்ப்பாட்டங்களை கருத்துச் சுதந்திரத்திற்கு எதிரான வன்முறை என்றும், இவர்களைக் கலாச்சாரப் போலீசு என்றும் சித்திரிக்கும் பார்ப்பன ஊடகங்களும், போலி கம்யூனிஸ்டுகளும், அறிஞர் பெருமக்களும் இக்கருத்தை வெளியிடும்போது சட்டம் ஒழுங்கு போலீசின் குரலில் பேசுகிறார்கள். அதுமட்டுமல்ல ஏற்கெனவே ஜனநாயகமும், கருத்துரிமையும் சட்டப்படி நிலவி வருவதைப் போன்ற பிரமையையும் உருவாக்குகிறார்கள். பாசிசத்தை ஜனநாயகம் என்று அங்கீகரிக்கும் இவர்கள் "கற்பை" பிற்போக்குத்தனம் என்று சாடுவது நல்ல நகைச்சுவை.

கற்பை ஆதரிக்கும் கருத்துப் பிரச்சாரம் செய்யலாமாம். ஆனால் அதைக் கண்ணியமான முறையில் செய்ய வேண்டுமாம். துடைப்பம், செருப்பு, கொடும்பாவி ஆகியவை கூடாதாம். செருப்பு, துடைப்பம் வைத்து ஆர்ப்பாட்டம் செய்வதோ, வழக்குப் போடுவதோ உலகெங்கும் உள்ள ஏற்றுக் கொள்ளப்பட்ட ஜனநாயக முறைகள்தானே, இதில் எங்கே வன்முறை உள்ளது? உண்மையில் இத்தகைய ஆர்ப்பாட்ட முறைகளின் மீது நடுத்தர வர்க்கத்திற்கு உள்ள வெறுப்பையே இந்து பத்திரிகை முதல் 'ங்கர் படம்வரை வெளிப்படுத்துகிறார்கள். இந்த வெறுப்பே நீதிமன்றங்கள் மூலம் பல விதங்களில் சட்டமாகியிருக்கின்றது.

அடுத்து குஂபு, சுகாசினியை எதிர்த்து நீதிமன்றங்களில் வழக்கு போடுவதைப் பாசிசம் என்கிறார்கள். இதை எப்படிப் பாசிசம் என்று சொல்ல முடியும்? லட்சக்கணக்கான மக்கள் ஒன்றுமில்லாத வழக்குகளுக்காகவும், வாய்தாக்களுக்காகவும் அலைந்து கொண்டிருக்கும்போது, குஂபு மேட்டூர் நீதிமன்றத்தில் படியேறியது குறித்துக் கண்ணீர் விடுகிறார்கள். உண்மையில் இது "நாங்கள் நீதிமன்றம், வழக்கு, விசாரணைக்கு அப்பாற்பட்டவர்கள்" என்ற மேட்டிமைத்தனமே அன்றி வேறல்ல. சென்னை உயர்நீதி மன்றமும் குஂபு மீது வழக்குகள் போடுவதைக் கடுமையாகக் கண்டித்திருக்கிறது.

ஆளும் வர்க்க நலன் பாதிக்கப்படும் போது மட்டும் எல்லோருக்குமான சட்டம் ஒழுங்கு "எங்களுக்கில்லை" என்ற மனோபாவம்தான் இவர்கள் பேசும் ஜனநாயகத்தின் உண்மையான இலக்கணம். கோவை குண்டு வெடிப்பில் கைதான அப்பாவி முசுலீம்கள், பல ஆண்டுகளாகச் சிறையில் வாடும் விசாரணைக் கைதிகள்

போன்றோர் உயர்நீதி மன்றத்தின் அநீதிக் கண்களுக்குத் தெரிவதில்லை. குˆபுவின் கருத்தை எதிர்க்கும் கற்பு ஆதரவாளர்கள் தமிழ்ப் பிற்போக்காகவே இருக்கட்டும். அவர்கள் போடும் வழக்கை சட்டபூர்வமாக எதிர்கொண்டு நிரபராதி என்று நிரூபிப்பதில் என்ன பிரச்சினை?

**பாசிசத்தின் பாதந்தாங்கியாகக் கருத்துச் சுதந்திரம்!**

ஒரு கருத்தை கருத்தால் சந்திக்காமல், துடைப்பத்தை எடுப்பது வன்முறை என்றால் தங்கர்பச்சான் நடிகைகளைப் பற்றி தெரிவித்த கருத்துக்காக அவரை மன்னிப்புக் கேட்க நிர்ப்பந்தித்ததும் வன்முறைதான் என்று ஒப்புக் கொள்ள வேண்டியிருக்கும். காசுக்காக தனது கருத்தையும், கலைத் திறமையையும், உடலையும் விற்பனை செய்கின்ற விபச்சாரர்கள் நிரம்பிய திரையுலகத்தில் விபச்சாரிகளை மட்டுமே சாடிய தங்கர்பச்சானின் ஆணாதிக்க மனோபாவத்தைக் கண்டிப்பதற்கு மேல் அதில் என்ன இருக்கிறது?

கருத்துச் சுதந்திரக்காரர்களின் இந்த இரட்டை வேடம் தவிர்க்க இயலாமல் அவர்களைப் படுகுழியில் இறக்குகிறது. ""பாபர் மசூதியை இடித்தது குற்றம்தான், ஆனால் "மசூதி இருந்த இடத்தில் ஏற்கெனவே கோவில் இருந்தது" என்று கூறுவதற்கும், "அங்கே கோவில் கட்டுவோம்" என்று கருத்து தெரிவிப்பதற்கும் இந்துத்துவவாதிகளுக்கு கருத்துரிமை உண்டு"" என்று கூறுகிறார் அ.மார்க்ஸ். அரை அம்மண நடனங்கள், ஏகாதிபத்திய நுகர்வு வெறிக் களியாட்டங்கள் இவற்றின் அடிப்படையில் அமைந்த தனிநபரின் பாலியல் உரிமைகள் ஆகியவற்றை ஆதரிக்கும் பொருட்டு பாசிசத்தின் கருத்துரிமையையும் ஆதரிக்க வேண்டியிருக்கிறது. குˆபுவின் கருத்துரிமைக்காக முசுலீம்களின் வாழ்வுரிமையையும், வழிபாட்டுரிமையையும் காவு கொடுக்கிறார் அ.மார்க்ஸ்.

முற்போக்குக் கலைஞரான பிரளயனோ தனியாருக்குச் சொந்தமான டிஸ்கோத்தே அரங்கிற்குள் போலீசு எப்படி அத்துமீறி நுழையலாம் என்று நட்சத்திர ஓட்டல் முதலாளியைப் போல இடி முழக்கம் செய்கிறார். இந்த வாதத்தின்படி தனிச்சொத்துடைமையின் பெயரால் சாதி தீண்டாமையையும், கருத்துரிமையையும் அங்கீகரிக்க வேண்டியிருக்கும்.

எல்லா கருத்துக்களுக்கும் சமஉரிமை என்ற கருத்தே ஒரு பித்தலாட்டம். சாதி தீண்டாமையும், இந்து மதவெறிப் பாசிசமும், கற்பும், முல்லாக்களின் பத்வாக்களும், உழைக்கும் மக்களுக்கெதிரான கருத்துக்கள் என்பதை ஏற்றுக் கொள்கின்ற யாரும் அவர்களுடைய கருத்துச் சுதந்திரத்திற்காகக் குரல் கொடுக்க முடியாது. அவற்றை அங்கீகரிக்கவும் முடியாது.

**பெண்ணடிமைத்தனத்தை வளர்க்கும் பாலுறவு சர்வேக்கள்**

இந்தியா டுடேயின் செக்ஸ் சர்வேயிலோ, குஃப்பு கூறிய கருத்திலோ ஆணாதிக்கம் குறித்து ஒரு வெங்காயம் கூடக் கிடையாது. மாறாக, மாநகர மேட்டுக்குடி இளம் பெண்களிடம் விதவிதமான பாலியல் ருசிகளை அறிமுகப்படுத்துவதற்காகவே அந்த செக்ஸ் சர்வே எடுக்கப்பட்டது. அந்த சர்வேயில் கேட்கப்பட்ட கேள்விகளைப் பார்த்தால் இனிமேல் சரோஜாதேவிப் புத்தகங்களுக்குத் தேவையில்லை என்று தோன்றும். நடுத்தர வர்க்கம் மற்றும் மேட்டுக்குடியை விழுங்கி வரும் நுகர்வுக் கலாச்சாரத்தின் ஓர் அங்கம்தான் இந்த சர்வே.

உலகமயம், தாராளமயம், தனியார்மயம் உருவாக்கி வரும் நுகர்வுப் பண்பாடு, சமூகம் சூழ வாழும் ஒரு தனிநபரை பொருட்கள், ஆசைகள் சூழப்பட்ட நபராக மாற்றுகிறது. இந்த நபர் மேலும் மேலும் தனிமனிதனாக மாறி சகிப்புத் தன்மையற்ற நபராக மாறி, தனது ஆசைகளை நிறைவேற்றுவதற்காக ஏனைய மனித உறவுகளை ரத்து செய்கிறார். பாலுறவிலும் நுழையும் இந்தக் கண்ணோட்டம் எந்த அளவுக்குப் பரவுகிறதோ அந்த அளவுக்கு ஆணாதிக்கத்தை எதிர்த்தோ, பாலியல் வன்கொடுமைகளை எதிர்த்தோ, பெண்ணடிமைத்தனத்தை எதிர்த்தோ உள்ள மங்கலான போராட்ட உணர்வைக் கூட பெண்களிடமிருந்து துடைத்தெறிந்துவிடும். இது தனது ஆசை, தேவைகளுக்காக எல்லா விழுமியங்களையும் துறந்து தேர்ந்த காரியவாதியாக மாறுவதைப் பயிற்றுவிக்கிறது.

இந்தியா டுடேயின் சர்வே கேள்விகளில் ஒன்றான "வேலை கிடைப்பதற்காக உடலை விற்பீர்களா?" என்ற கேள்வி அவர்களின் நோக்கத்தைத் தெளிவுபடுத்தி விடுகிறது. அது மாறும் சூழ்நிலைக்கேற்ப "அட்ஜஸ்ட்மெண்ட்" செய்து கொள்ளுமாறு நவீன காலப் பெண்களைப் பச்சையாகக் கேட்கிறது. கற்பு குறித்த பிற்போக்குத்தனத்தை, செத்த பாம்பை அடிக்கும் இவர்கள் தங்கள் சர்வேயில் பாலியல் வன்கொடுமை பற்றியோ, சமூகத்தில் விரவியிருக்கும் ஆணாதிக்கம் குறித்தோ ஒரு கேள்விகூடக் கேட்கவில்லை.

குஃப்புவும் கூட தனது கருத்தில் திருமணத்துக்கு முந்தைய பாலுறவில் "பாதுகாப்பாக விளையாடுமாறு" கவலை கொள்கிறார். இங்கும் சுதந்திரப் பாலுறவின் பெயரால் பெண்ணுடலை நுகர் பொருளாக்கும் ஆணாதிக்கம் குறித்து எந்தக் கேள்வியுமில்லை. அதனால்தான் இவர்கள் கற்பை பிற்போக்கு என்று தெளிவாக வரையறுப்பதுபோல, பெண்களுக்கான முற்போக்கு எது என்பதை தெளிவாக வரையறுக்க முடியவில்லை. அதற்கு மாறாக பெண்ணுடலை வெறும் காமப் பொருளாக உறிஞ்சக் கொடுக்கும் அடிமைத்தனத்தை அட்ஜஸ்ட்மெண்ட் என்ற பெயரில் சிபாரிசு செய்கிறார்கள். இதுவும் கற்பு என்ற பிற்போக்குத்தனத்திற்கு கடுகளவும் குறையாத பிற்போக்கத்தனம்தான்.

சுதந்திரப் பாலுறவு என்ற கோட்பாடு நடைமுறையில் ஆணின்

பொறுக்கித்தனத்திற்கும், பெண்ணின் அடிமைத்தனத்திற்கும் உதவுமேயன்றி அதில் வேறு எந்த தத்துவ ஆராய்ச்சிக்கும், மயிர் பிளக்கும் விவாதத்திற்கும் இடமில்லை. அவ்வகையில் விடுதலைச் சிறுத்தைகள் பா.ம.க.வினரின் மலிவான பரபரப்பு அரசியலை விட இந்தியா டுடேயின் பாலுறவு அரசியல் அபாயகரமானது.

ஐ.டி. (ஐ.கூ) எனப்படும் தகவல் தொழில்நுட்பத்துறை குறித்து ஆகா, ஓகோ என்று புகழ்பாடும் இந்தியா டுடே அதில் பெண்கள் படும் துயரம் குறித்து இதுவரை எந்த சர்வேயும் எடுத்ததில்லை. இத்துறைப் பெண்கள் பாலியல் வன்கொடுமைக்கு அதிகமாக ஆளாகிறார்கள், பணிநிரந்தரம் பாதுகாப்பு இல்லை, தொழிற்சங்க உரிமை இல்லை, வரையறுக்கப்பட்ட பணி நேரம் இல்லை. மேலும், வார இறுதிக் கேளிக்கைகளுக்கு கட்டாயமாக வரவழைக்கப்படுகிறார்கள். இதற்கு மறுப்பவர்கள் இத்துறையிலிருந்து வெளியேற்றப்படுகிறார்கள் அல்லது பழமைவாதி என்று கேலி செய்யப்படுகிறார்கள். அந்தப் பழமைவாதிகளை ஜாலியான அடிமைகளாகப் பழக்கப்படுத்துவதுதான் இந்தியா டுடேயின் வேலை. மாறாக, அந்த நவீனப் பெண்ணடிமைகளை விடுதலை செய்வதற்கல்ல.

**இந்தியா டுடேயின் "புதிய முற்போக்கு"**

கற்பு எனும் நிலவுடைமைப் பிற்போக்கைச் சாடும் சக்கில் இந்தியா டுடே உலகமயமாக்கத்தின் கேடுகளை நைசாக முற்போக்கு என்று சேர்த்து விடுகிறது. பழைய தொழிற்சங்கச் சட்டங்களை ரத்து செய்ய வேண்டும் இது முற்போக்கு, தொழிற்சங்கம் வேண்டுமெனச் சொல்வது, வேலை நிறுத்தம் செய்வது இவை பிற்போக்கு. பே'ன் ே'ா, அழகிப் போட்டி முற்போக்கு. புகைபிடிக்கும் காட்சிகளைத் தடைசெய்வது, கடைகளின் பெயரைத் தமிழில் எழுதுவது பிற்போக்கு. இறுதியில் இந்த "முற்போக்கை" மறுத்து "பிற்போக்கை" ஆதரிப்பவர்களை தாலிபான்கள் என்று முத்திரையும் குத்தி விடுகிறது இந்தியா டுடே. காலாவதியாகும் கற்பை வைத்து உலகமயமாக்கத்தின் கேடுகளை ஏற்கச் செய்யும் இந்தச் சதித்தனம் எத்தனை பேருக்குப் புரியும்.

முன்னேறிக் கொண்டிருக்கும் சமூகத்தை கு்'புவை ஆதரிப்பவர்கள் பின்னுக்கு இழுப்பதாக ஒரு சிறப்புக் கூட்டம் போட்டுப் புலம்பிய த.மு.எ.ச. அறிவாளிகளை ஏன் கோமாளிகள் என்று அழைத்தோம் என்பது இப்போது புரிந்திருக்கும். ஆனால் தொழிற்சங்கம் கூடாது என்ற "முற்போக்கை" மே.வங்க முதல்வர் புத்ததேவ் பட்டாச்சார்யா ஏற்றுக் கொண்டுள்ள படியால் அவர்களை முற்றிலும் ஏமாந்த கோமாளிகள் என்றும் சொல்லிவிட முடியாது.

கருத்துச் சுதந்திரத்திற்காக மார்தட்டும் இந்தியா டுடே தொழிற்சங்கம் வேண்டுமா வேண்டாமா என்பது குறித்தும், தாராளமயத்தால் தற்கொலை செய்யும் விவசாயிகள் குறித்தும், அதிகரித்து வரும் பாலியல் வன்கொடுமைகள் குறித்தும் ஏன் சர்வே எடுக்க முன் வரவில்லை? ஆனால் பாலியல் குறித்து மூன்று மாதத்திற்கொரு

முறை சர்வே எடுக்கும் வேகமென்ன, கு்புவுக்கு ஆதரவாக ஒதுக்கப்படும் பக்கங்களென்ன, சமூகம் ”முன்னேறி“ப் போவதன் இலட்சணம் இதுதான். கு்புவை எதிர்ப்பதில் தீவிரம் காட்டும் பா.ம.க.வும், விடுதலைச் சிறுத்தைகளும் கூட இத்தகைய சமூக முன்னேற்றத்தோடு கருத்து வேறுபாடு கொண்டவர்களல்லர். அவ்வகையில் அவர்களது சண்டை அட்டைக் கத்திகளோடுதான்.

எய்ட்ஸ் நோயின் ஊற்றுக் கண்ணான விபச்சாரத்தையும், மக்களைக் காமவெறி பிடித்த விலங்குகளாக மாற்றும் திரைப்படங்களையும் தடை செய்வது குறித்து மூச்சுவிடாமல், நாடெங்கும் ஆணுறை எந்திரங்களை வழங்குவதன் மூலம் ஆண்களுக்குப் ”பாதுகாப்பை“ வழங்குகிறார் அமைச்சர் அன்புமணி. பெண்களுக்கு கற்புக் கவசம் அணிவித்து ஆண்களிடமிருந்து ”பாதுகாக்கிறார்“ அப்பா இராமதாசு. சிகரெட் உற்பத்திக்குத் தடை இல்லை சினிமா நிழலுக்குத் தடை. சில்லறை விற்பனையில் பன்னாட்டு நிறுவனங்களை நுழைத்து தமிழ் வணிகர்களை ஒழிக்க டெல்லியிலிருந்து திட்டம். அழியவிருக்கும் சிறுவியாபாரிகள் தமிழில் போர்டு வைத்த பின்தான் அழியவேண்டும் என்பதற்குத் தமிழ்நாட்டில் போராட்டம்.

**குஸ்பு, சுகாசினி மேட்டுக்குடியின் மனச்சாட்சி!**

பா.ம.க.வும், விடுதலைச் சிறுத்தைகளும் எப்படி தமிழினத்தின் பிரதிநிதிகள் இல்லையோ அதேபோல கு்புவும் பெண்ணினத்தின் பிரதிநிதியல்ல.

கு்பு தின்று தினவெடுத்த வர்க்கத்தின் பிரதிநிதியாக இருந்து, சுதந்திரப் பாலுறவு குறித்துப் பேசுகிறார். அவரை தேர்ந்த சமூகவியலாளரைப் போலப் பேசுவதாகக் குறிப்பிடுவது நகைப்பிற்குரியது. அப்படிப் பேசியிருந்தால் ஒரு நடிகையாக கோடீசுவரியாக தான் நிலைபெறுவதற்குச் செய்த ”தியாகங்களை“ குறைந்தபட்சம் ஒரு மேலோட்டமான சுயவிமர்சனமாகக் கூடச் சொல்லியிருப்பார். ஆனால் அவரைப் போன்ற பெண்கள் தம்மை இழப்பது குறித்தல்ல, பெறுவது குறித்தே கவலைப்படுகிறார்கள். அதையே ஒரு வாழ்க்கை முறையாக மற்றவர்களுக்கும் பரிந்துரை செய்கிறார்கள்.

கு்புவிடம் கேட்கப்பட்ட கேள்வியை ஏழ்மையினால் விபச்சாரியாக்கப்பட்ட பெண்ணிடம் கேட்டால் என்ன பதில் வரும்? நிச்சயமாக ”அட்ஜஸ்ட்மெண்ட்“ செய்து வாழுவதைச் சரியெனக் கூறமாட்டார். காரணம், இங்கே இழப்பினால் நடிகைகளுக்கு கிடைக்கும் ஆடம்பர வாழ்வு கிடைக்காது. அவலம்தான் கிடைக்கும். நல்ல கணவன், குழந்தைகள், கல்வி, குடும்பம் என்ற சராசரிப் பெண்ணின் ஏக்கம்தான் அந்த விபச்சாரியிடம் வெளிப்படும். கு்புவிடம் இல்லாத ஆணாதிக்கக் கொடுமையின் மீதான கோபமும், வெறுப்பும் இந்தப் பெண்களிடம் கண்டிப்பாக இருக்கும்.

சுகாசினி, கு்பு போலத்தான் என்றாலும் கூடுதலாக பார்ப்பன மேட்டிமைத்தனம் கலந்த கலவை எனலாம். தமிழின வெறுப்பும், இந்துத்துவ ஆதரவும், மேட்டுக்குடியின்

போலியான தேசபக்தியும் கொண்ட, ”தேசியப் படங்களை“ எடுத்த மணிரத்தினத்தின் மனைவி என்ற தகுதியை அவர் சரியாகக் கொண்டிருக்கிறார்.

மணிரத்தினத்தின் வீட்டில் குண்டு வெடித்ததை வைத்து, ரஜினியிடம் சமூக உணர்வு பொங்கியதைப் போல, குஷ்புவிற்கு ஏற்பட்ட நிலைமை குறித்து சுகாசினியிடம் கோபம் கொம்பு போல சட்டென்று வெளிப்படுகிறது. மற்றபடி சராசரி தமிழ்ப் பெண்களின் வேதனை, அவலம் குறித்து அவரிடம் ஏதும், எப்போதும் வெளிப்பட்டதில்லை. பிரச்சினைகளை மேட்டிமைத்தனமாகப் பேசும் மேட்டுக்குடிப் பெண்கள், பெண்ணினத்தின் போராளியாகச் சித்தரிக்கப்படுவது, பெண்ணினத்தின் சாபக்கேடேயன்றி, பெருமைக்குரியதல்ல.

***பிழைப்புவாதத்தைப் பாதுகாக்கும்”தமிழ் ஆணுறை“!***

தமிழக அரசியல் பொதுக்கூட்டங்களில் பேசும் பேச்சாளர்கள், அதிலும் தீப்பொறி, வெற்றிகொண்டான், நடராசன் போன்றோர் தலைவர்கள் பெண்டாளுவதைப் பெருமையாகவும், தலைவிகள் சோரம் போனதைத் தரக்குறைவாகவும் பேசுவது ஒரு நீண்ட மரபு. அவ்வகையில் திராவிட இயக்க அரசியலில் ஆணாதிக்கத் திமிரும், பெண்களைக் கேவலமாகப் பேசுவதும் இரத்தத்தோடு கலந்து விட்ட ஒன்று.

பா.ம.க.வும், விடுதலைச் சிறுத்தைகளும் இந்தப் பொது நீரோட்டத்தோடு கூட்டணி வைத்துக் கலந்தவர்கள்தான். இரண்டு பிரபலமான பெண்கள் பேசியதை வைத்து, தமிழ்ப் பண்பாடு, மரபு, பெருமைக்குப் போராடுபவர்களாகக் காட்டிக் கொள்ள நினைக்கும் இவர்கள், தமிழ்க் கற்பு குறித்துக் கதைப்பது வெறும் பம்மாத்தே. தமிழ்ப் பெண்களின் வாழ்வைச் சூறையாடும் தாராளமயக் கொள்கையர்களின் ஆட்சியில் பங்குதாரராக இருந்து கொண்டே தமிழ்க் கற்பு பற்றிக் கதைக்கின்றனர்.

எத்தனை மேன்மைமிக்கதாக இருந்த போதிலும் கற்பு என்பது நடைமுறையில் ஒரு தனிநபரின் பாலியல் ஒழுக்கம் சார்ந்த விசயம் மட்டும்தான். ஆனால் பொது வாழ்வில் ஒழுக்கம் என்ற சொல்லை தமது அகராதியிலிருந்தே நீக்கிய கனவான்கள் தமிழ்ப் பெண்களின் கற்பு நெறி குறித்தும், மக்களின் உணர்வு புண்படுவது குறித்தும் அலட்டிக் கொள்வது அருவெறுக்கத்தக்கது; கேலிக்குரியது.

குஜராத் இனப்படுகொலை நடந்தபோது கண்ணை மூடிக் கொண்டு பா.ஜ.க. வழங்கிய பதவிச் சுகத்தை அனுபவித்து இன்பம் கண்ட கருணாநிதி, இராமதாசின் அரசியல் ஒழுக்கத்திற்கு விளக்கம் தேவையில்லை. ”தலித் விடுதலை“க்காக மூப்பனார், பெர்ணாண்டஸ், சங்கராச்சாரி, ஜெயலலிதா, கருணாநிதி, சிதம்பரம் கோவில் தீட்சிதர் உள்ளிட்ட யாருடனும் கூட்டு சேர தயங்காத திருமாவளவனின் அரசியல் ஒழுக்கமோ ”அப்பழுக்கற்றது“. வாழ்க்கையை விருப்பம்போல அனுபவிக்கவும், முன்னேறவும் விரும்பும் பெண்களுக்கு குஷ்பு சிபாரிசு செய்யும்

பாதுகாப்புக் கவசம் "ஆணுறை". பதவி சுகத்திற்காக அரசியல் விபச்சாரத்தில் ஈடுபடும் இவர்களுக்கு "கொள்கை பாதுகாப்பு" வழங்கும் ஆணுறை "தமிழ்".

தாராளமயக் கொள்கைக்கு இசைவாகச் சுதந்திரப் பாலுறவையும் உள்ளடக்கிய புதிய பார்ப்பனப் பாரதக் கலாச்சாரத்தை உருவாக்க விரும்பும் இந்து, இந்தியா டுடே அடங்கிய பழைய பார்ப்பனக் கும்பல் தாராளமயக் கொள்கையினூடாகவும் தமிழ் மக்கள் மீது பழைய பார்ப்பனக் கற்பை நிலைநாட்டப் போராடும் கருணாநிதி, இராமதாசு, திருமாவளவன் ஆகியோர் அடங்கிய புதிய பார்ப்பன வேளாளக் கும்பல்!

இந்தத் திருடன் போலீசு விளையாட்டை ஊதிப் பெருக்கி தேசியப் பிரச்சினையாக்கி அதனூடாகத் தமிழ் தொழிற்போட்டியை நடத்திக் கொள்ளும் சன் டி.வி, ஜெயா டி.வி! இதுவரை கற்பு என்ற கருத்தை வைத்து எந்தத் தமிழ்ச் சினிமாவும் சம்பாதிக்க முடியாத பணத்தையும், ஈர்க்க முடியாத கவனத்தையும் இந்த நாடகம் பெற்று விட்டது.

தி.மு.க. கூட்டணியில் இருக்கும் பா.ம.க.வையும், பா.ம.க.வுடன் கூட்டணி வைத்திருக்கும் விடுதலைச் சிறுத்தைகளை அ.தி.மு.க. கவர இருக்கும் நிலையில், அவர்களை தி.மு.க. கூட்டணியில் வைத்திருப்பதற்காகவே, ஜெயா டி.வி. சார்பான குஷ்புவை எதிர்க்கும் இவர்களது நாடகத்தை சன் டி.வி., தமிழ் முரசு ஊதிப் பெருக்குவதாகச் சிலர் சொல்வதில் உண்மை இல்லாமலில்லை. ஆனால் கற்பை விட எம்.எல்.ஏ. சீட்டு பருண்மையானது. நாளையே ஜெயா அதிக சீட்டு கொடுத்து இவர்களைக் கவர்ந்திழுக்கலாம்.

பா.ம.க., விடுதலைச் சிறுத்தைகளால் ஆதரிக்கப்பட்ட தமிழ்ப் பெண்களும், ஜெயாவால் ஆதரிக்கப்பட்ட குஷ்புவும் இரு தரப்பினராலும் கைவிடப்பட்டு அரசியல் கற்புக்குப் புது விளக்கங்கள் வழங்கப்படலாம். இந்தியா டுடேயும் மாறிவரும் செக்ஸ் விருப்பங்கள் குறித்து புதியதொரு சர்வேயை வெளியிடலாம்.

நன்றி : புதியகலாச்சாரம் இளநம்பி

## பிரபாகரனை பலிகொடுத்த அரசியல் எது?

மக்களை நேசிக்கும் எவரும், அந்த மக்களுக்காக தம் கடந்தகாலத் தவறுகளை திருத்தியாக வேண்டும். எதிர்காலத்தில் தவறான வழியைக் கையாளாமல் இருக்க கற்றுக்கொள்ள வேண்டும். அந்த வகையில் தான் நாம் இன்று செயல்படுகின்றோம் என்பதை, நாம் திரும்பி பார்க்கவும், எம்மை நாம் கேட்டுப்பார்க்கவும் வேண்டும். இலங்கையில் வாழும் தமிழ் மக்கள், தமக்கும் தம்மைச் சுற்றிய தன் இனத்துக்கும் நடக்கும் இனவொடுக்குமுறையை, சுயமாக எதிர் கொள்ளும் அனைத்து சுய சமூக ஆளுமையையும் இழந்து நிற்கின்றனர். கடந்த காலத்தில் அவர்களைச்

சுற்றி பல்வேறு நிகழ்வுகள், அவர்களின் சுயாதீனமான கூறுகளை அழித்து இருந்தது.

இதனால் சமூகமோ வாழா வெட்டி நிலைக்குள், இன்று சிதைந்து கொண்டிருக்கின்றது. இதை நாம் எம் சொந்த தவறுகள் ஊடாக புரிந்து கொள்ள வேண்டும். இதன் மூலம் தான், எதிர்காலத்திலாவது நாம் சரியாக எதிர்வினையாற்ற முடியும்.

இனவொடுக்குமுறையோ இன்று என்றுமில்லாத வடிவில், தட்டிக்கேட்பாரின்றி மக்கள் மேல் ஒரு ஒடுக்குமுறையாகவே ஏவப்படுகின்றது. ஆள் நடமாட முடியாத சூனியப் பிரதேசத்தில், ஆளையே போட்டுத் தள்ளும் சூழலில் தான், தமிழினவழிப்பு தொடருகின்றது. இந்த இனவழிப்புத் தகவல்களைப் கூட, பெறமுடியாத வண்ணம் சமூகம் மூச்சிழந்து நிற்கின்றது. இதற்கு நாம் ஒவ்வொருவரும் பொறுப்பு ஏற்றாக வேண்டும். அதை நாங்கள் உணர்வுபூர்வமாக செய்யவில்லை என்பதை, நிச்சயமாக ஏற்றேயாக வேண்டும். இதில் இருந்துதான் மாற்றத்தை உருவாக்க முடியும்.

இன்று இனவழிப்பை செய்யும் உத்தி மிக நுட்பமானது. விடுதலைப் புலிகளையும், விடுதலைப் புலிகள் என்ற பெயரிலும், அனைத்து சமூக செயல்பாட்டு செயல் சார்ந்த சமூகக் கூறுகளை முன்னெடுக்கும் நபர்கள் திட்டமிட்டு கொல்லப்படுகின்றனர் அல்லது அவர்களுக்கு என்ன நடக்கின்றது என்பது யாருக்கும் தெரியாத ஒரு விடையமாக மாறி நிற்கின்றது. சமூக உணர்வுள்ள மனிதர்களை நாம் இழக்கின்றோம். இது புலியா அல்லது இல்லையா என்பது அல்ல எம் பிரச்சனை, சமூகத்தின் முன்னோடிகளை சமூகம் இழக்கின்றது. இதற்கு எதிரான அனைவரையும் ஒன்றிணைக்காமல், இதை எதிர்த்து நாம் போராடவும் வெல்லவும் முடியாது. இதற்கு எம் தவறுகளை இனம் கண்டு, எம்மை ஒன்றுபடுத்த, எம் குறுகிய வாதங்கள் தர்க்கங்கள் காரணமாக உள்ளது. மக்களுக்காக சிந்திப்பவர்கள் மட்டும் தான், இதைச் சுயமாக  தாமாக முன்வந்து களைய முடியும்.

எம்மினத்தின் பண்பாடு, கலாச்சாரம் வரை பேரினவாதத்தின் நுகத்தடியில் அழிகின்றது. மனித உறவுகளின் சிதைவுகள் முதல் சொந்த தனிப்பட்ட நிலத்தை இழத்தல் வரை, மண்ணில் வாழும் தமிழ் மக்களின் "இயல்பு வாழ்வாகி" நிற்கின்றது. தமிழினம் பேரினவாதத்தின் இருப்புப் பிடியில் சிக்கி, இப்படி சிதைவுறுகின்றது. இதற்கேற்ப கூலிக் குழுக்கள் முதல் முதுகெலும்பில்லாத அரசியல் தலைமைகளையே, தமிழ் தரப்பின் பிரதிநிதிகளாக அரசு உயிர் வாழ அனுமதித்துள்ளது. இந்த நிலையை உருவாக்கியவர்கள் நாங்கள் தான் என்ற பொறுப்புணர்வுடன், நாம் எத்தனை பேர் சுயவிமர்சனத்துடன் சிந்திக்கின்றோம். இதை நாங்கள் எப்படி உருவாக்கினோம் என்பதை நாங்களாகத் திரும்பிப் பார்த்தால் தான், எதிர்காலத்திலாவது மாற்றத்தை சரியாக நகர்த்த முடியும்.

இன்று மண்ணில் வாழும் தமிழ் மக்கள், தம்மைத்தாம் ஒருங்கிணைக்கவோ, தமக்கான ஒரு தலைமையை உருவாக்கவோ முடியாத வண்ணம், அரச பாசிசம் அவர்கள்

மேல் ஏவப்பட்டுள்ளது.

இந்த உண்மையைச் சுற்றியே புலத்தின் அரசியல் கட்டமைக்கப்படுகின்றது. ஆனால் நாம் எதையும், திரும்பிப் பார்க்கவில்லை. புலிகளின் தவறுகள் ஒருபுறம். குற்றத்தை அவர்கள் மேல் மட்டும் நாம் சொல்லமுடியாது. இதன் பின் கண்ணை மூடிக்கொண்டு நின்ற எம் தவறுகள், எமக்கு முன் முதன்மையானது. இதை நாம் திருத்தியுள்ளோமா!? குறைந்தது இதை நாம் திரும்பிப் பார்த்திருக்கின்றோமா!? இல்லை. இந்த நிலையில் எப்படி மீளவும் எம்மால், சரியாக இதை வழிநடத்த முடியும். மண்ணில் புலிகள் செயல்பாடு முற்றாக இல்லாது அழிந்து போன நிலையில், புலத்தில் புலிகளின் செயல்பாடு இதைச் சுற்றி இயங்குகின்றது. இது தன்னைத்தான் மீளாய்வு செய்தா!?

புலத்தின் புலிச் செயல்பாடு தனது முந்தைய அதிகாரம், பணப்பலம், அமைப்பு வடிவம் கொண்டு, மண்ணின் அரசியல் நிகழ்வுகள் மீது தம் எதிர்வினையை நடத்துகின்றனர். இன்றைய நிலையில், அவர்கள் மட்டும்தான், அதை செய்ய முடிகின்றது. ஆனால் இதை அவர்கள் தொடரமுடியாது. அவர்களின் அகக் காரணங்களில் மையமாக இருப்பது அவர்களிடம் பணமும், அதை சுற்றி இயங்கும் குறுகிய அரசியலும்தான். பினாமி சொத்தையும், பணத்தையும் தமிழ் மக்களின் பொது நிதியமாக மாற்றும்படி கூறினோம். அரசியல் நேர்மைக்கும், நோக்கத்துக்கும் இது அடிப்படையானது, அவசியமானது. பலருக்கு இஸ்ரேலியரைச் சொல்லி சொன்னால் பிடிக்கும் என்பதால், இப்படி பொது நிதியம் யூத சமூகம் சார்ந்து இருந்துள்ளது. நேர்மையான அனைத்து நோக்கத்துக்கும், இது அவசியமானது. இல்லாது போனால், பணத்துக்கான காட்டிக்கொடுப்பு ஒரு அரசியலாகிவிடும். பிரபாகரனின் மரணத்தில் கூட, இந்தப் பணம் முக்கிய பங்காற்றியுள்ளது.

இங்கு புறக் காரணமாக இருப்பது, தொடர்ந்து புலிகளாக இருப்பது. புலிகள் மக்களுக்கு இழைத்த தவறுகளை ஒத்துக் கொண்டு, மக்களுக்காக மக்களுடன் மீளவும் நிற்க மறுப்பதுதான். உண்மையில் இதை செய்யாத வரை, மக்களுக்கு நடக்கும் அநியாயத்துக்கு எதிரான போராட்டம் என்பது, கடந்தகால போராட்டத்தின் தோல்வியையே மீளவும் பரிசளிக்கும்.

இன்று புலத்து புலிச் செயல்பாட்டை, பேரினவாதத்தின் செயல்பாடுகள்தான் தக்க வைக்கின்றது. இதுவல்லாத புலத்து புலிகளின் சொந்த அரசியல்ல. புலத்து புலிகளிடம், மக்கள் நலன் சார்ந்த எந்த அரசியலும் அதனிடமில்லை. பேரினவாதம் தன் நடத்தையால், புலத்து புலிக்குரிய அரசியல் செயல்பாட்டை வழங்குகின்றது. புலித்து புலிக்கு மக்கள் சார்ந்த எந்த சொந்த அரசியலும் கிடையாது. இப்படி எழுந்தமானமான தன்னிச்சையான போராட்டம்.

மண்ணின் பேரினவாதம் மக்களை ஒடுக்குகின்றது என்ற உண்மையை

அடிப்படையாக கொண்டு, புலத்து புலிகள் தாம் அதற்கு எதிராக போராடுவதாக கூறுகின்றனர். முன்னைய அதிகார பலத்தைக் கொண்டது, இந்தப் போராட்டம். அது ஏகாதிபத்தியங்களுடன் சேர்ந்து, அதன் சொந்த முரண்பாட்டைச் சார்ந்து நின்று தீர்க்க முடியும் என்ற, நம்பிக்கையைத்தான் மீளவும் இதன் மூலம் ஊட்ட முனைகின்றனர்.

இப்படித்தான் தங்கள் தலைவரையே, ஏகாதிபத்திய முரண்பாட்டை பயன்படுத்துவதாக கூறி அவர்களின் துணையுடன் பலி கொடுத்தனர். ஏன் இப்படியேதான் முழு இயக்கமும் இப்படி அழிக்கப்பட்டது. தியாகங்கள் ஏகாதிபத்திய முரண்பாட்டுக்குள் விலை பேசப்பட்டது. இதை எந்த விமர்சனம் சுயவிமர்சனமும் இன்றி, அதையே மீளவும் முன்வைக்கின்றனர்.

இதை ஏகாதிபத்தியம் தன் சொந்த முரண்பாட்டு நலனுக்குத் தான் பயன்படுத்தும். இது தமிழரின் நலனுக்காக ஒருக்காலும் செயல்படாது. உண்மையில் மண்ணின் மக்களின் நலனை விரும்பும் எவரும், மக்களைச் சார்ந்து நின்று எப்படி செயல்பட முடியும் என்று சிந்திப்பதை தவிர, வேறு சரியான மாற்று அரசியல் வழி எதுவும் கிடையாது. புலத்து மக்களையும், மண்ணின் மக்களையும் சார்ந்து நின்று செயல்படும் அரசியல் வடிவங்களை நோக்கி, உங்கள் கவனத்தை திருப்புவது அவசியமானது. புலத்துப் புலிகளை இதைச் செய்யும்படி, நிர்ப்பந்தியுங்கள். இதுதான் நீங்கள் நேசிக்கும் மக்களுக்கு செய்யக் கூடிய, ஓரேயொரு சரியான அரசியல் வடிவமாகும்.

பி.இரயாகரன்
06.09.2009

## அரசியல் ரீதியாக தோற்ற புலிகள் இராணுவ ரீதியாகவும் தோற்கின்றனரே ஏன்?

யுத்தத்தில் புலிகளுக்கு ஏற்படும் தோல்விகளுக்கு காரணம் என்ன? இது அரசியல் ரீதியானதே ஒழிய இராணுவ ரீதியானதல்ல. ஆனால் இதைக் காண மறுப்பதும், இதை இராணுவ ரீதியாக காண்பதும் புலி மற்றும் புலியல்லாத புலியெதிர்ப்பு தரப்பின் இன்றைய கண்ணோட்டமாகவே உள்ளது.

ஆயிரம் ஆயிரம் இளைஞர்களை பலிகொண்ட யுத்தம், இன்னமும் ஆயிரமாயிரம் இளைஞர்களை பலியிடத் தயாரான யுத்தம், பல பத்தாயிரம் மக்களை அழித்தொழித்துள்ளது. மக்கள் தமது வாழ்வை இழந்து, சொத்து சுகத்தை இழந்து அனாதையாகின்றனர். இதுவரை மக்களுக்கு புலிகள் எதையும் புதிதாக பெற்றுக்கொடுத்தது கிடையாது. இருந்ததை அழித்ததுக்கு அப்பால், எதையும் புலிகள் சாதிக்கவில்லை, சாதிக்கப்போவதில்லை. ஒவ்வொரு தமிழனும் புலிகள் எதை எமக்கு பெற்றுத் தந்தனர் என்று சுயவிசாரணை செய்தால், அவர்கள்

இருந்ததை அழித்ததை தவிர, தம்மிடம் புடுங்கியதை தவிர வேறு எதுவும் இல்லை என்ற உண்மையைக் காண்பான். மக்களின் உழைப்பைச் சூறையாடி, ஒரு சில பத்தாயிரம் பேர் உழைப்பின்றி மக்களின் உழைப்பில் சொகுசாக வாழ்கின்றதை மக்கள் காண்பர்.

இந்த அவலமான துயரமான நிலையில், இந்த யுத்தம் சாதிக்கப் போவது எதுவுமில்லை. இன்று இந்த யுத்தம் தோல்வி கண்டுவரும் நிலையில், ஒரு இனத்தின் மொத்த அழிவும் நிதர்சனமாகியுள்ளது. புலிகள் ஒருபுறமும், மறுபக்கமாக புலியெதிர்ப்பு ஓநாய்க் கூட்டமும், மக்களை தமது எடுபிடிகளாக்கி, தாம் நினைத்த தமது மக்கள் விரோத வக்கிரங்களை தமிழ் மக்களின் தீர்வாக காட்டுகின்றனர்.

இந்த நிலையில் புலிகள் என்றுமேயில்லாத அளவுக்கு இராணுவ ரீதியாக தோற்றுக் கொண்டிருக்கின்றனர். பேச்சவார்த்தை என்ற அரசியல் மேசையில் தோற்றவர்கள், அதைத் தொடர்ந்து இன்று இராணுவ அரங்கில் தோற்பது தொடங்கியுள்ளது. அரசியல் மேசையில் தோற்று வந்த ஒரு நிலையில், வெல்வதற்காக அவசரமாகவே ஒரு தலைப்பட்சமாக வலிந்த ஒரு இராணுவ அரங்கைத் தொடங்கினர்.

இப்படி உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படாத ஒரு யுத்தத்ததை நோக்கி அவசரமாக ஓடிய புலிகள், தொடர்ச்சியாக அதில் தோற்றுப் போகின்றனர். இந்த நிலைமைக்கான காரணம் என்ன? இந்தக் கேள்வி பலருக்கு புதிரானதாக உள்ளது. புலிகளுக்கு இதுவே அதிர்ச்சிகரமானதாக மாறிவிட்டது. எங்கும் விடை தெரியாத, விடை காண முடியாத புதிராகி நிற்கின்றது. புலிகளின் தலைவர் பிரபாகரன் சென்ற மாவீரர் தினச்செய்தியில், மீண்டும் யுத்தம் என்ற பிரகடனத்தை வெளியிட்டார். இதன் தொடர்ச்சியாக மக்களின் பெயரில் தொடங்கிய தாக்குதல்கள், இன்று முட்டுச் சந்திக்கு வந்துள்ளது. இராணுவ கட்டுப்பாட்டு பிரதேசங்களின் உள்ளான தாக்குதலை நடத்தமுடியாத நிலை உருவாகியுள்ளது. புலிகளின் மக்கள், மக்கள்படை அழித்தொழிக்கப்பட்டுவிட்டனர் அல்லது அவர்கள் அழித்தொழிக்கப்படுகின்றனர். அண்மைக்காலமாக நடக்கும் பெரும் எண்ணிக்கையிலான வகைதொகை தெரியாத கொலைகளில் பெரும்பாலானவை, புலிகளுக்கு எதிராக நடத்தப்படுகின்றது. அமைதி சமாதானம் காலத்தில், புலிகள் இதே போன்று வகைதொகை தெரியாது கொலைகளைச் செய்தனர் என்றால், இன்று அதே உத்தியை யுத்த சூழலுக்குள் பேரினவாதம் செய்து முடிக்கின்றது. நிலைமை தலைகீழாக மாறியுள்ளது. இனம் தெரியாதவர் என்ற போர்வையில், மனித உரிமையை மதிக்க மறுக்கின்ற புலிகளின் கடந்தகால கொலைகாரப் போக்கினால், இன்றைய கொலைகள் யாரும் கண்டு கொள்ளாத ஒரு அசமந்தமான போக்கில் இக் கொலைகள் ஊக்குவிக்கப்படுகின்றது. இப்படி புலிகள் அல்லாத இராணுவ பிரதேசங்களில், புலியின் இராணுவ செயல்பாட்டை புலியின் பாணியிலேயே இராணுவம் செயலற்றதாக்கியுள்ளது.

இந்த நிலையில் அமைதி சமாதானம் பேசியபடி புலிகள் கையாண்ட இராணுவ

தாக்குதல்கள் செயலற்று முடங்கிப் போன நிலையில், எல்லைகளில் மோதலை வலிந்து தொடுப்பதைத் தவிர, வேறு இராணுவ மார்க்கம் புலிகளுக்கு இருக்கவில்லை. அதையும் அவர்கள் வலிந்து தொடங்கினர். ஆனால் எல்லாம் பாரிய இழப்புடன் கூடிய தோல்விகளுக்கு அது இட்டுச் சென்றுள்ளது. மிகப்பெரிய படையை வைத்திருந்த புலிகள், நினைத்த இடத்தில் நினைத்தவரைக் கொல்லக் கூடிய ஒரு கொலைகார அடியாள் கும்பலைக் கொண்டிருந்தது. அத்துடன் விரும்பிய இடத்தில் விரும்பியவாறு ஏன் எதற்கென்ற கேள்வியின்றி தற்கொலை மூலம் தாக்குதலை நடத்தக் கூடிய விசுவாசிகளைக் கொண்டிருந்த புலிகள், நினைத்த இடத்தில் நினைத்த தாக்குதலை நடத்தும் வல்லமையைக் கொண்டிருந்த புலிகள் தொடர்ச்சியாக மண்ணைக் கவ்வுகின்றனர். மக்களை உருட்டி மிரட்டி ஏமாற்றி பலவழிகளில் மக்களிடம் திருடும் கோடிக்கான பணத்தில், தமது சொந்த சுகபோகத்தின் தேவை தவிர, மீதி முழுவதையும் இந்த இராணுவதுறைக்கே கொட்டுகின்றனர். அள்ளி வழங்கும் இலஞ்சம், தமது நோக்கை அடைய இலட்சக்கணக்கில் செலவு செய்யும் புலிகளின் இராணுவ உத்திகள் எல்லாம் தவிடுபொடியாகின்றன.

கடந்தகாலத்தில் இது போன்ற புலிப்பாணி இராணுவ வெற்றிகள் அனைத்தும் இன்று புஸ்வாணமாகின்றது. இது பலருக்கு அதிர்ச்சியாக உள்ளது. வழமை போல் தாக்குதல் தொடங்கியவுடன், செய்திகளை தகவல்களை புணர்ந்து புனைந்து போட்டவாகள், அதிர்ந்து போய் நிற்கின்றனர். பலதரம் அவை புஸ்வாணமாகி அம்பலமாகியுள்ளது. பலரை மௌனமாகி உறையச்செய்துள்ளது. புலிச் செய்தித்தளங்கள் நம்பிக்கை இழந்து சோர்வடைந்து வருகின்றது. புலிகளின் இராணுவ தோல்விக்கான காரணம் என்ன என்பது, பேரினவாதத்துக்கு புரியாத புதிராகவே உள்ளது. இதன் சூக்குமம் பிடிபடவே மறுக்கின்றது. புலிகளை வெல்லும் நிலைக்கு, இராணுவத்தின் பலம் மற்றும் கட்டமைப்பு மாற்றிவிட்டதாக சிலர் கருத்துரைக்கின்றனர். இதன் விளைவாக யுத்தவெறி கோசத்துடன், பேரினவாதம் கொக்கரிக்கின்றது. புலிகள் பின்வாங்கி பதுங்கி தப்ப முனைகின்றனர். இப்படி நிலைமைகள் தலைகீழாகிப் போனது.

உண்மையில் என்ன நடந்தது, என்ன நடக்கின்றது. இதை புலிகளாலும் புரிந்துகொள்ள முடியவில்லை. இலங்கை அரசியல் மீது கருத்துரைக்கும் யாராலும் இதை புரிந்துகொள்ள முடியாதுள்ளது. அந்தளவுக்கு அரசியலில் போக்கை தலைமை தாங்குவோருக்கும் மக்களுக்கும் இடையிலான உறவை புரிந்துகொள்ளும் அளவுக்கு, யாரும் மக்கள் நலனை அடிப்படையாக கொண்டு யாரும் இதை ஆராய்வதில்லை. இந்த நிலையில் இதை மீள மாற்றி அமைக்கும் வகையில், புலிகளின் இருப்பு அதை அனுமதிக்கவில்லை. புலிகளின் புலித் தேசிய சிதைவு இயல்பாக பல தளத்தில் தொடங்கிவிட்டது. புலிகளின் இராணுவ இருப்பும் அதை தடுக்கமுடியாது. இதற்கான அடிப்படைக் காரணம் என்ன? 1. புலிகளுக்கும் மக்களுக்கும் இடையிலான உறவு

2. தலைமைக்கும் அதன் கீழ்மட்ட உறுப்பினருக்குமான உறவு

3. முன்னனி தளபதிமாருக்கும் தலைமைக்குமான உறவு

4. தலைமைக்கும் மொத்த சமூகத்துக்குமான உறவு

இந்த உறவு சமாதானம் அமைதிக் காலத்தில் மெதுவாக, ஆனால் சிறுக்கச் சிறுக்க பலத்த மாறுதலுக்குள்ளாகியுள்ளது. இந்த இடைவெளி பலமானதாகவும, ஆழமானதாகியும் விட்டது. புலிக்குள் போராடும் உளவியல் பலம் முற்றாக சிதைந்து போய்விட்டது. இவைதான் தோல்விக்கான முக்கியமான அடிப்படையான காரணமாகும். இதை புலிகள் மாற்றவோ திருத்தவோ இனி முடியாது.

ஆயிரம் ஆயிரம் படைகளையும், நவீன இராணுவ உபகரணங்களையும் கொண்ட புலிகளின் இராணுவ பலம் மட்டும், யுத்தத்தையோ ஏன் ஒரு வெற்றிகரமான நகர்வையோ தீர்மானிப்பதில்லை. இதை புலிகளும், வலதுசாரிய கும்பல்களும் அங்கீகரிப்பதில்லை. இராணுவ வாதத்திற்குள் மல்லாக்க குப்புறவே வீழ்கின்றனர். புலிகளின் நவீன இராணுவ படைக்கு பின்னால் உள்ள பல ஆயிரம் இளைஞர்களின் போராடும் உணர்வுகளின் மட்டம் முற்றாகவே சிதைந்துவிட்டது. அவர்கள் போராட முடியாத அளவுக்கு உள்ள பாரிய உளவியல் நெருக்கடியே, அவர்களை இயல்பாக யுத்தத்தில் தோற்கடிக்கின்றது. இதை அணைபோட்டு தடுக்கமுடியாது. இதுதான் தோல்விக்கான குறிப்பான பிரதானமான அடிப்படைக் காரணமாகவுள்ளது.

1. புலிகளில் போராடும் இளைஞர்களின் அரசியல் மட்டம் முற்றாக சிதைந்துவிட்டது. அரசியலில் ஞானசூனியமாகி ஒரு கூலி கும்பலுக்குரிய மனோபாவத்தை பெற்றுவிட்டது.

2. புலி அமைப்பு, புலித் தலைமை பற்றி கொண்டிருந்த கண்ணோட்டங்கள் முற்றாக சிதைந்து, அதை வெளியில் சொல்லமுடியாத பாரிய உளவியல் நெருக்கடிகுள்ளாக்கிவிட்டது. எல்லாவிதமான நம்பிக்கைகளும் விசுவாசங்களும் அணிகளிடையே படிப்படியாக இல்லாது போகின்றது. அரசியல் நோக்கற்று இழிந்து செல்லும் சுயநல போக்கு கொண்ட புலிகளின் பொருளாதாரக் கட்டமைப்பு, எல்லாவிதத்திலும் இயல்பான போர்க்குணாம்சத்தை இல்லாதொழிக்கின்றது. புலிகளின் ஒவ்வொரு உறுப்பினரும் அமைதிக் காலத்தில், பலவற்றை சொந்த இயக்க வாழ்வியல் ஊடாக தாமாகவே தெரிந்து கொண்டார்கள். இதன் மூலம் சொந்த சுயநலத் தலைமையை, அதன் கொள்கையற்ற போக்கை, தமது வாழ்வியல் ஊடாகவே எதிர்மறையில் கற்றுக் கொண்டார்கள். தம்மைத் தலைமை தாங்கி நிற்கும் மாற்றவே முடியாத சொந்த தலைமையை, தனது மேலதிகாரியையும் நன்கு ஆழமாக உணாந்துபட்டு தெரிந்து கொண்டார்கள். இதைவிட வெளியில் இருந்து அவர்களின் விருப்பத்துக்கு மாறாக கடத்திவரப்பட்ட,

ஆயிரக்கணக்கானவர்களுடனான உறவு, அவர்கள் வெளிப்படையான புலி மீதான அதிருப்திகள் இதை மேலும் ஆழமாக்கியது. இவர்களுடனான தொடர்புகள், அச்சமூட்டும் வகையில் அவர்களையே மேலும் மௌனமாக்கியது. ஒரு பாரிய இடைவெளியை உருவாக்கி வந்துள்ளது. பரஸ்பரம் சந்தேகத்தை மேலும் ஆழமாக்கி அதிகரிக்க வைத்தது. வெளிவே'த்துடன் கூடிய போலியான ஒரு வாழ்வியல் முறையே, தலைமைக்கும் உறுப்புக்கும் இடையிலான உயிரான உறவாகியது. இது அமைப்பின் எல்லா மட்டத்திலும், எல்லா உறவிலும், இந்த போலித்தனமான நடிப்பே அவசியமான நிபந்தனையாகிவிட்டது. இந்த அதிருப்தி வெளிப்படுத்தும் உணர்வுகள், அவர்களின் சொந்த போர்க்குணாம்சத்தை சிறுகச்சிறுக அரித்து சிதைத்து தின்று வருகின்றது.

இதைவிட ஆடம்பரமாக சென்ற புலம்பெயர் வாழ்வியல் முறை, அதையொத்ததும் அதை விட வக்கிரத்தை அடிப்படையாக கொண்டதுமான யாழ் மேட்டுக்குடிகளின் ஆடம்பர வாழ்க்கை, அனைத்தும் சுயநலத்தை அடிப்படையாக கொண்டது. இது அங்கு போராடும் இளைஞன் முன் தான் ஏன் போராட வேண்டும் என்ற எதிர்மறையான கேள்வியை எழுப்பிவிடுகின்றது. இதை சொர்க்கமாக கருதுகின்ற இயல்பான உணர்வு, புலியினுள் ஆழமாகி ஒரு அரசியல் சிதைவை உருவாக்கிவிடுகின்றது.

இதற்கு ஏற்ற உறுதுணையாக சுயநலத்தை அடிப்படையாக கொண்ட புலிகளின் சமூக பொருளாதார கொள்கை, எதிர்மறையில் அவர்களுக்குள்ளும் அது செயல்படுகின்றது. சுயநலமற்ற சிந்தனைப் போக்கை, தியாக மனப்பான்மையை அது இயல்பாக மறுத்தலித்து விடுகின்றது. அமைதி சமாதான காலத்தில் இதுவே சமூக மேனிலைக்கு வந்தது. புலிக்குள் ஆழமான அதிருப்தியாக மாறிவிடுகின்றது. ஒவ்வொருவரும் சுயநலம் கொண்ட பொருளாதார அமைப்பில் உறுப்பினர் என்ற வகையில், தியாக மனப்பான்மை என்பது அவர்கள் முன்பே கேள்விக்குள்ளாகின்றது. அத்துடன் யுத்தமற்ற இக்காலகட்டத்தில், இதற்குள் வாழும் புலித் தலைமையில் சகல பூர்சுவா அற்பத்தனங்களும் அம்பலமாக்கிவிடுகின்றது.

1. தலைமையின் சொந்த ஆடம்பரமான வாழ்க்கைகள்

2. தலைமைகளின் இணக்கமற்ற அதிகாரபோக்கும், அதிகார வெறியும்

3. தான்தோன்றித்தனமான வாழ்க்கையும், செயல்களும்

4. சக மனிதனை மனிதனாகவே மதிக்கத் தவறுகின்ற வக்கிரங்கள்

5. சமூக ஒழுங்குகளை மீறியதும், அற்பத்தனமாக வாழும் இரகசிய பகிரங்க வாழ்க்கை முறைகள்.

இப்படி உள்ள ஒரு இயக்கத்தை, அந்த சூழலை கேள்வி கேட்க முடியாது. இதற்கு கீழ் உள்ளவன் தொடங்கி அனைவரும் அடங்கிப் போகும் வண்ணம், பீதியை அடிப்படையாக கொண்ட நிலமை. சக மனிதனை மனிதனாக மதிக்க தவறுகின்ற நிலையில், அவர்களிடையே உரையாடல்கள் எதுவுமற்ற போக்கில், அரசியல் உரையாடல்கள் கூட எதுவும் இல்லாத நிலையே புலிகளின் எதார்த்தமான பாசிச இருப்பாக நீடிக்கின்றது. தனிமையும், பீதியும் கலந்த உணர்வே, ஒவ்வொரு உறுப்பினரதும் ஆன்மாவுகுள்ளான உணர்வாகியது. அச்சம் கலந்த பீதி சார்ந்த மனவுணர்வு, கண்முன்னால் காணும் கொடூரமான சித்திரவதைகள், இதை செய்யும் லும்பன் வாழ்வை ஆதாரமாக கொண்ட கொலைகார நாசகாரக் கும்பல்கள், எப்போதும் எங்கும் கண்காணிப்படும் அவலம், நாம் எதற்காக ஏன் போராடுகின்றோம் என்று தெரியாத திரிசங்கடமான நிலைமை, அவர்களின் அனைத்துவிதமான தியாக மனப்பான்மையை போர்க்குணாம்சத்தை இல்லாதாக்கிவிட்டது.

இப்படி எந்தப் பிரச்சனையை பற்றியும் யாரும் வாய் திறந்து பேசமுடியாத நிலைமை. பேசினால் சித்திரவதைக் கூடங்கள், மரண தண்டனைகள் சாதாரணமான விடையமாக புலிக்குள்ளும் உள்ளது. இது புலி இயக்கவிதியாகும். அதிருப்திகளும், கேள்விகளும், சந்தேகங்களும் மனதுக்குள் குடைந்து அதை அரித்து, உளவியல் சிக்கலுக்குள் சிக்கிவிட்டது. இது புலிகள் அமைப்பு முழுக்க உருவாகிவிட்ட பொது நிலையாகும். இந்த உளவியல் சிக்கல், போராட்ட உணர்வை மழுங்கடித்து அதை இல்லாதாக்கிவிடுகின்றது.

கடந்தகாலத்தில் போராடும் ஆற்றல் கொண்டு காணப்பட்ட உளவியல் மட்டம், யுத்தத்தின் தேவை சார்ந்த அரசியல் என்பன அவர்களை போராடவைத்தது. அமைதிக்காலம் அதை முற்றாக சிதைத்து, அதை அறவே இல்லாததாக்கிவிட்டது. புலிகளின் அரசியல் நோக்கம் என்ன? தமிழ் மக்களுக்கு அவர்கள் எதை எப்படி பெற்றுத்தரப் போகின்றார்கள் என்ற கேள்வி சார்ந்த அரசியல் எதுவும் புலி உறுப்பினரிடையே விவாதத்துக்குரிய ஒரு அரசியலாக இருப்பதில்லை. சுத்த சூனியம், எல்லாம் தலைவர் பார்த்துக் கொள்வார் என்ற நம்பிக்கையை அடிப்படையாக கொண்ட அரசியல் உணர்வு, கடந்தகாலம் போல் நிகழ்காலத்தில் நம்பிக்கை எதையும் ஊட்டவில்லை. பிரபாகரனுக்கு அடுத்த மட்டத்தில் இருக்கக் கூடிய தலைவர்களின் தலைவிதி கூட இதுதான். எதையும் சுயமாக சித்திக்கவோ, சொல்லவோ, செயலாற்றவோ முடியாத நிலை, மொத்த அமைப்பையும் நம்பிக்கையீனத்தின் விளிம்புக்கு இட்டுச் சென்றுள்ளது.

வலிந்தே திணித்த கருணாவின் பிளவு, இதை மேலும் இரண்டு தளத்தில் ஆழமாக்கியது.

1. தவிர்த்து இருக்கக் கூடிய கருணாவின் பிளவு, ஆழமானதாக மீள முடியாத

ஒரு பிரிவாகியது. இது புலிகளை இரண்டாக்கியது. கருணா வெளிச் சென்றாலும், புலியினுள் இன்னமும் பிளவு உயிருடன் காணப்படுகின்றது. 2. கருணா பிளவைக் கையாண்ட முறையும், கையாண்டு வரும் நடத்தை நெறிகளும், புலியின் கட்டமைப்பையே சிறுக்கச்சிறுக சிதறடித்துக் கொண்டிருக்கின்றது. அதாவது இது சூக்குமமாக, புலியின் சொந்த பாசிசத்தின் வீதியூடாக நடக்கின்றது. இயக்கத்தின் உள்ளார்ந்த இயல்புத் தன்மையையும், அதன் உள்ளார்ந்த விதியையும் நெருக்கடிக்குள்ளாக்கியதன் மூலம், அசாதாரணமான நிலை புலிக்குள் உருவாகியுள்ளது. பாசிசத்தினுள்ளும் காணப்பட்ட சுயாதீனமான சிந்தனைகள், அது சார்ந்த செயல்கள் அனைத்தையும் சந்தேகிக்கின்ற ஒரு போக்கு, புலியில் காணப்பட்ட உயிரோட்டத்தையும் இல்லாதாக்கியுள்ளது. அனைத்தும் தன்னியல்பாக முடமாக்கப்பட்டது. எல்லாவற்றையும் எதிராகவும், எதிரியாக கருதியதன் மூலம், கீழ் இருந்து மேல் வரை போலியான சம்பிரதாயமான விசுவாசமான பிரகடனங்களே உயர்ந்த புலி அரசியலாகியது. கேள்வியின்றிய வழிபாடே விசுவாசமாகியது.

இப்படி எங்கும் எதிலும் புலி தனக்குத்தானே குழிதோண்டியபடி தான், தனது சொந்த புதைக்குழிக்குள் அடிக்கடி புதைந்து மிதக்கின்றனர். கருணா விவகாரம் ஏற்படுத்திய விளைவு, இயக்கம் முழுக்க உள்ளார்ந்த அரசியல் விதியாகிவிட்டது. ஒவ்வொரு தளபதியும் தன்னைச் சுற்றி ஒரு வேலியிட்ட படி, பிரபாகரன் பெயரைச் கூறியபடி போலியாக பொம்மையாக அசைய முனைகின்றனர்.

எங்கும் ஒரு அசமந்தமான, அசாத்தியமான இனம் காணமுடியாத சூழல். மீட்சிக்கான பாதையோ, அதை கண்டறியும் பொதுச் சூழலே கிடையாது. தலைமை தனது தற்காப்பு என்ற எல்லைக்குள் முடங்கி நிற்கின்றது. பேரினவாதம் மட்டுமல்ல, சொந்த இயக்கத்தினுள்ளும் தற்காப்பை கோருகின்ற நிலைமையில் தலைமை உள்ளது. சொந்த அணிகளுக்கும் தலைமைக்கும் இடையில் உள்ள இடைவெளி அகன்று வருகின்றது. இது பல மட்டத்தில் ஒன்றுக்கு ஒன்று எதிரான போக்கில் வளர்ச்சியுறுகின்றது. பரஸ்பரம் நம்பிக்கையின்மை, பரஸ்பரம் விசுவாசமின்மை, மூடிமறைக்கப்பட்ட சந்தர்ப்பவாதம், இது புலிகளின் மொத்த இயக்கத்தின் சொந்த விதியாகிவிட்டது. இது உயிரோட்டமுள்ள தியாக மனப்பான்மை கொண்ட அனைத்துச் செயல்பாட்டை மறுதலித்துவிடுகின்றது. இயல்பாக இது தொடர்ச்சியான தோல்விக்கான முழுமையான சமூக அடிப்படையை உருவாக்கிவிட்டது. புலிகளின் சொந்த அரசியல் இராணுவ ரீதியான கட்டமைப்பு தோற்கடிக்கப்படுவது தவிர்க்க முடியாதாக்கியுள்ளது. முன்பை விடவும் இது வேகமாக அரங்கேறுவதை துரிதமாக்கியுள்ளது.

பி.இரயாகரன்
23.09.2006